# நெல்லை வட்டார வழக்குச் சொல் தொகை

வெள் உவன்



CPL 785394

# நெல்லை வட்டார வழக்குச் சொல் தொகை

வெள் உவன்

தமிழினி

# நெல்லை வட்டார வழக்குச் சொல் தொகை

அகராதி

வெள் உவன்


தமிழினி

63, நாச்சியம்மை நகர், சேலவாயல், சென்னை - 51.

இமெயில்: tamizhininool@yahoo.co.in

போன்: +91 93442 90920

விற்பனையகம்:

25ஏ, தரைத்தளம், ஸ்பென்சர் பிளாசா முதல் பகுதி,

769, அண்ணா சாலை, சென்னை - 2.

போன்: 044 - 2849 0027

முதல்பதிப்பு: டிசம்பர் 2012



© வெள் உவன்



நூல் வடிவமைப்பு: மணிகண்டன்

அச்சாக்கம்: பாவை பிரிண்டர்ஸ், சென்னை - 14.

விலை ரூ.80

கவிதையாய்ப் பிறந்து
கானல் நீராகிப்போன
அன்பு கவிதாவின்
நினைவுக்கு...

# முன்னுரை

மொழியின் அசைவியக்கம் அதன் வட்டார வழக்குகளின் செழுமையில் தான் உணரப்படுகிறது. வழக்குச் சொற்களின் எண்ணிக்கை பெருகப் பெருக ஒரு மொழியின் உயிர்ப்பு வீரியமடைகிறது. மொழியியலின் ஒரு பிரிவான சமூக மொழியியல், இதன் பொருட்டே வட்டார வழக்குகளை மிக இன்றியமையாத மொழியியல் காரணியாகக் கருதி, ஒவ்வொரு மொழிக்குள்ளும் கிளர்ந்தெழக்கூடிய வழக்குச் சொற்களைக் கவனமாக அடையாளம் கண்டு ஆய்வு செய்து வருகிறது.

பேச்சும், எழுத்தும் மொழியின் வெளிப்பாட்டு வடிவங்கள் என்றாலும், 'பேச்சு' எழுத்தைக் காட்டிலும் தீவிரமான இயங்குதளங்களை உடையது. எழுத்து, மொழியை வரையறைகளுக்குள்ளும் சட்டகங்களுக்குள்ளும் சிறைப்பிடித்து விட முயற்சிக்கும் வேளையில் பேச்சு, மொழியை மென்மேலும் வளர்த்தெடுப்பதிலும் சிக்கலுடையதாக மாற்றுவதிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

நவீன மொழியியலின் தந்தை என்று அறியப்படுகிற பெர்டினான் டி சசூர், ஒவ்வொரு தனிநபரும் மொழியோடு கொள்ளக்கூடிய தொடர்புகளை விவாதிக்கையில் Langue என்றும் Parole என்றும் அறிமுகப்படுத்துகிற கருத்தாக்கங்களில் 'Parole' என்ற தனிநபர் பேச்சு தான் மொழியின் எல்லைகளையும் சாத்தியப்பாடுகளையும் தொடர்ச்சியாக மறுகட்டமைப்பு செய்துகொண்டிருக்கிறது என்கிறார். பேச்சு, மொழியிலிருந்து தான் உருவாகிறது என்றாலும் அது தனது இருப்பின் மூலம் மொழியை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறது.

மொழியின் தனித்துவம் என்று சொல்லப்படும் 'ஒரு பொருட் பன்மொழியும்' 'ஒரு மொழி பல்பொருளும்' அவற்றின் பேச்சு செயலாலேயே சத்தியமாகிறது என்று சொல்ல வேண்டும். தொடர்ச்சியான பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் சொற்கள், மொழியின் வட்டாரப் பன்மையால் பொருண்மைத் தளத்தில் கிளைத்துச் செழிப்பதும் ஒலித் தளத்தில் உருமாற்றம் கொள்வதும் புதிய சொற்கள் உருவாகுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருகின்றன. இன்னும் ஒரு படி மேலே போய்ச் சொல்லுவதானால் ஒரு சமூகத்தின் பண்பாட்டு விளக்கங்கள் வட்டார வழக்குகள் மூலமே மொழியமைப்பிற்குள் வந்து சேருகின்றன. 'வட்டாரம்' என்ற காரணியே கூட சமூகத்தின் பண்பாட்டுப் பன்மையைச் சுட்டுகிற வேலையைத் தான் செய்துகொண்டிருக்கிறது.

ஒரு மொழியின் செழுமையை அதன் வரலாற்றுடன் தொடர்புபடுத்தி யோசிக்கும் போக்கே இன்றளவும் தமிழில் மேலோங்கியுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒரு மொழி பயன்பாட்டில் உள்ளது என்ற உண்மை மட்டுமே ஒரு மொழியின் தகுதியைச் சுட்டுவதாக அமைந்து விட முடியாது. அந்த மொழி தனக்குள் எத்தனை எத்தனை வழக்குகளைக் கொண்டிருக்கிறது என்பதே அதன் விசாலத்தையும் வீரியத்தையும் காட்டுவதாக அமையும். மொழியின் தளப்பார்வைக்குத்தான் (synchronic) பண்பாட்டுப் பன்மைகளை அடையாளப்படுத்தும் குணம் இருக்கிறது. அந்த வகையில், தமிழின் வட்டார வழக்குகளின் மீது நாம் தீவிரமான கவனத்தை செலுத்த வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு செய்வதன் மூலமே தமிழ் மொழியின் பண்பாட்டுப் பாத்திரத்தை நம்மால் முழுமையாகவும் அறிந்து கொள்ள முடியும்.

நாட்டுப்புறவியல் போன்ற பண்பாட்டு ஆய்வுகளுக்கு வட்டார வழக்குச் சொற்கள் எப்பொழுதுமே நெருக்கமானதாகத்தான் இருந்து வந்துள்ளன. பேச்சின் மூலமே துடிப்போடு இயங்கிக் கொண்டிருக்கும் நாட்டுப்புற வழக்காறுகளை விளங்கிக் கொள்வதில் வழக்குச் சொற்களின் பங்களிப்பு இன்றியமையாதது. எழுத்து வழக்கில் 'நாட்டுபுறக் கதைகள்' என்று ஆய்வாளர்கள் அடையாளப்படுத்துவதை 'காட்டுக்கதைகள்' என்று வட்டார வழக்கில் சொல்வதை நான் கள ஆய்வில் கண்டிருக்கிறேன். அதே போல் 'பழமொழி' என்று சொல்லப்படும் ஆய்வு வகைமைக்கு (analytical category), 'சொலவடை' என்றொரு இனக்குழு வகைமையை (ethnic category) மக்கள் வட்டார வழக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். இன்னும் விடுகதைக்கு 'நொடி', நாடகத் திற்கு 'கூத்து' என்று வட்டார வழக்குகளில் வழங்கப்படும் பொருள் ஏராளம்.

ஒரு வகைமைக்கு (genre or category) ஆய்வுத்தளத்தில் இடப்படும் பெயருக்கு என்னவொரு கருத்தாக்க வலிமை உண்டோ அதே போன்ற வலிமை வட்டார வழக்கில் பயன்படுத்தப்படும் இனக்குழு வகைமைக்கும் உண்டு. மேலதிகமாக இனக்குழு வகைமையே ஒவ்வொரு காரியத்திற்குமான பண்பாட்டுப் பொருண்மையை விளக்குகிறது.

பல்வேறு தருணங்களில் இனக்குழு வகைமைப் பெயர்களே ஆய்வு வகைமையாக ஏற்றுக் கொள்ளப்படுவதும் உண்டு. மானிடவியலில் 'taboo' என்றொரு கருத்தாக்கம் பயன்படுத்தப்படுகிறது. இதனைத் தமிழில் 'விலக்கு' என்று மொழிபெயர்த்திருக்கிறோம். சில பொருட்கள் உணவுப் பட்டியலிலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றன. சில நபர்கள் குறிப்பிட்ட சில காரியங்களிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறார்கள். புனிதமானது என்பதனாலும் அசுத்தமானது என்பதனாலும் 'விலக்கு' தீர்மானிக்கப்படுகிறது. இவ்வாறு தவிர்க்கப்படும் செயலையே மானிடவியலில் 'taboo' என்று அழைக்கின்றனர். Taboo என்ற சொல்

ஆங்கிலமோ அல்லது வேறெந்த ஐரோப்பிய மொழியிலிலிருந்தோ உருவானது அல்ல. இது திராவிட மொழிக் குடும்பத்தை சார்ந்த ஆஸ்திரேலிய பழங்குடியினரிடம் வழக்கிலிருக்கும் ஒரு இனக்குழு வகைமைச் சொல். இவ்வாறு கடைப்பிடிக்கப்படும் விலக்குகளை ஆஸ்திரேலிய பழங்குடிகள் தங்கள் மொழியில் 'tabu' என்று அழைக்கின்றனர்.

வெள் உவன் தொகுத்துள்ள நெல்லை வட்டார வழக்குச் சொற்களின் தொகுப்பை வாசித்துக் கொண்டிருக்கையில் 'தப்பு' என்ற தமிழ்ச் சொல்லுக்கான நெல்லை வட்டாரப் பயன்பாடு ஆச்சரியமான ஒரு செய்தியைச் சொல்லியது. நாம் பொதுவாகக் கருதுவது போல் 'தப்பு' என்ற சொல்லுக்கு 'தவறு என்ற பொருளோ 'இசைக்கருவி' என்ற பொருளோ மட்டும் இருக்க வில்லை. 'தப்பு' என்ற சொல்லை தப்புக்காய், தப்புவிதை, தப்புனது போன்ற பயன்பாடுகளில் 'விதிவிலக்கானது' என்ற பொருளிலும் மக்கள் பயன்படுத்துவதை அறிய முடிந்தது. தப்பிப் பிறந்தது என்றொரு வழக்கை நானே கேட்டிருக்கிறேன். வரிசையாய் குழந்தைகள் இறந்தே பிறக்க, ஒன்று மட்டும் உயிர் பிழைத்து இருந்தது என்றால் அக்குழந்தையைத் தப்பிப்பொறந்தது என்று சொல்லுவார்கள். வழக்கமான இறப்பிலிருந்து விதிவிலக்காய் உயிர் பிழைத்துக் கொண்ட குழந்தை என்று பொருள்.ஆஸ்திரேலிய பழங்குடிகள் 'tabu' என்று சொல்லுவதற்கு நெருக்கமான அர்த்தத்திலேயே நாமும் 'தப்பு' என்ற சொல்லைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். 'விதிவிலக்கு' என்பது தான் பொருள். மாட்டுத்தோலால் செய்யப்பட்ட 'பறை' என்ற இசைக் கருவியைக் கூட 'விதிவிலக்கு' என்ற அர்த்தத்தில் தான் 'தப்பு' என்று அழைக்கிறோமா என்று கூட யாராவது யோசிக்கலாம்.

நான் இங்கு சொல்ல வந்தது வட்டார வழக்குச் சொற்கள் பண்பாட்டின் உள்ளார்ந்த கருத்தாக்கங்களை எவ்வளவு துல்லியமாக வெளிப்படுத்து கின்றன என்பதைத் தான். 'Taboo' என்றொரு மானிடவியல் கருத்தாக்கம் தமிழில் அறிமுகமாகையில் அதற்கு இணையான சொல்லை எழுத்து மரபில் தேடி 'விலக்கு' என்று மொழிபெயர்ப்பதைக் காட்டிலும் பேச்சு வழக்கில் தேடியிருந்தால் 'தப்பு' என்ற இன்னும் வன்மையான சொல்லை நாம் கண்டுபிடித்திருக்க முடியும்.

இதே போல் இன்னொரு உதாரணத்தையும் என்னால் உடனடியாகச் சொல்ல முடியும். நாட்டுப்புற தெய்வ வழிபாட்டில் கூட்டம் கூட்டமாக தெய்வங்கள் வணங்கப்படுவதைப் பார்த்திருக்க முடியும். தமிழகத்தின் மந்திர எண் '18' என்ற எண்ணிக்கையில் தான் தெய்வங்கள் குழுமி யிருக்கும். பதினெட்டுக் கற்களையோ, பூடங்களையோ நாம் இன்றைக் கும் பார்க்கலாம். இந்தத் தெய்வத் தொகுதியை நாட்டுப்புறவியல் 'pantheon of Gods'என்று சொல்லுகிறது. இதனை 'தெய்வக் குழுமம்' அல்லது 'தெய்வத்தொகுப்பு' என்று மொழிபெயர்க்கிறார்கள்.

இந்த தெய்வக்குழுவிற்கு அதாவது 'pantheon of gods'க்கு வட்டார வழக்கில் அற்புதமான பெயர்களை மக்கள் வழங்குகிறார்கள். 'பரிவார தெய்வங்கள்' என்றொரு சொல் வழக்கில் உள்ளது. 'படையணி போல் திரண்டு நிற்பவை' என்று பொருள். கணியான் கூத்து கலைஞர்களிடம் ஒரு வழக்கு உள்ளது. அவர்கள் 'pantheon of Gods' யை 'பந்தி தெய்வங்கள்' என்று அழைக்கிறார்கள். 'பந்தி' என்றால் 'எந்தவிதப் பாகுபாடின்றி ஒரே வரிசையில் அமர்ந்து செயல்படக்கூடியவை' என்று பொருள். 'pantheon of Gods' என்ற கருத்தாக்கத்தை 'தெய்வ தொகுப்பு' என்ற மொழிபெயர்ப்பைக் காட்டிலும் 'பந்தி தெய்வங்கள்' என்ற வட்டார வழக்கே துல்லியமாகச் சுட்டுகிறது என்று நினைக்கிறேன்.

பிற மொழிகளிலுள்ள கலைச்சொற்களை தமிழுக்கு அறிமுகப் படுத்துகையில் 'மொழிபெயர்ப்பது' என்ற ஒரேயொரு யோசனையை மட்டுமே நாம் விடாப்பிடியாய் வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த பிடிவாதம் எழுத்து மரபை மட்டுமே நம்புவதால் தான் நம்மிடம் தோன்றுகிறது. மாறாக, வட்டார வழக்குகளில் அதாவது பண்பாட்டோடு நேரடியான புழக்கத்தில் இருக்கிற பேச்சு வழக்குகளில் நாம் தேடிப் போனால் பிறமொழிச் சொற்களுக்கு இணையான அல்லது அதற்கும் மேம்பட்ட பொருத்தமான சொற்களை நாம் கண்டறிய முடியும்.

வட்டார வழக்குச் சொற்களின் மீது நாம் தீவிரமான கவனத்தை செலுத்த வேண்டியதற்கு மேலுமொரு காரணமும் இருக்கிறது. அது, நமக்கான கருத்தாக்கங்களை உருவாக்கிக் கொள்ளும் முயற்சியோடு தொடர்புடையது. நாட்டுப்புறவியல், மானிடவியல், சமூகவியல் போன்ற பண்பாட்டு ஆய்வுகளில் இன்றளவும் மேற்கத்திய சமூகங்கள் உருவாக்கித் தந்துள்ள கருத்தாக்கங்களின் பின்னனியிலேயே நமது பண்பாட்டை விளங்கிக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இது சில சமயங்களில் சரியாகவும், பெரும்பாலான சமயங்களில் தவறாகவும் முடிந்து விடுவதைத்தான் அனுபவங்கள் நமக்குச் சொல்லுகின்றன.

தமிழில் பண்பாட்டு ஆய்வுகளுக்கான மொழியொன்று இன்றளவும் முழுமையாக உருவாகாமல் போனதற்கான காரணம் நாம் நமக்கான கருத்தாக்கங்களை உருவாக்கிக் கொள்ளாதது தான். இதற்குச் செய்யப் பட்ட ஒன்றிரண்டு முயற்சிகளும் தோல்வியையே தழுவின என்றால் நாம் நம் கருத்தாக்கங்களை எழுத்து மொழி சார்ந்தே தேடிக்கொண்டிருப்பதால் தான் என்று எனக்குத் தோன்றுகிறது. பரந்து விரிந்த நமது பண்பாட்டை விளக்குவதற்கான கருத்தாக்கங்களை ஒருவர் பேச்சுவழக்கிலிருந்தே கண்டடைய முடியும். முன்பே சொன்னது போல் பேச்சுவழக்குகள் தான் பண்பாட்டு நடவடிக்கைகளோடு நெருக்கமான உறவைப் பேணி வருகின்றன. பொதுப் பண்பாட்டிலுள்ள ஏராளமான சொற்களுக்கு

வட்டாரம் சார்ந்த புதிய புதிய விளக்கங்களை உருவாக்கித் தந்துள்ளன. அந்த வகையில், பண்பாட்டு ஆய்வுகளில் தமிழ் கருத்தாக்கங்களை உருவாக்கும் முற்சிக்கு இது போன்ற வட்டார வழக்குச் சொற் தொகுப்புகள் பெருமளவில் பங்காற்ற முடியும்.

நெல்லை வட்டாரச் சொற் தொகுப்பை செய்துள்ள வெள் உவன் மிகச் சிறந்த களப் பணியாளர். தமிழின் எழுத்து மரபையும் பேச்சு மரபையும் ஒரு சேர விவாதிக்கக் கூடியவர். முறையான கல்விப்புல பயிற்சிகள் எதையும் கொண்டிராதவர் என்றாலும் அப்பயிற்சி தனக்குக் கற்றுத் தந்த அத்தனையையும் சுயமாய் வளர்த்துக் கொண்டவர். இந்த சொற் தொகுப்பு அவரது அனுபவம் மற்றும் களப்பணிகளிலிருந்து விளைந்த ஒன்று. கடந்த சில வருடங்களாக அவர் இத்தொகுப்புப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தவர்.

இன்றைக்கு இது புத்தக வடிவம் பெற்றுவிட்டது என்பதனால் இப்பணி முடிவடைந்தது என்று நான் நினைக்கவில்லை. அவரும் அந்த மனநிலையில் தான் இருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். வட்டார வழக்குகளுக்கு எப்படி எல்லையில்லையோ அது போல் இத் தொகுப்பிற்கும் முதல், கடைசி என்று பக்கங்கள் இருக்க முடியாது. போர்ஹேயின் 'மணல் புத்தகம்' போல ஒரு நெல்லை வட்டார வழக்குச் சொற் தொகுப்பை உருவாக்க முடிந்தால் எவ்வளவு வசதியாக இருக்கும். வெள் உவன் போன்றவர்களால் அதை நோக்கிப் பயணிக்க முடியும் என்பதே என் நம்பிக்கை.

மேலும், சுய முயற்சியால் பண்பாட்டுப் பரப்பை அளக்க முனைகிற வெள் உவன் போன்றவர்களுக்கு 'கட்டுரை' என்ற வகைமையைக் காட்டிலும் இது போன்ற 'சொற்தொகுப்பு' என்ற வகைமை கூடுதலான சுதந்திரத்தை கொடுக்க முடியுமென்று நான் நினைக்கிறேன். துண்டு துண்டாய் அவரிடம் சேகரமாகியுள்ள பண்பாட்டுத் தகவல்களை வெளிப்படுத்தும் வழிவகையொன்றை 'சொற்தொகுப்பு' என்ற வகையில் அவர் கண்டுகொண்டார் என்று நினைக்கிறேன். வட்டார வழக்குச் சொற் தொகுப்பு போல், வானியல் அறிவுத் தொகுப்பு, மரபான விவசாய அறிவுத் தொகுப்பு போன்ற பல்வேறு தொகுப்புகளை அவரால் செய்ய முடியும். மிலராட் பாவிக்கின் 'Dictionary of Khazars' போல் அவர் நிஜமாகவே 'தமிழர்களின் அகராதி' ஒன்றை எழுத வேண்டும்.

டி. தருமராஜன்

*21.12.2011*

தலைவர், நாட்டுப்புறவியல் துறை
மதுரை காமராசர் பல்கலை கழகம்
மதுரை.

## சில சொற்கள்...

'அகராதி' என்ற சொல்லுக்கு எல்லாம் தெரிந்தவன் போல் பாவனை செய்பவன் என்றொரு பொருளும் நெல்லை வட்டார வழக்கில் உண்டு. நெல்லை வட்டார வழக்குச் சொல் அகராதியைத் தொகுக்கலாம் என்ற எண்ணம் என்னுள் உண்டானபோது மனத்தில் சட்டென்று தோன்றி மறைந்தது 'அகராதி' என்ற சொல்லின் எங்கள் வட்டார அர்த்தம் தான்.

இப்படி ஒரு வேலையைச் செய்யும் தகுதி நிச்சயம் எனக்கு இல்லை என்பது நான் நன்கு புரிந்து கொண்ட உண்மை. இருந்தாலும் நாம் இதைச் செய்ய வேண்டும் என்ற ஆசையும் உறுதியும் என்னுள் தோன்ற வேறு காரணமும் உண்டு. பல காலம் என் காதுபட நான் கேட்டு வந்த பேச்சு வழக்கில் உள்ள சொற்கள் பலவும் இன்று காணாமல் போய்க்கொண்டிருப்பதை நான் சமீப காலமாக உணர்ந்து வருகிறேன். இப்படிச் சொற்கள் தொலைந்து கொண்டிருக்கிற நிலையில், வழக்கில் அருகி வரும் சொற்களைச் சேகரித்துப் பதிவு செய்தால் என்ன என்ற எண்ணம் உருவானது. அதனாலேயே வட்டார வழக்குச் சொற்களை சேகரிக்கத் தொடங்கினேன்.

எனது இந்த வட்டாரச் சொல் சேகரிப்பை 'அகராதி' என்று சொல்லுவதில் எனக்கு தயக்கம் உண்டு. அகராதித் தொகுப்பு வேலை என்பது மிகவும் நுட்பமான, கனமான ஒன்று என்பது எனக்கு மிக நன்றாகவே தெரியும். எனவே முடிந்தவரை நமக்குத் தெரிந்த வழக்குச் சொற்களைச் சேகரிப்பது என்று முடிவு செய்தேன். எனவேதான் இதை 'சொற்சேகரிப்பு' என்று சொல்ல விரும்புகிறேன்.

பத்து இருபது ஆண்டுகளுக்கு முன் பெருவழக்காக இருந்த பல சொற்கள் இன்று வழக்கிலிருந்து பையப் பையத் தொலைந்து கொண்டிருக்கின்றன. இந்த 'பைய' என்ற சொல் சங்க இலக்கியத்திலேயே ப்யன் படுத்தப்பட்ட சொல். எங்கள் வட்டாரத்தில் சமீபகாலம் வரை புழக்கத்தில் இருந்து வந்த இந்த சங்க காலச் சொல் இப்போது தொலையத் தொடங்கி விட்டது.

இப்படிப் புழக்கத்திலிருந்து மறைந்து கொண்டிருக்கிற நமக்குத் தெரிந்த சொற்களைப் பதிவு செய்யலாம் என்ற ஆசையில் தொடங்கியது தான் நெல்லை வட்டார வழக்குச் சொல் அகராதி. திருநெல்வேலி மாவட்டம் என்பது தூத்துக்குடியையும் இணைத்த (ஒன்றிணைந்த திருநெல்வேலி மாவட்டம்) பெரிய நிலப்பகுதி. அவ்வளவு பெரிய

நிலப்பரப்பை உள்ளடக்கி நாம் சொற்களை சேகரிக்க இயலாது என்பதை ஆரம்பத்திலேயே புரிந்து கொண்டேன்.

எனவே எனது எல்லைகளைச் சுருக்கிக் கொண்டேன். திருநெல்வேலி நகரம், அதை ஒட்டிய நாங்குனேரி வட்டம் என்று எல்லைகள் சுருக்கப் பட்ட பகுதியில் சேகரிக்கப்பட்ட சொற்களே இதில் இடம் பெற் றிருக்கின்றன. அப்படியும் இதை முழுமையான ஒன்று என்று சொல்ல முடியுமா என்பது சந்தேகமே. திரு. டி. தருமராஜன் முன்னுரையில் சொல்லியிருப்பது போல் இப்படிப்பட்ட சொற்சேகரிப்புக்கு- தொகுப்புக்கு- முதல், கடைசி என்று பக்கங்கள் இருக்க முடியாது என்று நானும் நம்புகிறேன்.

இந்த சொற்சேகரிப்பில் ஈடுபட்ட போது எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட வீடுகளில் சன்னல் கதவு வீட்டின் உட்புறம் இருக்கும் விதத்தில் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இன்றைக்குக் கட்டப்படும் வீடுகளில் சன்னல் கதவுகள் வீட்டின் வெளிப்பக்கம் இருக்கும் விதத்தில் அமைக்கப்படுகின்றன. இப்படி சன்னல் கதவுகளை வெளிப்புறமாக அமைக்க வேண்டியதன் காரணம் நமக்கு வேறொரு செய்தியைச் சொல்கிறது.

பழைய காலத்தில் சன்னல் கம்பிகள் நெட்டுவசத்தில் பொருத்தப் பட்டன. மேலும் சன்னல்கள் சுவரின் வெளி விளிம்பில் பொருத்தப் பட்டிருந்தன. சன்னலின் கதவுகள் வீட்டின் உட்புறமாக இருக்கும்படி அமைக்கப்பட்டன. இப்படி அமைக்கப்பட்ட சன்னலின் கம்பிகள் மழையில் நனையும் நிலை இருந்தது . மரச்சட்டத்தில் நெட்டுவசத்தில் பொருத்தப்பட்ட இரும்புக் கம்பிகள் மழையில் நனைந்து துருப்பிடித்து, பருத்து, காலப் போக்கில் மரச்சட்டத்தை வெடிக்கச் செய்துவிடுகின்றன. நவீன தொழில்நுட்பத்தில் இன்றைய இரும்பு உருக்காலையில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புக் கம்பிகளை சன்னலுக்கு பயன்படுத்தத் தொடங்கிய பின்னே இந்த நிலைமை. நமது பாரம்பரிய முறையில் உருவாக்கப்பட்ட இரும்பில் செய்த கம்பிகளை பயன்படுத்தி வந்த வரை இப்படி ஒரு தொந்தரவு இருந்தது இல்லை. நமது பாரம்பரிய முறையில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புக் கம்பிகளில் துருப் பிடிக்கும் தன்மை குறைவாக இருந்ததால் தான் அவை மழை நீரால் எந்தவிதப் பாதிப்பும் அடையாமல் இருந்தன என்பதும் நவீன தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படுகிற இரும்புக் கம்பிகளுக்கு மழையில் துருப்பிடிக்காமல் தாக்குப்பிடிக்கிற திறன் இல்லை என்பதும் புரிகிறது.

துருப்பிடிக்காத இரும்பைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை அறிய முடியாத நிலையில் சன்னல் கம்பிகளை குறுக்குவசத்தில் வைக்கும் முறையைக் கடைப்பிடித்தனர். இதனால் சன்னலின் குறுக்குச் சட்டத்தில்

கம்பியைப் பொருத்தாமல் பக்கவாட்டுச் சட்டத்தில் பொருத்தினர். இம்முறை பின்பற்றப்பட்ட பின் மழை நீரால் ஏற்படும் பாதிப்பு சிறிது குறைந்தது. மேலும் சன்னல்களை வீட்டுச் சுவரின் உள்விளிம்பிலும் சன்னல் கதவுகளை வெளிப்புறத்திலும் அமைத்தனர். இதனால் சன்னல் கதவை மூடும்போது மழை நீர் சன்னல் கம்பியில் விழுவது தடுக்கப்பட்டது. இப்படித்தான் தொலைத்துவிட்ட நமது துருப் பிடிக்காத பாரம்பரிய தொழில்நுட்பத்திற்கு மாற்று தெரியாமல் எப்படியோ சமாளித்து வருகிறோம். 'செருப்புக்கு ஏத்தாப்புல காலைத் தறிக்கிற வேலை' என்றொரு பழமொழி இந்த வட்டாரத்தில் உண்டு. ஏனோ தெரியவில்லை, இந்த பழமொழி நினைவுக்கு வருவதைத் தடுக்க முடியவில்லை.

இப்படி உட்பக்கமாக மூடும் சன்னல் கதவுகள் காற்றடிக்கையில் திறந்து கொள்ளாமல் இருக்க ஒரு தாழ் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தத் தாழைக் குறிக்கும் சொல்லை நான் சிறுவயதில் கேட்டிருக்கிறேன். ஆனால் இப்போது நினைவில் இல்லை. மறந்து போன அந்தச் சொல்லைத் தேடி அலைந்தபோது ஒரு பெரியவரைச் சந்தித்தேன். நான் தேடிக் கொண்டிருக்கும் சொல்லைப் பற்றி அவரிடம் விசாரித்தேன். ஆமாம் ஆமாம் அதற்கு ஒரு சொல் உண்டு என்று வேகமாகத் தலையை ஆட்டினார். என்ன சொல் அது என்று நானும் ஆர்வத்துடன் கேட்டேன். அவரும் சிறிது நேரம் யோசித்துவிட்டு 'தம்பி, அந்தச் சொல் எனக்கு நினைவில் வர மாட்டேங்குதே, மறந்து விட்டதே' என்று சொன்னதும் எனக்கு பொசுக்கென்று ஆகிவிட்டது. இந்தப் பெரியவரின் நினைவில் இருந்து நழுவியது போல் இன்னும் எத்தனை சொற்களை இப்படித் தினமும் தொலைத்துக்கொண்டு இருக்கிறோமோ தெரியவில்லை.

கடைசியாக வெகுநாள்களுக்குப் பின் ஒரு வயதான தச்சாசாரியின் மூலம் 'பெரடை' என்ற அந்தச் சொல்லைக் கண்டடைந்தேன். அதாவது 'கதவுக்குப் பின்புறத்தில் கதவு திறக்காமல் இருக்கச் செய்யும் அடை' என்ற பொருள் கொண்ட 'பெரடை' என்ற அந்த வழக்குச்சொல்லின் செவ்விய வடிவம், 'புறஅடை' என்பதாகும். வழக்கில் இருந்து இது போன்ற ஏராளமான சொற்கள் இன்று காணாமல் போய்க் கொண்டிருக் கின்றன. இந்த நிலையில் தான் எனக்குத் தெரிந்த சொற்களைச் சேகரித்துப் பதிவு செய்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் தொடங்கப்பட்டது தான் இந்தச் சொற்சேகரிப்பு.

இந்தச் சொற்சேகரிப்புக்கு கிட்டத்தட்ட ஆறு ஏழு ஆண்டுகள் செலவழிக்க வேண்டியிருந்தது. இவ்வளவு காலம் செலவழித்தும் இந்த வேலையை முழுமையாக நான் செய்து முடித்துவிட்டேன் என்று என்னால் சொல்ல முடியவில்லை. தோண்டத் தோண்ட ஊறும் ஊற்று போல் ஊறிக்கொண்டே இருக்கின்றன சொற்கள்.

இதுவரை பல வட்டாரங்களைச் சார்ந்த வழக்குச் சொல் அகராதிகள் நிறையவே வெளிவந்திருக்கின்றன. இது என்னால் அறியப்பட்ட எங்கள் வட்டாரத்தில் புழங்குகிற, புழங்கிய சொற்களின் தொகுப்புதான். முழுமையான ஒன்று இல்லை என்பதை மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எனது இந்த முயற்சிக்கு உதவியும் ஊக்கமும் தந்த நண்பர்கள் பலர். நண்பர் ந. அரணமுறுவல் அவர்கள் மெய்ப்புப் பார்த்துக் கொடுத்து இந்தத் தொகுப்பை செழுமைப்படுத்தியுள்ளார். முன்னுரை வழங்கி எனக்குப் பெருமை செய்ததோடு மட்டுமல்லாமல், நான் சோர்ந்து, எனது முயற்சியைத் தொடரத் தயங்கிய நேரத்திலெல்லாம் பலவிதத்தில் ஊக்கமும் உற்சாகமும் தந்து என்னை முனைப்பாகச் செயல்பட வைத்தார் பேரா. டி. தருமராஜன் அவர்கள். ஆழமான விவாதங்கள் மூலம் எனது பல ஐயங்கள் தெளிவுபட உதவினர் 'வைகை' குமாரசாமி, பேரா.நா. இராமச்சந்திரன் போன்ற நண்பர்கள். தேவையான இடங்களில் பயன் படுத்த அழகான ஓவியங்களை வரைந்து கொடுத்து உதவினார் நண்பரும் ஓவியருமான இராமச்சந்திரன். நண்பர் வசந்தகுமார் அவர்கள் இந்தத் தொகுப்பை புத்தக வடிவில் கொண்டுவர எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்றும் என் நினைவில் இருக்கும். இப்படி எத்தனையோ வழிகளில் பல நண்பர்கள் எனது முயற்சிக்கு உதவினர். அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

வெள் உவன்.<br>திருநெல்வேலி.

## அ

**அக்கா** -மூதேவி. *(வசைச் சொல்)*

**அக்கி** - வெப்பத்தால் வரும் நோய். *(குழந்தைக்கு மேலெல்லாம் அக்கி போட்டிருக்கு, அக்கி எழுதிட்டு வரணும்)*

**அக்கினி நட்சத்திரம்** - சூரியன் வடசெலவின் போது (உத்தராயனம் ) சித்திரை மாதம் மேச ராசியில் பரணி நட்சத்திரம் மூன்றாம் காலில் நுழையும் நாளிலிருந்து ரோகிணி நட்சத்திரம் இரண்டாம் காலில் நுழையும் நாள் வரையிலான காலம். இந்த நாட்களில் வெப்பம் மிகுந்து காணப்படும். கத்திரி வெயில். *(அக்கினி நட்சத்திர வெயில் இப்படி கொளுத்துதே)*

**அக்கினி மூலை** - தென்கிழக்குத் திசை. *(கோவில்களில் அக்கினி மூலையில்தான் மடப்பள்ளி அமைந்திருக்கும்)*

**அக்குருவம்** - அக்கிரமம், அநியாயம், ஒழுங்கின்மை. *(இந்தச் சின்னப் பையன் என்ன அக்குருவம் பண்ணுறான்)*

**அகத்தி** - அகட்டி, நகர்த்தி, அகலமாகக் காலை விரித்து.

**அகராதி** - வசைச் சொல், எல்லாம் தெரிந்தது போல் பேசுபவன் *(அவன் பெரிய அகராதி மாதிரில்வா பேசுவான்)*

**அகலக்கால்** - தன் தகுதிக்கு மீறிய செயல். *(துணி வியாபாரத்தில் அகலக் கால் வைத்துவிட்டான் போலும்)*

**அங்க சேட்டை** - உடல் உறுப்பு *(அங்க சேட்டை செய்யாமல் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது அவனால்)*

**அங்கணம்.** வீட்டின் உள்ளே பயன்படுத்திய கழிவு நீர் வெளியேற ஏற்படுத்தப்பட்ட தரைத் தளத்திலிருந்து சிறிது பள்ளமாக ஒரு மூலையில் அமைக்கப்பட்ட அமைப்பு.

**அங்கம்** - பிணத்தை எரித்த பின் மிஞ்சும் எலும்புகள்.

**அங்கம் கரைத்தல்.** - இறந்தவர் உடல் எரியூட்டப்பட்ட மறுநாள் அதன் எலும்பு, சாம்பல் போன்றவற்றை நீர்க்கரையில் கரைத்தல்.

**அங்கமாற** - அந்தப் பக்கமாக. *(அங்கமாற தான் அவன் போனான்)*

**அங்கன** - அங்கே. *(இவ்வளவு நேரம் அங்கன உனக்கு என்ன வேல?)*

**அங்குஸ்தான்** - தையல்காரர் பொத்தான் தைக்கும் போது ஊசி விரலில் குத்தாமல் இருக்க இடது ஆட்காட்டி விரலில் மாட்டிக் கொள்ளும் உலோக உறை.

**அங்கிட்டு** - அங்கே *(அங்கிட்டு இங்குட்டு போகாம ஒரு இடத்துல இருக்க முடியாதா உனக்கு)*

**அச்சச்சோ** - ஐயையோ.

**அச்சடையாளம்** - ஒன்றைப் போன்ற ஒத்த சாயல்.

**அச்சாணியம்** - தீயவை நடக்குமோ என்ற பயம்.

**அச்சு அசல்** - ஒரே சாயல், ஒத்த சாயல்.

**அச்சுகுண்டாய்** - மிகத் தெளிவாக அழகாக எழுதப்படும் கையெழுத்து.

**அச்சுதிரட்டு-தல்** - மாட்டுவண்டியின் தேய்ந்து போன அச்சை ஆசாரியிடம் கொடுத்து பழைய நிலைக்குக் கொண்டு வருதல்.

**அச்சுமுறுக்கு** - இரும்பு அச்சுவை பயன்படுத்தி தயாரிக்கப்படும் இனிப்பு முறுக்கு.

**அசங்காம** - அசைக்காமல்.

**அசட்டை** - அலட்சியம், பொருட்படுத்தாமை.

**அசதி** - சோர்வு, களைப்பு.

**அசல்1** - அயல்.

**அசல்2** - சாயல்.


**அசல்3** - கடனாகக் கொடுக்கப்பட்ட தொகை.

**அசல்4** - உறவுக்கு வெளியே.

**அசலாள்** - வேற்று ஆள்.

**அசலூர்** - வெளியூர்.

**அசை** - தலையணை போன்றவற்றை வைப்பதற்குப் பயன்படுத்தும் சதுரம் மற்றும் செவ்வக வடிவிலான மரச் சட்டம்.



**அட்டணக்கால்** - ஒரு காலை மற்றொரு காலின் மேல் குறுக்காக வைத்து உட்கார்ந்திருக்கும் நிலை.

**அட்டம்** - தானிய மூட்டைகளை அடுக்கிவைக்கும் முறை.

**அட்டி** - தடை. *(உங்க சொல்லுக்கு அட்டி உண்டா?)*

**அட்டியல்** - பார்க்க : அட்டம்.

**அட்டு** - அழுக்கு.

**அட்டுப்பிடித்தல்** - பானை, சட்டி போன்றவற்றில் பிடிக்கும் கரி, அழுக்கு ஆகியவை அகலாமல் பற்றிப் பிடித்துக்கொள்ளுதல்.

**அடக்கா** - அடைக்காய், கொட்டைப் பாக்கு.

**அடசல்** - நெருக்கமாகப் பொருட்கள் குவிந்துகிடத்தல்.

**அடத்தி** - அடர்த்தி.

**அடப்பக்காரன்** - அடைப்பக்காரன், வெற்றிலைப் பை வைத்துக் கொண்டு அரசருக்கும் பெருமக்களுக்கும் வெற்றிலை மடித்துக் கொடுக்கும் வேலைக்காரன்.

**அடப்பா இருக்கு** - அடர்த்தியாக நெருக்கமாக இருத்தல். *(இன்னக்கி மானம் அடப்பா இருக்கு மழ வந்தாலும் வரும்)*

**அடமானம்** - நிலம், வீடு, நகை போன்றவற்றை ஈடு வைத்துப் பணம் பெறும் முறை.

**அடவு** - அடகு.

**அடவோலை** - குத்தகை ஒப்பந்தப் பத்திரம்.

**அடிக்குச்சி** - அடி என்ற அளவை அளக்கப் பயன்படுத்தும் அளவு கோல் *(scale)*.

**அடிதண்டா** - பார்க்க: அளி தண்டா.

**அடிபிடித்தல்** - வேக வைத்த பொருள் தண்ணீர் இல்லாததால் பானையின் அடியில் பிடித்துக் கொள்வது. *(தண்ணி பாத்து ஊத்து. தண்ணி இல்லாம அடி பிடிச் சிடாம)*

**அடுக்களை** - சமையல் அறை.

**அடுக்காளை** - சமையல் அறை.

**அடுக்குச் சட்டி** - ஒன்றினுள் ஒன்றாக அடங்கும்படி உள்ள சட்டி.

**அடுப்பாங்கரை** - சமையல் அறை.

**அடை** - மூடு.

**அடைக்க** - முழுவதுமாய்.

**அடைச்சி கொடு-த்தல்** - பணம் வாங்கிக்கொண்டு பயிர் செய்யும் உரிமையைக் கொடுத்தல்.

**அடைதல்** - ஒன்று சேர்த்து வைத்தல், *(நாளை வைக்கப்படப்பு அடையணும்)*

**அடைப்பு1** - வயல், வீட்டுமனை போன்றவற்றை வேலியிட்டு அடைப்பது.

**அடைப்பு2** - வியாபார கடைகளுக் கான விடுமுறை நாள்.

**அண்ட1** - முட்டுக் கொடுத்தல்.

**அண்ட2** - அருகில் நெருங்க.

**அண்டி1** - குதம்.

**அண்டி2** - வாழைக்கன்று.

**அண்டிப்பருப்பு** முந்திரிப்பருப்பு.

**அண்டை1** - அருகில், அண்மை.

**அண்டை2** - வண்டி, தேர் சக்கரங் கள் தானே உருளாமல் இருக்க வைக்கப்படும் தடை, தடுப்பு.

**அண்ணாவி**- ஆசான், குரு.

**அணவடைத்துணி** - கைக் குழந் தையை மடியில் வைத்திருக்கும் போது குழந்தையைச் சுற்றி வைத்திருக்கும் துணி.

**அணவடைப்பிள்ளை** - கைக் குழந்தை.

**அத்தக்கொத்து** - தினக்கூலி.

**அத்தம்** - முடிவு, எல்லை.

**அத்தி** - அத்திமரம்.

**அத்துப்படி** - முழுவதும் தெரிந்த நிலை.

**அத்துப்பேசுதல்** - முடிவாய்ச் சொல்லுதல், கறாராய்ச் சொல் லுதல்.

**அத்துவனக்காடு** - அடர்ந்த காடு, நாட்டார் கதை சொல்லிகளிடம் பெருவழக்காக உள்ள சொல்.

**அதக்குதல்** - வாயில் போட்டுக் குதப்புதல்.

**அதால** - அதனால்.

**அதான** - அதுதானே.

**அதிகப் பத்து** - சம்பளம், கூலி முதலியவற்றில் கொடுபட வேண் டிய தொகைக்குக் கூடுதலாகப் பெற்றுக் கொண்ட பணம்.

**அதிகப்பிரசங்கி** - தகுதியை மீறி அளவில்லாமல் பேசுபவன்.

**அதிகாரிச்சி** - பெண் அதிகாரி, அதிகாரியின் மனைவி.

**அதுக்காட்டி** - அதற்காக.

**அந்தமாற** - அந்தப்பக்கமாக.

**அந்தாக்குல** - அப்படியே, அந்த வாறே.

**அந்தால** - அப்படியே.

**அந்தானக்கி** - பார்க்க: அந்தால.

**அந்தி** - மாலைப்பொழுது.

**அந்திச் சோறு** - மாலையில் உண்ணும் உணவு.

**அந்துட்டு** - அறுந்துவிட்டது.

**அந்துபோச்சு** - அறுந்துபோனது.

**அப்பம்** - அப்போது.

**அப்பு1** - மேலே பூசு, மேலே தடவு.

**அப்பு2** - கன்னத்திலோ முதுகிலோ கையால் அடி. *(ரெண்டு அப்பு அப்பினால்தான் சொன்னபடி கேட்பான்)*

**அப்பைக்கப்பம்** - அவ்வப்போது.

**அப்புண்டு** - முட்டாள்.

**அப்புராணி** - பார்க்க: அப்புண்டு.

**அப்போ** - அப்போது.

**அம்மாசி** - அமாவாசை.

**அம்பாரம்** - தானியம் முதலியவற்றின் குவியல்.

**அம்புட்டு** - அவ்வளவு.

**அம்புட்டும்** - அவ்வளவும்.

**அம்புட்டுதான்** - அவ்வளவுதான்.

**அம்மணக்குண்டி** - நிர்வாணம், உடம்பில் ஆடை எதுவும் இல்லாத நிலை.

**அம்மை** - பெரிய அம்மை நோய்.

**அமத்து1** - ஆற்றுப்படுத்து.

**அமத்து2** - விளக்கை அணை.

**அமுக்குப்பிரம்பு** - வாசல் நிலையின் விளிம்பில் அழகுக்காகச் செதுக்கப்படும் குழிவான பகுதி.

**அமுக்குப்பூட்டு** - சாவி இல்லாமல் அமுக்கினால் பூட்டிக் கொள்ளும் பூட்டு.

**அமுத்து** - அமுக்கு, அழுத்து.

**அய்வேசு** - செல்வம், சம்பாத்தியம்.

**அரக்குதல்** - வாய் நிறைய உண்ணுதல்.

**அரங்க வைத்தல்** - நெய் உருக்குதல், இளக வைத்தல்.


**அரங்கு** - உள்வீடு.

**அரங்கு வீடு** - உக்கிராண அறை

**அரக்கபரக்க** - பரபரப்பாக, விரைவாக.

**அரசாணிக்கம்பு** - மணமேடையின் கன்னி மூலை காலில் கட்டப்பட்டிருக்கும் கம்பு . இது பால் மரக்கம்பாக இருக்க வேண்டும். திருமண நிகழ்வில், தாலி கட்டுவதற்கு முன்பாகக் காப்புக்கட்டும் நிகழ்ச்சியை ஒட்டி மாப்பிள்ளை இந்தக் கம்பிற்குத் தாலி கட்டுவார்.

**அரசிலை** - பெண்குழந்தைகளுக்கு இடுப்பில் அணியும் அரசு இலை வடிவிலான ஆபரணம்.



**அரணபுத்தி** - நினைவாற்றல் குறைவாக உள்ளவன், ஞாபக மறதிக்காரன்.


**அரணாக்கொடி** - (அரைஞாண் கொடி) ஆண்கள் இடுப்பில் கட்டி யிருக்கும் கருப்புக் கயிறு அல்லது வெள்ளியாலான கொடி.

**அரப்புப்பொடி** - இலுப்பை பிண்ணாக்குத்தூள்.

**அரமூடி** - பார்க்க: அரசிலை.

**அரவம்** - சத்தம், சலசலப்பு.

**அரிக்கன் லைட்** - காற்றில் அணைந்து விடாமலிருக்கக் கண் ணாடிக் கூண்டு (சிமினி) பொருத் தப்பட்ட கைப்பிடியுடன் கூடிய மண்ணெண்ணெய் விளக்கு.




**அரிசி கணக்கு** - இருவர் பேசிக் கொள்ளும் விஷயம் என்ன வென்று அறிந்து கொள்ளும் ஆர்வத்தில் மூன்றாமவர் என்ன என்று கேட்பதற்கு உமக்கு அது சம்பந்தமில்லை என்பதைக் குறிக்கும் சொல்.

**அரிசிப்பல்** - சிறுபல்.

**அரிதல்** - வெங்காயம், கீரை, காய் போன்றவற்றைச் சிறிய துணுக்கு களாக நறுக்குதல்.

**அரிப்பு** - சல்லடை.

**அருக்கிராவி** - நெல்லின் ஒரு வகை.

**அருதலி** - விதவை.

**அருமாந்த** - அருமையான, பிரிய மான.

**அருவா** - அரிவாள்.

**அருவாப் பெட்டி** - பனையேறு பவர் தன்னுடைய இடுப்பில் கட்டியிருக்கும் அரிவாள் போன்ற பொருட்களை வைத்திருக்கும் பெட்டி.

**அருவா வெட்டுக் குருணி** - அறு வடை முடிந்த பின் அறுவடை செய்த அரிவாள்களை மொத்த மாக வைத்து நெற்கதிர்களைக் கொண்டு சுற்றிக் கட்டி வைத்திருப் பர். களத்தில் வைத்து அதைப் பிரித்து அந்த கதிரில் உள்ள நெல்லை அறுவடையில் கலந்து கொண்ட அனைவருக்கும் சம மாகப் பிரித்துக் கொடுப்பர்.

**அரை** - இடுப்பு.

**அரைகலப்ப உழவு** - விதை விதைத்தப் பின் மேலோட்டமாக உழும் உழவு.

**அரைக்கால்** - 1/8 என்னும் பின்ன எண், 8இல் ஒன்று.

**அரையே அரைக்கால்** - 5/8 என்னும் பின்ன எண்.

**அரையே மாகாணி** - 9/16 என்னும் பின்ன எண்.

**அரையே முண்டாணி** - *11/16* என்னும் பின்ன எண்.

**அலகு1** - தாடை.

**அலகு2** - கட்டை வண்டியின் சட்டத்தின் இரண்டு ஓரமும் உள்ள கட்டை.

**அலசல்** - பாவு அதிக நெருக்கமில்லாமல் நெய்கிற நெசவு.

**அலசு1** - கழுவு.

**அலசு2** - துவைத்த துணியை அழுக்குப் போக்க நீரில் முக்கி எடுத்தல்.

**அலண்டுபோதல்** - நாற்காலி, வண்டி போன்றவற்றின் சட்டங்களின் பிடிப்பு தளர்ந்து போகுதல்.

**அலப்பற** - வீண் பேச்சு பேசுபவன்/ள்.

**அலம்பு** - ததும்பு.

**அலமாரு** - துணி நகை போன்றவற்றைப் பாதுகாப்பாக வைக்கப் பயன்படும் மரத்தால் செய்யப்பட்ட பேழை.

**அலவறல்** - காய்ந்த பனங்கதிர்.

**அலவறை** - உண்பதில் பரபரப்பு காட்டுபவன்.

**அலாக்காத் தூக்கு** - ஒன்றைக் கால், மார்பு, தோள் முதலியவற்றில் படாமல் தலைக்கு மேல் தூக்கு.

**அலாரம்** - வில் வண்டியோட்டியின் காலால் அழுத்த மணி அடிப்பது போல் ஓசை எழுப்பி வண்டியின் வருகையைத் தெரிவிக்கும் கருவி. இது வில் வண்டியில் பொருத்தப்பட்டிருக்கும்.

**அவங்க** - அவர்கள்.

**அவிஞ்சி போகுது** - வெக்கை கடுமையாக இருத்தல்.

**அவிஞ்சு போச்சு** - அவிந்து போனது.

**அவிய** - அவர்கள்.

**அவிசாரி** - விபச்சாரி, விலை மகள்.

**அவுக** - அவர்கள்.

**அவுட்டு** - பெரும் சத்தத்துடன் வெடிக்கும் வெடி.

**அவுறு** - அவிழ், கழற்று.

**அழிச்சாட்டியம்** - கேடு, குறும்பு. பொய்க் குற்றஞ்சாட்டுதல் *(வாங்கிய கடனைக் கொடாமல் அழிச்சாட்டியம் பண்ணுகிறான்)*

**அழிப்பான் கதை** - விடுகதை, புதிர்.

**அழிமானம்** - அழிவு ஏற்பட்டதின் அளவு.

**அழுகுணி** - எப்போதும் அழுது கொண்டிருப்பவன்.

**அளகல்** - குளத்துக் கரையின் பாதுகாப்பிற்காக பதிக்கப்படும் கல்.

**அளவுகாரர்** - நெல் முதலிய தானியங்களை அளப்பவர்.

**அளி** - மாட்டுத் தொழுவத்தில் மாட்டிற்குப் போடப்படும் தீவனங்கள் (வைக்கோல் போன்றவை) சிதறாமல் இருக்கத் தடுப்பாகப் பயன்படுத்தப்படும் மரத்தினாலான தடுப்பு, மூங்கில் பிளாச்சு அல்லது மரப்பட்டியலால் செய்யப்பட்ட சட்டம் (வீட்டு முன் திண்ணையில் அமைக்கப்படுவது)

**அளிக்கதவு** - மரம் அல்லது

இரும்புக் கம்பியால் ஆன கதவு.

**அளிதண்டா** - வீட்டின் முன் வாசல் கதவின் உட்பக்கம் குறுக்காகத் தாழிடப் பயன்படும் மரம் அல்லது இரும்பாலான நீளப் பட்டை.

**அளிப்பத்து** - குளத்திற்கு அருகில் உள்ள வயல்.

**அளு** - மன்னராட்சிக் காலத்தில் சந்தையில் பெறப்பட்ட வரிகளில் ஒன்று.

**அறவே** - முழுவதும், முற்றும், முழுக்க.

**அறுத்துக் கிழித்தல்** - அசிங்கமான சொற்களால் திட்டுதல்.

**அறுதப்பய** - விதவையின் மகன் (வசைச்சொல்).

**அறுப்புக்குழி** - மரத் தடிகளைப் பலகைகளாக அறுக்க வசதியாக இருக்கும் விதத்தில் தரையில் தோண்டப்படும் பள்ளம்.

**அறுப்புச்சாரம்** - பெரிய மரத் தடிகளை அறுக்க உயரத்தில் தூக்கி வைக்கப் பயன்படும் மரக்கம்புகளால் கட்டப்படும் சாரம்.


**அறுப்புரொட்டி** - சுட்ட ரொட்டி.

**அறுப்புவாள்** - மரத்தடிகளை அறுக்கப் பயன்படும் வாள்.

**அற வீடு** - பொருள் வைப்பு அறை.

**அன்னியோனியம்**- ஒற்றுமை, ஒன்றிப்பு.

**அன்னக்கை** - பானையிலிருந்து சோறு எடுக்கப் பயன்படும் உள்ளங்கை போன்ற வடிவில் இருக்கும் கரண்டி.



அன்னக்கை

**அன்னவத்திரம்** - முதுமைக் காலத்தில் ஒருவருக்கு உணவுக்கும் உடைக்கும் ஆகும் செலவைச் சரிக்கட்டக் கொடுக்கப்படும் நிலம் அல்லது பணம்.

**அன்னவெட்டி** - சோறு பரிமாறும் பாத்திரம்.

**அன்னா** - அங்கே.

**அன்னாடம்** - அன்றாடம், தினந் தோறும்.

**அனத்தல்** - முனகிக்கொண்டிருத்தல்.

## ஆ

**ஆக்கம்** - மங்களகரம்.

**ஆக்கர்** - துளை, ஓட்டை.

**ஆக்குப்புரை** - திருமணம் போன்ற சடங்குகளுக்குச் சமையல் செய்யப் போடப்படும் பந்தல்.

**ஆகியிருக்கா** - கருத்தரித்திருக்கிறாள்.


**ஆங்காரம்** - ஆத்திரம்.

**ஆச்சி** - பாட்டி.

**ஆட்டாம்புழுக்கை** - ஆட்டுக் கழிவு, ஆட்டுப்புழுக்கை.

**ஆட்டுக்கத்தி** - ஆட்டு ரோமத்தை வெட்டும் கத்தி.

**ஆட்டுரல்** - தோசை மாவு அரைக்கும் ஆட்டுக்கல்.



ஆட்டுரல்

**ஆடாதோடை** - ஒருவகை மருந்துச் செடி, சளி இருமலுக்கு உகந்தது.

**ஆடியிறுதி** - ஆடி மாதத்தின் கடைசி நாள்.

**ஆடுதசை** - முழங்காலின் சதைப் பற்றுள்ள பின்பகுதி.

**ஆடுதின்னாப்பாளை** - புழுக் கொல்லிப் பூடு, ஒருவகை மருந்துச் செடி. ஆடு தின்னாத செடி.

**ஆண்பனை** - நுங்கு காய்க்காமல் கதிர் மட்டும் தள்ளும் பனை. இந்தக் கதிர்கள் தான் மகரந்த சேர்க்கைக்கு உதவுகின்றன.

**ஆண்மூடி** - தேங்காயின் கண்ணில் லாத பாதிப் பகுதி.

**ஆணி** - உள்ளங்காலில் உண்டா கும் ஒரு வகைப் புண்.


**ஆணைகழிச்சு மூணுதரம்** - சத்தியம் செய்யக் கூடாது என்ற நம்பிக்கை இருப்பினும் சத்தியம் செய்ய வேண்டிய கட்டாயச் சூழலில் வேறு வழியில்லாமல் சத்தியம் செய்தவன் சத்தியம் செய்த பின் அந்தச் சத்தியத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாகக் கூறும் வாசகம்.

**ஆத்தா1** - அம்மன் தெய்வம்.

**ஆத்தா 2** - பாட்டி.

**ஆத்தாமை** - தாங்கமுடியாமை.

**ஆப்பக்கூடு** - கரண்டி, அகப்பை, மத்து போன்றவற்றைத் தொங்க விடப் பயன்படும் துளைகள் உள்ள மரப்பலைகை.



ஆப்பக்கூடு

**ஆப்பம்** - தோசை போன்ற பலகாரம்.

**ஆப்பு** - மரம் போன்றவற்றைப் பிளக்கப் பயன்படும் கூம்பு வடிவிலான இரும்பு ஆயுதம்.

**ஆப்புடுதல்** - அகப்படுதல்.

**ஆப்பை** - அகப்பை, கரண்டி.

**ஆமக்கன்** - கணவன்.

**ஆமவடை** - பருப்புவடை

**ஆய்கிறது** - மேலிட்டுத் தோன்றல். *(மீன் ஆய்கிறது, கொசு ஆய்கிறது)*

**ஆய்தல்** - கொய்தல்.

**ஆயக்கட்டு** - குளப்புரவு, குளத்து நீர், ஆற்றுநீர்ப் பாசனத்துக்குள் வரும் வயல் பரப்பு.

**ஆயக்கால்** - கடவுள் திருஉருவைச் சப்பரத்தில் வைத்துச் சுமந்து வருவோர் சப்பரத்தை ஆங்காங்கு நிறுத்தும் போது தாங்குக் கட்டையாகப் பயன்படுத்தும் முட்டுக் கட்டை.

**ஆயாசம்** - மயக்கம், களைப்பு. *(எனக்கு ஆயாசமாக இருக்கிறது).*

**ஆயினி** - பலா மரத்தின் வகைகளில் ஒன்று.

**ஆரக்கால்** - வண்டிச் சக்கரத்தின் குறுக்குக்கால்.

**ஆரம்** - ஒரே வகைப் பூவினால் கட்டப்பட்ட மாலை,. ஒரு கழுத்து ஆபரணம்.


**ஆரியம்** - தினை அரிசி( தானிய வகையில் ஒன்று)

**ஆரூட் கஞ்சி** - ஆரோரூட் மாவினால் செய்த கஞ்சி. வயிற்றுப் போக்கு கண்ட குழந்தைகளுக்கு உகந்த உணவு.

**ஆலாத்தி** - சுப துக்கக் காரியங்கள் தொடர்பானவர்கள் வீட்டினுள் நுழையும் முன் மஞ்சள், சுண்ணாம்பு, வேப்பிலை கலந்த நீர்ப் பாத்திரதை அவர்களின் தலையைச் சுற்றித் திருஷ்டி கழித்தல்.

**ஆலாப் பறத்தல்** - ஆலாப் பறவையைப் போல் பறத்தல், சாப்பாட்டுக்கு ஏங்கித் தவித்தல்.

**ஆலி** - காகிதக் கூழால் செய்யப்பட்ட பெரிய ஆண், பெண் உருவங்கள். திருவிழாக் காலங்களில் இந்த உருவங்களுக்குள் நுழைந்து



ஆலி

அதைச் சுமந்தபடி ஆடிக்கொண்டு வருவார்கள்.

**ஆவத்து** -ஆபத்து.

**ஆவலாதி** - புகார் சொல்லுதல்.

**ஆவிசேர்த்து** - ஆரத்தழுவி.

**ஆழங்கால்** - பலகை தாங்கச் சுவரில் பதிக்கும் கட்டை

**ஆழாக்கு** - ஒரு முகத்தல் அளவு. அரைக்கால் படி. *(1/4 படியில் பாதி)*

**ஆளாக்கு** - வளர்த்து ஆளாக்கிவிடு.

**ஆறஅமர** - நிதானமாக.

**ஆனக்கொம்பன்** - நெல் வகை.

**ஆனமட்டும்** - முடிந்த வரை, இயன்றவரை.

## இ

**இக்கட்டு** -நெருக்கடி, துன்பம்.

**இங்கன** - இங்கு.

**இங்கிட்டு** -இங்கே.

**இசகுபிசகு** - முறைகேடு.

**இசவு** - பேறுகால வேதனை.

இட்டேரி - வண்டித்தடம், வண்டிப்பாதை.


இடத்தை - இடப்பக்கம்.

இடக்கு - குதர்க்கம், கேலி.

இடப்பழம் -மரத்திலிருக்கும் போதே வாழைக்குலையில் காய் களுக்கு இடையே பழுத்திருக்கும் பழம்.

இடவன் -வண்டியில் இடப்பக்கம் பூட்டும் மாடு.

இடிக்கி - பனம் பாளைகளில் பதனீர் இறங்குவதற்குத் தோதாக அதனைப் பதப்படுத்தப் பயன் படும் இரண்டு கட்டைகளால் இணைக்கப்பட்ட இடுக்கி போன்ற கருவி, ஆடு மாடு போன்ற விலங்கு களுக்குக் கருத்தடை செய்யும் கருவி.




இடிதாங்கி - மின்னலின் தாக்கு தலில் இருந்து பாதுகாக்கும் அமைப்பு.

இடியாப்ப உழக்கு - இடியாப்பம் பிழியப் பயன்படும் உழக்கு.

இடுக்கு1 - பனம் பாளையில் பதனீர் வர பாளையைச் சீவி நசுக்கிப் பக்குவப் படுத்தும் செயல்

இடுக்கு2 - குறுகிய சந்து.

இடுப்பு வலி - பேறுகால வலி.

இடும்பன் -ஒரு நாட்டார் தெய்வம்.

இடும்பு - பிடிவாதம்.

இடைஞ்சல் - இடையூறு, தொல்லை.

இடையன்புளி - ஆடு மேய்க்கும் இடையர்கள் தயாரிக்கும் குழம்பு.

இணுக்கு - சிறிய அளவில் பெயர்த்து எடு.

இத்துணூண்டு - மிகச் சிறிய அளவு.

இத்துப்போச்சு - இற்றுப் போய்விட்டது.

இந்தா - இதோ.

இப்பம் - இப்போது.

இம்புட்டு - இவ்வளவு.

இம்மி - நுண்ணிய அளவு, 1/1075200 என்னும் பின்ன எண்.

இருசால் -நிலத்தீர்வை, நிலவரி.

இருசி - வயது வந்தும் பூப் பெய்தாத பெண்.

இருசு1 - தொடை இடுக்கு,

இருசு2 - வண்டியின் அச்சு.

இருட்டுகசம் - கும்மிருட்டு.

இருத்தல் - வடிகட்டல்.

இருத்து - உட்கார வை, உட் செலுத்து.


இருப்பு - சேமிப்பில் இருக்கும் பணம்.

இருப்புக் கட்டுதல் - வரவு செல வுக் கணக்கில் செலவு போக மீதி யிருக்கும் தொகையைக் குறித்தல்.

இரு பூ - இரண்டு போகம் சாகுபடி.

**இலைக் கொழுக்கட்டை** - மாவைப் பூவரசு இலையில் வைத்து மடித்து வேக வைத்து எடுக்கும் கொழுக்கட்டை வகை.

**இலைவாழை** - குலைதள்ளாத இலைக்கு மட்டுமான வாழை வகை.



இலுக்காஞ்சட்டி

**இலுக்காஞ்சட்டி** - கார்த்திகை மாதம் வீட்டின் முன் வைக்கப் படும் சிறிய மண் அகல் விளக்கு.

**இழப்புளி** - மரப் பலகையை இழைக்கும் தச்சர் கருவி.

**இழுச்சி** - நீக்கி, வரித் தள்ளிக் கொடுத்தல்.

**இழுப்பு1** - இழுத்தல்.

**இழுப்பு2** - வலிப்பு.

**இழுவு-தல்** - தடவுதல், தேய்த்தல்

**இளக்கம்** - இளகுதல், இளகிய தன்மை.

**இளசு** - முற்றாதது, இளமை.

**இளநாக்கடித்தல்** - முன் பின் யோசியாது உறுதியின்றி வாக் களித்தல்.

**இளய குடியா** - இரண்டாவது மனைவி, இரண்டாம் தாரம்.

**இறங்கொத்தி** - ஒருவர் நிலத்தின் உரிமையாளரிடம் பணம் கொடுத்து நிலத்தின் பயிர் செய்யும் உரிமையைப் பெற்றுக்கொள்ளும் முறை, ஒத்தி.

**இறங்கொத்திப் பத்திரம்** - நிலத்தின் உரிமையாளரிடம் பணம் கொடுத்துப் பயிர் செய்யும் உரிமையைப் பெற்றுக் கொள்ளும் ஆவணம்.

**இறப்பெட்டி** - குளம், வாய்க் காலிருந்து தண்ணீர் இறைக்கப் பயன்படுத்தும் பனை நாரினால் முடையப்பட்ட பெட்டி போன்ற கருவி.

**இறுக்கம்1** - புழுக்கம்.

**இறுக்கம்2** - அழுத்தம்.

**இன்னவேலை** - குறிப்பிட்ட வேலை.

**இன்னாரு** - இவர் என்று குறிப் பிடப்படுபவர்

**இனாம்** - வரி விதிப்பிலிருந்து விலக்கு.

**இனாம் குளம்** - வரி விதிப் பிலிருந்து விலக்குப் பெற்ற குளம்.

**இனாம்தார்** - வரி விதிப்பிலிருந்து விலக்குப் பெற்றவர்.

**இனிப்புச் சேவு** - ஒரு வகை இனிப்புப் பலகாரம்.

**இறவக்காடு** - கிணற்றுப் பாசனம் உள்ள இடம்.

## ஈ

**ஈக்கு** - தென்னை ஓலையின் நடு நரம்பு.

**ஈக்குமாறு** - தென்னை ஈர்க்கு களால் ஆன துடைப்பம்.

**ஈச்ச** - ஈ.

**ஈச்சர்** - ஈஸி சேர். ***(easy chair)***

**ஈச்சல்** - ஈ.

**ஈடு1** - இடுகை, இடுதல். *(இட்லி இன்னும் இரண்டு ஈடு எடுத்து விட்டால் எல்லோரும் சாப்பிட லாம்)*

**ஈடு2** - மாற்று, பதிலி. *(நகையை ஈடு வைச்சுப் பணம் வாங்கணும்)*

**ஈடுசெய்** - மாற்றுச் செய்து சரி கட்டு, மாற்றுச் செய்து நிறைவு செய்.

**ஈத்தம்பழம்** - ஈச்சம் பழம்.

**ஈத்தமாறு** - தென்னை ஈர்க்கு களால் ஆன துடைப்பம்.

**ஈத்து** - மாடு பேறு.

**ஈயச்சட்டி** - ஈயத்தில் செய்த சட்டி.

**ஈயச்செம்பு** - ஈயத்தில் செய்த செம்பு.

**ஈயத்தட்டு** - ஈயத்தில் செய்த தட்டு.

**ஈயப்பத்து** - பித்தளைப் பாத்திரத் தில் ஏற்படும் ஓட்டையை அடைத் தல்.

**ஈயப் பானை** - ஈயத்தில் செய்யப் பட்ட பானை.

**ஈயம் பூசு-தல்** - பித்தளைப் பாத்தி ரத்தில் புளிப்பு உணவுப் பொருட் களை வைக்கும்போது கெட்டுப் போகாமல் இருக்க, பித்தளைப் பாத்திரத்தின் உட்பகுதியில் ஈயத்தை உருக்கிப் பூசு-தல்

**ஈயமாட்டான்** - பிறருக்கு ஏதும் கொடுக்கமாட்டான்.

**ஈரக் கால்** - நீர்ப் போக்குள்ள பகுதியின் அருகில் இருக்கிற நிலம்.

**ஈரங்கி** - ***(hearing)*** வழக்கு மன்றத் தில் வழக்கு விசாரணைக்கு வரும் நாள்.

**ஈரடியாய் இருத்தல்** - தீர் மானிக்க முடியாமல் இரு மனதாக இருத்தல்.

**ஈரப்பசை** - நீர்த் தன்மை.

**ஈரல்** - கல்லீரல்.

**ஈராய்ங்கம்** - சின்ன வெங்காயம், சாம்பார் வெங்காயம்

**ஈரிழைத்துண்டு** - தலை துவட்டும் துண்டு(இரண்டிரண்டு இழைகள் உள்ள கைத்தறித் துண்டு).

**ஈருவலி** - பேன், ஈர் போன்ற வற்றை எடுக்கப் பயன்படும் மரசீப்பு

**ஈருள்ளி** - பார்க்க: ஈராய்ங்கம்.

**ஈவிச்சுக் கொடு-த்தல்** - விகிதாச் சாரப்படி பங்கிட்டுக் கொடுத்தல்.

**ஈளை** - சளி.

**ஈனஞ்சாமி** - ஒரு நாட்டார் தெய் வம்.

**ஈனப்பய** - கீழ்த்தரமானவன்.

**ஈனுதல்** - மாடு கன்று போடுதல்:

## உ

**உக்காந்துட்டா** - பூப்பெய்து விட்டாள், பருவமடைந்து விட் டாள்.

**உக்காரை** - பச்சைஅரிசி, வெல் லம் கலந்து செய்யப்படும் இனிப் புப் பலகாரம்.

**உக்கிராண அறை** - வீட்டில் பல சரக்கு வைக்கும் அறை.

**உக்கு-தல்** - மெலிதல் *(அவள் துக்கத்தில் உக்கிப் போனாள்)*

**உங்க1** - உங்களது.

**உங்க2** - சாப்பிட.

**உச்சாணிக்கொப்பு** - மரத்தின் உச்சிக்கிளை*(உச்சாணிக் கொப்பி லிருந்து விழுந்தான்)*

**உச்சி1** - உயரே.

**உச்சி 2**- தலை வகிடு.

**உச்சிக்குழி** -பிறந்த குழந்தைக்குத் தலையின் நடுப் பகுதி முழுமை யான வளர்ச்சி பெறாத நிலையில் ஓடு இல்லாமல் தோலால் மட் டுமே மூடியிருக்கும் மிருதுவான உச்சந் தலைப் பகுதி.

**உச்சிப்பொழுது** - நண்பகல் நேரம்.

**உச்சிமோடு** - கூரையின் இரு பக்க மும் சேருமிடம்.

**உசத்தி** - உயர்வு.

**உசத்து** - உயர்த்து.

**உசரம்** - உயரம்.

**உசிர்தலம்** - உயிர் நிலை.

**உசிலை** - ஒரு வகை மரம்.

**உசுப்பு-தல்** - தூக்கத்திலிருந்து எழுப்புதல், உயிர்ப்புறச் செய்தல்.

**உசுரு** - உயிர்.

**உடமரம்** - உடைமரம், வேலமர வகை.

**உடுமாத்து** - மாற்றுத்துணி.

**உடுப்பு** - மேல்சட்டை.

**உடை** - பார்க்க: உடமரம்.

**உடை ஆப்பு** - விறகுக் கட்டை யைப் பிளக்கப் பயன்படுத்தும் இரும்பு ஆப்பு.

**உண்ணி** - ஆடு, மாடு, நாய் போன்ற மிருகங்களின் மேல் தோலில் ஒட்டிக்கொண்டு இரத் தத்தை உறிஞ்சி உண்டு உயிர் வாழும் சிறிய உயிரினம்.

**உண்டியல்** - வங்கி வசதிகள் அதிகம் இல்லாத அந்த நாட்களில் பிழைப்புத் தேடிக் கொழும்பு போன்ற வெளி நாடுகளுக்குச் சென்றவர்கள் அங்குத் தாங்கள் சம் பாதித்த பணத்தைத் தமிழ்நாட்டி லிருக்கும் தங்கள் சொந்தங்களுக்கு அனுப்பக் கையாண்ட முறை. கொழும்புவில் உள்ள உண்டியல் கடையில் பணத்தைச் செலுத்தி னால் போதும் இங்கே உள்ளூரி லுள்ள அவர்கள் உறவினர்கள் உள்ளூர் உண்டியல் கடையில் பணத்தைப் பெற்றுக்கொள்ளுவர். இன்றைக்கு 'டிராப்ட்' மூலம் வங்கிகளில் பணப் பறிமாற்றம் நடப்பது போன்றது இது.

**உண்டியல் கடை** - உண்டியல் மூலம் பணப் பரிமாற்றம் செய்யும் கடை.

**உத்தரம்1** - பதில் சொல்.

**உத்தரம்2** - பங்குனி உத்தரத் திரு விழா.

**உத்தரவாதம்** - ஒருவரால் பொறுப்பு அளிக்கப்படும் செயல்.

**உத்தரவாதி** - பொறுப்பேற்பவன்.

**உத்தி** - விளையாட்டில் எதிர் பக்கத்தில் ஒருவனுக்கு நிகரான துணைவன்.

**உத்திப்பு** - யூகம்.

**உத்திக்கட்டு-தல்** - நாட்டார் விளையாட்டில் கலந்துகொள்ப வர்களை இரு பிரிவாகப் பிரித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் ஒத்த வரைத் தேர்ந்துகொள்ளுதல்.

**உதச்சி** - உதைத்து.

**உதயம்** - அதிகாலைப் பொழுது.

**உதிரிப்பூ** - கட்டப்படாமல் உதிரியாக இருக்கும் பூக்கள்.

**உதுத்து** - உதிர்த்து.

**உதுந்து** - உதிர்ந்து.

**உந்தி** - தொப்புள்.

**உப்பங்காற்று** - கடலில் இருந்து வீசும் காற்று. உப்பங்காற்று பயிர்களை நன்கு வளரச் செய்யும்.

**உப்புதல்** - வீங்குதல்.

**உப்புக்கடலை** - உப்பு, மஞ்சள் கலந்த கரைசலில் நனைத்து வறுத்த மூக்குக்கடலை(கொண்டைக்கடலை)

**உப்புக்கரித்தல்** - உப்புச் சுவை அதிகமாய் இருத்தல்.

**உப்புக்கல்** - சமையலுக்குப் பயன்படுத்தும் கல் உப்பு.

**உப்புக்குத்தி** - குதியங்கால், உள்ளங்காலின் பின்பகுதி.

**உப்புத்தாள்** - மரச்சாமான்களின் மேற்பரப்பைப் பளபளப்பாக்கப் பயன்படுத்தும் சொர சொரப்பான தாள்.

**உப்புமரவை** - உப்பு வைக்கப் பயன்படும் மரப்பாத்திரம்.

**உப்புமாங்காய்** - மாங்காயை சின்னச் சின்னத் துண்டுகளாக வெட்டி உப்புக் கரைசலில் ஊற வைத்துப் பின் வெயிலில் உலர்த்தி எடுத்து வைத்த மாங்காய். பின் தேவைப்படும்போது காய்ந்த மாங்காய்த் துண்டங்களைக் குழம்பு போன்றவற்றில் போட்டுச் சமைப்பர். மாங்காய்ப் பருவக் காலங்களில் இவ்வாறு பதப்படுத்தி வைத்துக் கொண்டால் பருவமில்லாத காலங்களிலும் மாங்காயைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.


**உப்புமூட்டை சுமத்தல்** - நாட்டார் விளையாட்டில் வென்றவனைத் தோற்றவன் முதுகில் சுமத்தல்.

**உம்பளம்** - மானிய நிலமும் அதன் மூலம் கிடைக்கும் வருமானமும்.

**உமிஓடு** - தட்டார் உலைக்கு உமி போட்டு எரிக்கும் ஓடு.

**உரக்குழி** - எருக்குழி.

**உரப்பெட்டி** - உலக்கையால் உரலில் நெல் குத்தும் போது உரலின் வாய்ப் பகுதியிலிருந்து அரிசி சிதறாமல் இருக்க உரலின் வாய்ப் பகுதியில் வைக்கும் நார்க் கூடை.



**உருக்குத்து** - பெரியம்மை நோய்க்குப் போடப்படும் தடுப்பூசி.

**உருட்டுபெரட்டு** - தந்திரமாக ஏமாற்றுதல், தில்லுமுல்லு செய்தல்.

**உருத்து** - அன்பு. *(அவன் மேல் உனக்கு உருத்திருந்தா நீ செய்ய வேண்டியதுதானே)*

**உருப்படி1** - கணக்கிடக் கூடிய பொருள். *(எத்தனை உருப்படி வெளுக்கப் போட்டாய்?)*

**உருப்படி2** - பயனுள்ள பொருள் *(உருப்படியாக என்னிடம் எதுவுமில்லை)*

**உருப்படியாய்1** - பயனுள்ள வகையில்.

**உருப்படியாய்2** - யாதொரு பழுதுமின்றி *(ஆள் உருப்படியாய் வந்துசேர்ந்தான்)*

**உருப்படு** - நல்ல நிலையை அடை.

**உருமா** - தலையில் கட்டும் பட்டுத் தலைப்பாகை.

**உருவேத்துதல்** - மந்திரம் சொல்லி உருவை வெளிக் கொணர்தல்.

**உருளி** - வாய் அகன்ற உருண்டையான வெண்கலப் பாத்திரம்.

**உருளோசு** -கடிகாரம்.

**உருளை** - கமலையில் வால் கயிற்றை தாங்கி உருளும் மரத்தாலான உருளை.

**உலாத்துதல்1**- உலவுதல், இங்கும் அங்கும் நடத்தல்.

**உலாத்துதல்2** - ஈரத்துணியை விரித்துப் பிடித்தல் *(ஈர வேட்டியை உலாத்திக் கொண்டுபோகிறான்)*

**உலுக்கு-தல்** - குலுக்குதல், ஆட்டுதல்.

**உலுப்பு-தல்** - அசைத்தல், அசைத்து உதிர்த்தல்.

**உலை1** - கொல்லன் பட்டறை.

**உலை2** - பிரி, கலை *(இலைக் கட்டை உலைச்சி வை).*

**உலை3** - சோறு சமைக்கக் கொதிக்க வைக்கும் தண்ணீர்.

**உலைகீறி** - தட்டார் உலையில் பயன்படுத்தும் இடிக்கி.

**உலைமூடி** - சோறு சமைக்கப் பயன்படும் பானையின் மேல் மூடி.

**உலை வைத்தல்** - ஒருவனுக்குத் தீங்கு செய்தல். கெடுதல் செய்தல்.

**உவகாரம்** - உதவி, உபகாரம்.

**உவத்திரியம்** - தொந்தரவு, தொல்லை.

**உவர்மண்** - துணி வெளுக்கப் பயன்படும் உப்புச் சுவை கொண்ட மண்.

**உழக்கு** - ஒரு படியில் (முகத்தளவு) நான்கில் ஒன்று1/4 படி.

**உள்காய்ச்சல்** - உடம்பைத் தொட்டால் சூட்டை உணர முடியாதபடி உள்ளுக்குள் காயும் காய்ச்சல்.

**உள்காயம்** - விபத்து போன்றவற்றில் இரத்தக் காயம் இல்லாமல் உடலின் உள்ளே ஏற்படும் காயம்

**உள்கூடு** - கிணறுபோன்றவற்றின் உள் அளவு.

**உள்கை** - அந்தரங்கமாய், இரகசியமாக.

**உள்நாக்கு** - உள்வாயில் தொண்டைக்குழியை இரண்டாகப் பிரிக்கும் சிறு நாக்கு.

**உள்பாடி** - பெண்கள் மார்பில் அணியும் உள்ளாடை.

**உள்பாவாடை** - பெண்கள் அரையில் அணியும் உள்ளாடை.

**உள்வாய்** - ஏரி, குளம் போன்றவற்றின் உட்பக்கம்.

**உள்வெட்டு** - மரத்தடியின் உட்பகுதிப் பலகை.

**உள்ளடி-யாய்** - இரகசியமாய், கமுக்கமாய்.

**உள்ளபடி** -உண்மையாக.

**உள்ளி** - சின்ன வெங்காயம்.

**உளப்பு-தல்** - குழப்புதல்.

**உளறு** - தொடர்பில்லாமல் பேசுதல்.

**உளி** - தச்சர் கருவி.

**உளுக்கு** - சுளுக்கு.

**உளுத்துப் போதல்**- செல்லரித்துப்போதல்.

**உளுந்தஞ்சோறு** - புழுங்கல் அரிசி, உளுந்து, வெந்தயம், பூண்டு, சுக்கு, தேங்காய் சேர்த்துப் பொங்கும் சோறு.

**உளுந்தங்களி** - உளுந்த மாவில் நல்லெண்ணெய், கருப்பட்டி சேர்த்துச் செய்யும் களி.

**உளுந்தங்கஞ்சி** - உளுத்தம் பருப்பில் செய்யும் கஞ்சி.

**உள்ளைச்சல்** - மனத்தில் தாங்க முடியாத வேதனை, வருத்தம்.

**உளைதல்** - குடைச்சல், நோவடைதல்.

**உறக்கச்சடவு** - தூங்கி எழுந்த பின்னும் உள்ள சோர்வு, தூக்கம் வந்துவிட்டதன் அறிகுறி.

**உறக்காட்டு-தல்** - உறங்காமல் படுத்தும் குழந்தையை உறங்க வைத்தல், நிலா காட்டி, பூச்சாண்டி காட்டிச் சாப்பிட வைத்துத் தாலாட்டிக் குழந்தையைத் தூங்க வைக்கும் செயல்.

**உறி** - வீடுகளில் பால், வெண்ணெய் முதலியவற்றை வைத்திருக்கும் பானைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு உத்தரத்தில் கயிறு அல்லது சங்கிலியில் தொங்க விடப்பட்டிருக்கும் கூம்பு வடிவ அமைப்பு.

**உறுத்து** - அக்கறை.

**உறைகாய்** - பழுக்காத காய்.

**உன்னி** - எட்டி, எம்பி.

## ஊ

**ஊக்கு** - ஆடைகளில் பித்தானுக்குப் பதில் பயன்படுத்தும் கொக்கி (*safety pin*).

**ஊச்சி** - ஊசி கூர்மை. *(கம்பை ஊச்சியா சீவு)*

**ஊசித் தொண்டை** - உணவை கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கும் சிறியதாக உள்ள தொண்டை. *(ஊசித் தொண்டை ஊருணி வயறு)*

**ஊசி போடுதல்** - டாக்டர் உடம்பில் ஊசியால் குத்தி மருந்தை உட்செலுத்துதல்.

**ஊசிமிளகாய்** - மிளகாய் வகை, காரம் அதிகமுள்ள சிறிய வடிவில் உள்ள மிளகாய்.

**ஊசிவெடி** - சிறிய வெடி வகை.

**ஊசுதல்** - சமைத்த உணவு கெட்டுப் போதல்.

**ஊட்டி** - கழுத்து.

**ஊட்டு** - அம்மன் கோயில் திரு விழா.

**ஊட்டுப் புரை** - உணவு உண்ணு மிடம்.

**ஊடு1** - ஊடு பாவு.

**ஊடு 2**- வீடு.

**ஊடுபயிறு** - ஒரு பயிரின் ஊடே பயிரிடப்படும் வேறு ஒரு பயிர்.

**ஊடே** - இடையே.

**ஊணிக்கம்பு** - மாட்டு வண்டியில் பாரங்கள் விழாமல் இருக்கப் பயன்படுத்தப்படும் அளி பலை கையைக் கட்டுவதற்கு வைக்கப் பட்டிருக்கும் கம்பு.

**ஊணு** - நடு, நட்டுவை.

**ஊணுகால்** - விதை ஊணும் வயல்.

**ஊத்தங்குழி** - வாழைக் குலையைப் பழுக்க வைக்கும் இடம்.

**ஊத்தப்பல்** - துலக்காத அழுக்குப் பல்.

**ஊத்தம்** - வீக்கம்.

**ஊத்தம் போடுதல்** - வாழைக் காயைப் பழுக்க வைக்கும் முறை.

**உத்தவாய்** - பல் துலக்காத அழுக்கு வாய்.

**ஊத்தாம்பெட்டி** - பலூன்.

**ஊத்து1** - ஊற்று.

**ஊத்து2** - ஊதல்.

**ஊத்தை** - அழுக்கு.

**ஊதக்காத்து** - குளிர்ந்த காற்று.

**ஊதல்** - குளிர், குளிர்ந்த.

**ஊதா** - நீல நிறம்.

**ஊதிப்போதல்** - வீங்கிக் காணப் படுதல்.

**ஊதுகாமாலை** - ஒரு வகைக் காமாலை நோய்.

**ஊந்து போதல்** - தவழ்ந்து போகுதல்.

**ஊம அடி** - இரத்த காயம் உண் டாகாத அடி.

**ஊமக்காயம்.** - விபத்து முதலிய வற்றால் ஏற்படும் இரத்தம் வராத காயம்.

**ஊமக்குசும்பு** - ஒருவர் அறியா மல் அவரைப் பற்றிக் கோள் சொல்லுதல்.

**ஊமச்சி** - வாய் பேச இய லாதவள்.

**ஊமயன்** - வாய் பேச இயலாத வன்.

**ஊர்ச்சாப்பாடு** - திருமணம், சடங்கு, கருமாதி போன்ற விசே டங்களுக்கு ஊரில் உள்ள அனைத்து உறவுகளுக்கும் சாப் பாடு போடும் முறை.

**ஊர்வழி போதல்** - வெளியூர் செல்லுதல்.

**ஊரடி நிலம்** - ஊரை ஒட்டிய வயல்.

**ஊராங்கவலை** - அடுத்தவரைப் பற்றிய கவலை.

**ஊரான்** - அந்நியன்.

**ஊழியம்**- சம்பளமின்றிப் பார்க் கும் வேலை.

**ஊளை** - கெட்டுப் போன தின்பண்டத்திலிருந்து வரும் கெட்ட வாடை.

**ஊளைச்சதை** - பெருகித் தளர்ந்த சதை.

**ஊறல்** - அரிப்பு, நமைச்சல்.

**ஊனீர்** - எரியும் விறகிலிருந்து வடியும் நீர்.

## எ

**எக்கச்சக்கம்** - ஏராளமாக, வெகுவாக.

**எக்களித்தல்** - குமட்டுதல்.

**எக்காளம்** - ஏளனம், தாழ்ச்சியாக எண்ணுதல்.

**எக்காளப்பேச்சு** - மதிக்காமல் கேலி பேசுதல்.

**எக்கு** - வயிற்றை உள் இழுத்தல்.

**எக்குத்தப்பாய்** - எதிர்பாராமல்.

**எகன மொகனயா** - எதுகை மோனையாய், சாதுரியமாய்.

**எகுருதல்** - துள்ளுதல்.

**எங்கன** - எங்கே.

**எச்சிக்கலத்தனம்** - இழிவான செயல், எச்சில் பொருளுக்கு அலையும் செயல்.

**எசலிப்பு** - பிணங்குதல், வேண்டியவர் இருவர் வம்புக்குச் சண்டை போடுதல்.

**எசலுதல்** - சண்டையிடுதல்.

**எட்டக்க** - தூரமாய், தள்ளி, விலகி.

**எட்டடிவிரியன்** - விரியன் பாம்பு வகை.

**எட்டி** - எம்பி.

**எட்டு1** - தப்படி *(இங்கிருந்து நாலு எட்டு வச்சா வீடு).*

**எட்டு2** - எட்டுதல்.

**எடக்கு** - நையாண்டி கலந்த கேலிப் பேச்சு.

**எடக்குடி** - இடையர் வாழும் பகுதி.

**எடச்சி** - இடைப் பெண்.

**எடத்தை** - இடப்பக்கம்.

**எடயன்** - இடையன்.

**எடர்** - சருகு மான் (முயல்) பிடிக்கப் பயன்படும் கண்ணி (பொறி).

**எடுப்பு** - கவர்ச்சி, அழகு.

**எடுப்புச்சோறு** - விருந்துக்கு வர இயலாத உறவினருக்கு அனுப்பும் சாப்பாடு.

**எடுப்புத்தண்ணி** - பயிர் நட்ட உடன் சாய்ந்து விடும். அதை நிமிர விடும் தண்ணீர்.

**எடுபட்டுப்போதல்** - திக்கற்றுப் போதல். *(அந்த குடும்பமே இப்பம் எடுபட்டுப் போச்சு)*

**எடுபிடி** - சில்லரை (சின்னச் சின்ன) வேலைகள் செய்பவன்.

**எடுத்துக்கூட்டிச் செய்தல்** - இயல்பாய் இல்லாமல் சிறப்பு முயற்சி எடுத்துச் செய்தல்.

**எடுத்துக் கூட்டிச் சொல்லுதல்** - நடக்காததை கற்பனை கலந்து நடந்தது போல் சொல்லுதல்.

**எடை கட்டுதல்** - பாலில் தண்ணீர் சேர்த்தல்.

**எணல்** - நிழல்

**எத்தன்** - ஏய்ப்பவன்.

**எத்தனம்** - ஆயத்தம்.

**எத்தி** - உதைத்து.

**எத்து** - உதை.

எத்துவாளி - ஏமாற்றுக்காரன்.

எதுத்தாப்புல - எதிரே, எதிரில்.

எதிர் பேச்சு - பதில் பேச்சு.

ஏப்பித்தல் - ஒப்படைத்தல்.

எம்புட்டு - எவ்வளவு.

எமட்டன் - அசகாயசூரன்.

எரிதுரும்பு - விறகு.

எரிப்பு - உறைப்பு, காரம்.

எரு*1* - உரம்.

எரு *2*- வறட்டி.

எருக்கிடங்கு - . உரக்குழி.

எருக்குழி - பார்க்க: எருக்கிடங்கு.

எருவுதல் - பயப்படுதல்,அச்சம் கொள்ளல்.

எருவுணி - கோழை, பயம் மிகக் கொள்பவன்.

எலங்கொடி - பசு ஈனும்பொழுது வெளிப்படும் நஞ்சுக் கொடி.

எழப்புளி - இழைப்புளி, தச்சர் கருவி.

எழவு - இறப்பு.

எழவெடுத்தவ - வசைச் சொல், பழிப்புச் சொல்.

எழுத்துக்குத்து - எழுதப்பட்ட ஒப்பந்தம் அல்லது ஆவணம்.

எளக்கம் - குறைந்த அளவு புத்தி பேதலிப்பில் தானே பேசிக் கொண்டிருப்பது.

எறக்கம்*1* - சாய்வான கூரை. ஓட்டு இறக்கம்,

எறக்கம்*2* - சரிவாக இறங்கும் பாதை.

எறப்பெட்டி - மடையேறிப் பாய முடியாத நீரை வாய்க்காலில் இறைத்து விடப் பயன்படும் சாதனம்.

எனாம் - இனாம்.

எறிப்பொலி - தூசு போக்க நெல்லை முறத்தில் அள்ளி எறிந்து களத்தில் நீட்டமாகத் தூற்ற குவியும் நெற்குவியல். *(எறிப் பொலி போடு அப்பதான் நெல்லு சுத்தமாகும்)*

## ஏ

ஏகதேசம் - ஏறக்குறைய.

ஏகப்பட்ட- ஏராளமான. நிறைய.

ஏசு - திட்டு, இகழ்.

ஏட்டு - தலைமைக் காவலர்.

ஏட்டுத் தவசுப்பிள்ளை - தலைமைச் சமையல்காரர்.

ஏடு படித்தல் - குறிப்பிட்ட நாட்டார் கதையினை ஏட்டின்படி தாளம் தப்பாமல் படிப்பது.

ஏண்ட உதவி - இயன்ற உதவி.

ஏண்டது - இயன்றது.

ஏணைக்கு கோணை - ஏட்டிக்குப் போட்டி.

ஏத்தம் - திமிர் கொண்ட தன்மை.

ஏத்தம் பழம் - வாழைப் பழ வகை.

ஏத்தெடுத்தல் - ஏற்று நடத்தல்.

ஏந்தல்*1* - தாங்கல்.

ஏந்தல்*2* - உதவி.

எந்தி - தாங்கி.

ஏந்திவிடு - தூக்கிவிடு, தாங்கி விடு.

ஏந்து*1* - தாங்கு.

ஏந்து *2*- நீட்டு.

ஏப்பித்தல் - ஒப்படைத்தல்.

**ஏலமாட்டாமல்** - இயலாமல்.

**ஏலல** - இயலவில்லை, முடிய வில்லை.

**ஏலும் மட்டும்** - இயலும் வரை.

**ஏலே** - ஒருவரை அழைக்கும் சொல். விளிச் சொல்.

**ஏவல்** - ஒருவனை ஒழிக்க துர் தேவதையை மந்திரம் வைத்து ஏவுதல்.

**ஏவல் பிசாசு** - மந்திரம் வைத்து ஏவிய பேய்.

**ஏழலக்கிழங்கு** - மரவள்ளிக் கிழங்கு (இதன் இலை விரல்களை விரித்த கை போல் ஏழு பிரிவாக இருக்கும். அதனாலேயே இப்படி அழைக்கப்படுகிறது.

**ஏழாம் பொருத்தம்1** - பொருத் தம் இன்மை, தீராப் பகை.

**ஏழாம் பொருத்தம்2** - இரண்டு பேருக்கும் இடையேயான முரண் பட்ட நிலை.

**ஏறுக்குமாறு** - ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதது, தாறுமாறு.

**ஏறு வெயில்** - சூரியன் உச்சிக்கு ஏறும் போதைய வெயில்.

**ஏனம்** - சமையல் பாத்திரம்.

**ஏனோதானோ** - தான்தோன்றித் தனம்.

## ஒ

**ஒக்கலை** - விலா, இடுப்பு.

**ஒக்குடு** - பழுது நீக்கு.

**ஒங்கிட்ட** - உன்னிடம்.

**ஒசக்க** - மேலே, உயரே.

**ஒசர** - உயரே, மேலே.

**ஒசரம்** - உயரம்.

**ஒட்டு1** - முற்றாக.

**ஒட்டு2** - ஒத்த வயதுக்காரர்கள்.

**ஒட்டட** - நூலாம்படை.

**ஒட்டாங்காளை** - காளை இன வகை.

**ஒட்டிக்கிரெட்டி** - ஒன்றுக்கு இரண்டாக.

**ஒட்டியாணம்** - இடையில் அணி யும் ஆபரணம்.

**ஒட்டுப்புல்** - உடையில், உடம்பில் ஒட்டிக்கொள்ளும் புல் வகை.

**ஒட்டுப்பொறுக்கி** - எச்சிற் பொறுக்கி.

**ஒட்டுவாரொட்டி** - தொற்று நோய்.

**ஒடப்பிறந்தா** - உடன் பிறந்த சகோதரி.

**ஒடம்படி** - உடன்படிக்கை.

**ஒடமஸ்தன்** - உரியவர், உரிமைக் காரர்.

**ஒடிசல்** - ஒல்லியாக இருப்பவன்/ ள்.

**ஒண்ணடி மண்ணடியா** - ஒரு சேர, ஒன்றாய் சேர்ந்து.

**ஒண்டி** - த.னியாக.

**ஒத்தடம்** - உடலின் வீக்கம் வலி போனறவற்றைக் குறைக்கச் சூடான எண்ணெய் தோய்ந்த அல் லது வெந்நீரில் நனைத்த துணி யால் உடம்பில் ஒத்தியெடுத்தல்.

**ஒத்தணம்** - பார்க்க: ஒத்தடம்.

**ஒத்தமாட்டு வண்டி** - ஒற்றை மாடு இழுக்கும் வண்டி.

**ஒத்தாசை** - உதவி.

**ஒத்தி** - சொத்தை அனுபவிக்கும்

உரிமையுடன் கூடிய அடமானம், குத்தகை.

**ஒத்து** - நாகசுர சுருதி.

**ஒத்துப்போதல்** - இருவரும் மனம் ஒன்றி நடந்துகொள்ளுதல்.

**ஒத்தூதி** - ஒருவரின் பேச்சுக்கு ஆமாம் சாமி போடுபவர்.

**ஒத்தை** - ஒற்றை, தனி.

**ஒத்தைக்கொத்தை** - ஒண்டிக்கு ஒண்டி, நேருக்கு நேர்.

**ஒத்தையா ரெட்டையா** - ஒரு நாட்டார் விளையாட்டு.

**ஒத்தேல**- தனிமையில், தனியாக.

**ஒதுக்கல்** - 16ஆம் நாள் காரியத்துக்கு முந்திய நாள் நடக்கும் சடங்கு. அன்று வீட்டை மெழுகிச சுத்தப்படுத்துவர். திதி கொடுப்பவர் விரதமிருந்து மறுநாள் திதி கொடுக்க வேண்டும். இதே நடைமுறை ஒவ்வொரு ஆண்டும் திதி கொடுக்கும் போதும் கடைப்பிடிக்கப்படுவது மரபு.

**ஒதிக்கிவைத்தல்** - மனைவியை விட்டுப்பிரிதல், விவாகரத்து செய்தல்.

**ஒதுங்கு-தல்** - சிறுநீர் கழிக்க மறைவிடமாய் ஒதுங்குதல்.

**ஒப்பு** - ஒப்பாரி.

**ஒப்புக்கு** - மனப்பூர்வமாக இல்லாமல் *(அவன் ஒப்புக்கு கூட வந்தான்)*.

**ஒப்பேத்துதல்** - இருப்பதை வைத்துச் சமாளித்தல்.

**ஒப்பேறாது** - சரியாகாது.

**ஒப்போலை** - உடன்படிக்கைச் சீட்டு.

**ஒயத்து** - மேலே தூக்கு.

**ஒரப்பு** - காரம்.

**ஒராளம் வேலை** - ஓர் ஆள் ஒரு நாளில் செய்யும் வேலை.

**ஒருக்க** - ஒருமுறை.

**ஒருக்களிச்சுப்படு** - ஒருபக்கமாக சாய்ந்து படு.

**ஒருசாச்சி** - ஒருபக்கமாய் சாய்த்து.

**ஒருபாகம்** - நீட்டிய இருகை அளவு.

**ஒரு பூ** - ஒருபோகச் சாகுபடி, ஆண்டுக்கு ஒரு முறை விளைவு.

**ஒரேவாக்குல** - அளவுக்கு அதிமாக, ஒரேயடியாய்.

**ஒலுங்கு** - கொசுவின் வகை.

**ஒழுக்கறை** - வார்ப்பு இரும்பு.

**ஒழுக்கறைப் பெட்டி** - பணம், நகை போன்ற மதிப்புள்ளவற்றை வைக்கும் இரும்பில் வார்த்த பெட்டி.

**ஒற்றே அடி** - ஒரே அடியில்.

**ஒறக்கச்சடவு** - தூக்கக் கலக்கம்.

**ஒறச்சி** - உரக்க, சத்தமாக.

**ஒறண்ட** - ஒரு இடத்தில், ஒரு பக்கத்தில்.

**ஒன்னுக்குமத்தது**.- ஒன்றுக்கும் உதவாதது.

**ஒன்றவாடம்** - ஒருநாள் விட்டு ஒருநாள்

**ஒன்னையும்** - ஒன்றையும்.

## ஓ

**ஓங்கரித்தல்** - வாந்தி பண்ணுதல்.

**ஓங்கரிப்பு** - வாந்திக் குணம் *(வெங்காயத்தை மோந்தால் எனக்கு ஓங்கரிக்கும்)*.

**ஓஞ்சத்தியமா** - உன் மேல் சத்தியம் என்று சத்தியம் செய்தல். *(ஓஞ்சத்தியமா எனக்குத் தெரியாது)*

**ஓஞ்சிட்டு** - ஓய்ந்து விட்டது.

**ஓட்டஞ்சாட்டாமா** - தடபுடலாய்.

**ஓட்டாஞ்சில்லு** - உடைந்த மண்பானை ஓடு.

**ஓட்டாண்டி** - செல்வம் அனைத்தும் இழந்த ஒன்றும் அற்றவன்.

**ஓட்டு** - செலுத்து.

**ஓட்டு இறக்கம்** - ஓடு போட்ட சாய்வான கூரை.

**ஓட்டுச் சாய்ப்பு** - பார்க்க: ஓட்டு இறக்கம்.

**ஓட்டை** - துளை, துவாரம்.

**ஓட்டை உடைசல்** - உடைந்த பழைய பொருள்கள்.

**ஓதம்** - விரை வீக்கம்.

**ஓந்தான்** - ஓணான்.

**ஓந்தி** - ஓணான், பச்சோந்தி.

**ஓப்படச்சி** - கணவனின் சகோதரர்களின் மனைவி.

**ஓயாது** - முடியாது, முடிவு உண்டாகாது.

**ஓயாம** - அடிக்கடி,

**ஓர்மை** - நினைவு, ஞாபகம்.

**ஓராட்டு** - தாலாட்டு.

**ஓல பட்டை** - பனை ஓலையில் செய்த பட்டை

**ஓலப்பெர** - ஓலைப்புரை, ஓலைக் குடிசை.

**ஓவியம்** - அழகற்று, முறையற்று இருத்தலைப் பரிகசித்தல்.

## க

**கக்கம்** -அக்குள். *(கம்பைக் கக்கத்தில இடுக்கிட்டு வாரான் பாரு).*

**கக்குதல்** - வாந்தியெடுத்தல்.

**கக்கட்டி** - கண் நோய்.

**கக்கூஸ்** - கழிப்பறை.

**கங்கணம்** - சுடலைசாமி கொண்டாடி கையில் தரித்திருக்கும் காப்பு, வளையல்.

**கங்கணம் கட்டுதல்** - ஒரு காரியத்தைச் செய்து முடிக்கும் முனைப்புடன் இருத்தல்.

**கங்களவு** - குறைந்த அளவு.

**கங்காணி** - தொழிலாளிகள் வேலை செய்வதைக் கண்காணிக்கும் கண்காணிப்பாளர், மேஸ்திரி.

**கங்கு** - தீ நாக்கு இல்லாத நெருப்புத் துண்டம், நீறு பூத்த நெருப்பு.

**கங்குகரை** - அளவில்லாமல்.

**கச்சப்பெற** - கம்பி இழுத்துப் பின்னிய தங்கச் சங்கிலி வகை.

**கச்சராபய** - இழிவானவன்.

**கச்சாத்து** - கைச்சீட்டு *(கச்சாத்து இல்லாமல் சரக்கை வண்டியில் ஏத்தமாட்டோம்).*

**கச்சி** - பிணக்கு உண்டாகி இரு குழுக்களாவதைக் குறிப்பது.

**கச்சிக்காரன்** - வாதி அல்லது பிரதிவாதி.

**கச்சைத்துணி** - சலவை செய்யப்படாத நூலினால் *(unbleached)* நெய்யப்படும் துணி. சலவைக்குப் பின் வெள்ளை நிறமாகிவிடும்.

**கசக்கு** *1* - உள்ளங்கையால் அழுந்தத் தேய்.

**கசக்கு2** - கசப்புச் சுவையாய் இருக்கிறது.

**கசடு** - அடிமண்டி. அழுக்கு.

**கசடு-தல்** - வாங்கும் பொருளின் விலயை குறைக்க வாதிடுதல்.

**கசண்டி** - வழுக்கைத் தலை.

**கசம்**- ஆழமான நீர் நிலை.

**கசமுசா** - இரகசியம் ஒன்றைப் பற்றிய ஊர்ப் பேச்சு, ஒழுங்கில் லாமல்.

**கசலி** - கதலி வாழைவகை.

**கசவாளி** - அயோக்கியன்.

**கஞ்சித்தண்ணி** - சோறு வடித்த கஞ்சி.

**கஞ்சப்பிசினி** - கஞ்சன், உலோபி.

**கஞ்சிபோடுதல்** - சலவை செய்த துணிகளுக்குப் பசை போடுதல்.

**கட்டக்காப்பு** - உள்ளே செம்பு கட்டையும் மேலே தங்கத் தகடுமாக அமைந்த வளையல் வகை.

**கட்ட இலை** - வாழை மரத்தில் குலை தள்ளும் முன் வரும் கட்டையான இலை. *(கட்டயிலை வந்துட்டு. இனி குல தள்ளிரும்)*

**கட்டமண்** - இடிந்து அல்லது மழையில் கரைந்து கட்டையாய்ப் போன மண் சுவர், ஒரு வசைச் சொல்.

**கட்டங்காப்பி** - பால் ஊற்றாத காப்பி.

**கட்டளை** - கோவிலில் குறிப்பிட்ட பூசை, அபிஷேகம் போன்ற வற்றை நடத்தப் பெறுகிற உரிமை.

**கட்டளைதார்** - கோயிலில் குறிப்பிட்ட பூசை, அபிஷேகம் போன்றவற்றை நடத்த உரிமை பெற்றவர்.

**கட்டன்ரைட்** - கறாராய். *(எது வானாலும் கட்டன்ரைட்டா பேசுவான்)*

**கட்டாந்தரை** - வரண்டு இறுகிய நிலம்.

**கட்டு1** - செலுத்து *(நாளக்கு வீட்டுத்தீர்வை கட்டணும்)*

**கட்டு2** - உடற்கட்டு.

**கட்டு3** - திருமணம் போன்ற விஷேடங்களில் செய்யும் மரியாதை (செய்முறை).

**கட்டு4** - உதிரிகளைச் சேர்த்துக் கட்டியது, *(புல்லுக் கட்டு, வெத்திலக் கட்டு)*

**கட்டு5** - கட்டுப்பாடு *(என்ன சொல்லியும் அவன் கட்டுக்கு அடங்கமாட்டான்)*

**கட்டுக்குட்டு** - சிறப்பான உடற்கட்டு *(அவள் கட்டுக்குட்டுனு இருக்கா)*

**கட்டுக்குத்தகை** - வயலின் சொந்தக்காரர் பணம் பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட காலத்திற்கு வயலைப் பணம் கொடுத்தவருடைய அனுபவத்தில் விட்டு வைத்தல்.

**கட்டும் செட்டும்** - செழிப்பாகவும் சிக்கனமாகவும் வாழும் தன்மை. *(வாக்கப்பட்டுப் போன இடத்தில அவ கட்டும் செட்டுமா இருக்கா).*

**கட்டுமானம்** -ஊர்க் கட்டுப்பாடு. *(யாரானாலும் ஊர் கட்டுமானப் படிதான் நடக்கணும்)*

**கடக்காத்து** - கடலிலிருந்து வீசும் காற்று.

**கடக்குட்டி** - வீட்டின் கடைசிப் பிள்ளை.

**கடகம்** - பனை ஓலையால் பின்னப்பட்ட பெரிய பெட்டி.

**கடசல்** - கடைசல் வேலை.

**கடத்தெரு** - கடைத்தெரு, கடை வீதி.

**கடப்புரம்** - கடற்கரைப் பகுதி.

**கடம்பு** - சீம்பாலில் வெல்லம் அல்லது சர்க்கரை போட்டுக் காய்ச்சு திரட்டியது.

**கடம்புக்கட்டில்** - கடம்ப மரத்தில் செய்யப்பட்ட கட்டில் *(கடம்புக் கட்டிலில் படுத்தால் உடம்பு வலியெல்லாம் போயிடும்).*

**கடல்குச்சி** - பள்ளிச் சிறுவர்கள் சிலேட்டில் எழுத பல்பம் போல் பயன்படுத்தும் கடலிலிருந்து கிடைக்கும் ஒரு வகைக் கிளிஞ்சல்.

**கடலாடி** மலையாடுதல் - திருமணத் தம்பதிகள் மணமுடித்த ஆறு மாதங்களுக்குள் கடலில் குளிப்பதும் அருவியில் குளிப்பது மான மரபு. நெல்லை வட்டாரத் தில் மணமக்கள் திருமணமான புதிதில் திருச்செந்தூர் சென்று கடலில் குளித்து முருகனை வழி படுதலும் குற்றாலம், பாவநாசம் ஆகிய இடங்களில் அருவியில் குளித்து அங்குள்ள சாமியை வழிபடுதலுமாக தொடர்ந்து வரும் மரபு.

**கடலைப்பணியாரம்** - கார மில்லாத கடலைமாவாலான தின்பண்டம்.

**கடவாபல்** - வாயின் உட்பக்கம் உள்ள கடைசிப் பல்.

**கடாக்கண்ணு** - ஆண் எருமைக் கன்று.

**கடாக்குட்டி** - ஆட்டின் ஆண் குட்டி.

**கடாரி** - இளம் பசு.

**கடாரிக்குட்டி** - பசுவின் பெண் கன்று.

**கடி நாய்** - மனிதரைக் கடிக்கும் தன்மை உள்ள நாய்.

**கடிவாய்** - பாம்பு, தேள் போன்ற நச்சுயிரிகளால் கடிபட்ட இடம்.

**கடிப்பு1** - பனம் பாளையிலிருந்து பதனீர் விரைவாக இறங்குவதற்கு தோதாகப் பாளையை நசுக்கப் பயன்படுத்தும் கருவி.

**கடிப்பு2** - ஆடு மாடு போன்ற வற்றுக்கு ஆண்மைக் நீக்கம் செய்யப் பயன்படுத்தும் கருவி

**கடுக்கா** - முற்றிய நுங்கு.

**கடுக்கா கொடுத்தல்** - தந்திரமாக ஏமாற்றித் தப்பித்தல் *(வாங்கின பணத்தைக் கொடுக்காமல் எத் தனை நாள் கடுக்கா கொடுப்ப?)*

**கடுங்காப்பி** - பால் ஊற்றாத காப்பி.

**கடுத்தம்** - கடினம். *(வயத்து பிள் ளைக்காரி கடுத்தமான வேலை யெல்லாம் செய்யக் கூடாது)*

**கடுத்தல்** - காரத்தன்மையுடன் கூடிய சுவை. *(அடிகுழாய் தண்ணி ரெம்ப கடுத்துகிடக்கு)*

**கடுத்துவாளி** - ஒருவகை விஷஎறும்பு.

**கடுப்பு1** - தேள், தேனீ போன்றவை கொட்டிய இடத்தில் ஏற்படும் தெறிக்கும் வலி.

**கடுப்பு2** - எரிச்சல், *(செஞ்ச தப்பையே திரும்பத் திரும்பச் சொல்லி கடுப்பேத்தாதே)*

**கடுவம் பூனை** - ஆண் பூனை.

**கடுவா** - புலி வகை.

**கண்டந்துண்டமா** - துண்டு துண்டாக.

**கண்டமேனிக்கு** - கணக்கில்லாமல், கண்டபடி.

**கண்ணளவு** - கண்ணல் பார்த்து ஒன்றை மதிப்பிடுதல் *(கண் அளக்காதது கை அளக்கப் போகுது?)*

**கண்ணாப்பை** - கண்அகப்பை, ஜல்லிக்கரண்டி.

**கண்ணாமுட்டை** - கண்விழி.

**கண்ணி1** - இணைப்பு *(சங்கிலியின் கண்ணி விட்டுரிச்சி)*

**கண்ணி2** - பறவை விலங்கு போன்றவற்றை பிடிக்கப் பயன்படும் சாதனம்.

**கண்ணி3** - பூச்சரம் தொடுக்கும் நாரில் கட்டப்படும் பூக்களின் தொகுப்பு. *(ரெண்டு கண்ணிவிட்டு வெட்டும்மா)*

**கண்ணு** - பயிர்க் கன்று *(மாங் கண்ணை பிடுங்காதே)*

**கண்ணுக்குட்டி** - பச்சிளம் கன்று

**கண்ணுபுள்ள செடி** - பீழைப் பூ செடி. வெள்ளையாய்க் கண் பீழையைப் போல் காணப்படும் பூக்களைப் பூக்கும் செடி. *(பொங்கலுக்கு கண்ணுபுள்ள செடியை தலை வாசலில் கட்டுவது வழக்கம்)*

**கண்டதுல பாதி** - அரைப்பங்கு.

**கண்டம்** - உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் தீங்கு. *(பெரிய கண்டத்திலிருந்து உயிர் தப்பியது கடவுள் புண்ணியம்தான்)*

**கண்டமாலை** - கழுத்தைச் சுற்றி உண்டாகும் புண்கட்டி.

**கண்டாப்புல** - பார்த்ததுபோல் *(உன்னைக் கடைதெருவிலே கண்டாப்புல இருந்திச்சே).*

**கண்டிக்கும்** - குணப்படுத்தும் *(தூதுவளை கஷாயம் சளியைக் கண்டிக்கும்).*

**கண்டு** - நூற்பந்து.

**கண்மலர்** - தெய்வப் படிமங்களுக்கு அணியும் வெள்ளி விழி மலர், நேர்த்திக்கடன் செலுத்தும் விழிமலர்.

**கண்மை** - பெண்கள், குழந்தைகள் குளுமைக்காகவும் அழகுக்காகவும் கண்ணில் இட்டுக் கொள்ளும் மை.(செய்முறை: கையாந்தகரை (கரிசலாங்கண்ணி )இலையின் சாறு எடுத்து அதைப் புது மண் உலைமூடி அல்லது சட்டியின் அடிப்பக்கத்தில் பூசவும். சாறு எடுத்த பின் உள்ள சக்கையோடு சிறிது தண்ணீர் சேர்த்து மறுபடியும் சாறு எடுக்கவும். அதைச் சட்டியின் உள் ஊற்றி, விளக்கெண்ணெய்யில் துணி திரி இடப்பட்ட விளக்கை ஏற்றி அந்த நெருப்பால் சட்டியைச் சூடேற்ற வேண்டும். சூடு ஏறஏற சட்டியின் அடிப்பக்கத்தில் புகை கரியாய்ப் படியும். இப்படிப் படிந்த புகைக்கரியை ஓலைத் துணுக்கால் சுரண்டிச் சேகரித்துப் பசும்வெண்ணெயில்

அல்லது விளக்கெண்ணெய்யில் குழப்பிக், கண்மை கரண்டையில் சேமித்து வைத்துக்கொள்ளவும். தேவைப்படும்போது பயன் படுத்திக்கொள்ளலாம். இது கண்களுக்கு அழகும் நலனும் தரும்)

**கணக்கு** - பூசாரி (சாமி) சொல்லும் நல்வாக்கு, குறி சொல்லுதல் *(தொலஞ்சி போன நகையைப் பத்திநாராயணசாமி கோவிலிலே கணக்குக் கேக்கணும்).*

**கணப்பு** - குளிர் காய்வதற்கு உண்டாக்கும் நெருப்பு.

**கணுசம்** - நிறைய.

**கணை** - மண்வெட்டி, கோடரி போன்றவற்றின் கை.

**கத்திக்கப்பல்** - சிறிய தாளில் சிறுவர்கள் செய்யும் விளையாட்டுக் கப்பல், காகிதக்கப்பல்

**கத்திக்கம்பு** - தொரட்டிக்கம்பு.

**கத்திக்கூடு** - இடுப்புக் கத்தியை வைக்கும் தோலில் செய்யப்பட்ட உறை.

**கதம்பம்** - பலவகைப் பூக்களைச் சேர்த்துக் கட்டிய பூச்சரம்.

**கதலி** - வாழை வகையில் ஒன்று.

**கதிக்க** - நேராய் *(இப்படி கதிக்க நடந்தால் ஊர் வந்துவிடும்)*


**கதிர்பண்ணு-தல்** - கேழ்வரகு போன்றவற்றை அறுவடை செய்தல்.

**கதை வாசிப்பு** - குறிப்பிட்ட கதையை ஏட்டிலுள்ளபடி தாளம் தப்பாமல் வாசித்தல்.

**கப்பக்கால்** - வளைந்த கால்.

**கப்பயபிளந்துகிட்டு** - தொடையை அகலமாய் விரித்த படி... இப்படி உட்கார்வது கிராமங்களில் அருவருப்பான செயலாகக் கருதப்படும். *(வெக்கமில்லாம எப்படி கப்பய பிளந்துகிட்டு உக்காந்திருக்கா பாரு).*

**கப்பரை** - திருநீற்றுக் கலம்.



**கப்பி** - மாவு போன்றவற்றைச் சலித்த பின் சல்லடையில் தங்கும் எச்சம்.

**கப்பு** *1* - கொள்ளுமளவு வாயிலிட்டு விழுங்குதல் *(நல்ல பசி, அதுதா எல்லாத்தையும் கப்பு கப்புன்னு விழுங்குதான்).*

**கப்பு** *2* - கிளை.

**கப்பு சிப்பு** - ஏதும் பேசாமல், மௌனமாக.

**கப்பை** - இரண்டு தொடைகளுக்கும் இடைப்பட்ட பகுதி.

**கம்பங்களி** - கம்மம் புல்லில் செய்யும் களி.

**கம்புவிளையாட்டு** - சிலம்பு வித்தை, சிலம்பாட்டம்.

**கம்மம் புல்** - கம்பு தானியம்.

**கம்மல்** *1*- மழைக்கான கூறு, மந்தாரம் *(வானம் கம்மலா இருக்கு*

*காயப்போட்ட நெல்ல சீக்கிரம் அள்ளு).*

**கம்மல்2** - குறைவு. *(உன்னவிட அவ கொஞ்சம் நெறம் கம்மல் தானே).*

**கம்மல் 3**- குரல் அடைப்பு *( ஏன் சத்தம் கம்மலா இருக்கு தொண்ட சரியில்லையா).*

**கம்மல் 4**- தோடு, காதணிவகை.

**கம்மாளன்** - இரும்பு வேலை செய்யும் ஆசாரி.

**கம்முக்கூடு** - பார்க்க: கக்கம்.

**கமருது** - நெடி அடித்தல்.

**கமலத்தடம்** - கமலையில் மாடுகள் முன்னும் பின்னும் சென்றுவரும் பாதை.

**கமலை** - கவலை, மாட்டைப் பயன்படுத்திக் கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் அமைப்பு.

**கமுக்கம்** - இரகசியம். *(யாருக்கும் தெரியாம கமுக்கமா காரியத்த முடிச்சிட்டயே).*

**கமுத்து** - கவிழ்த்து.

**கயிறுபாடி** - பெண்கள் அணியும் நாகரிக உள் ஆடை.

**கரசுவான்** - ஏலச் சீட்டு நடத்துபவர்.

**கரட்டு வழக்கு** - வம்புவழக்கு, பொருந்தாத பேச்சு.

**கரண்டை** - வெற்றிலை போடும் பழக்கம் உள்ளவர்கள் சுண்ணாம்பு வைத்திருக்கும் சிமிழ். கண்மை போன்றவற்றை வைக்கும் சிமிழ்.

**கரப்பு** - சிறுகுழந்தைகளுக்கு வரும் கரப்பான் (சிரங்கு) நோய்.

**கரம்பை** - ஏரி, குளம் போன்றவற்றின் வண்டல்.

**கரிச்சுக் கொட்டு-தல்**- திட்டித் தீர்த்தல்.

**கரிபவளம்** - சோற்றுக் கற்றாழைப் பால். உடலில் காயம், அடிபடுதல் போன்றவற்றால் ஏற்படும் வீக்கம் குறைய இதைப் பூசுவார்கள். பால்குடிக்கும் குழந்தை பால்குடி மறக்க மார் பகத்தில் கரிபவளம் தடவுவது உண்டு. அதன் கசப்புச்சுவை குழந்தைக்குப் பால்குடியில் வெறுப்பை உண்டாக்கும்.

**கருக்கருவா** - பல்லுப்பல்லாய் இருக்கும் அரிவாள்.

**கருக்கல்** - மாலைநேரம். *(கருக்கலுக்கு முன்னால வீட்டுக்கு வந்து சேரு)*

**கருக்கா** - முழு வளர்ச்சி அடையாத நெல்மணி *(கருதுல கருக்கா ரெம்ப இருக்கு)*

**கருக்கு** - பனைமட்டையின் இரு ஓரங்களிலும் உள்ள கருத்த பல்லு பல்லாய் இருக்கும் பகுதி.

**கருக்கு-தல்** - ஒரு பொருளை சூட்டில் அல்லது நெருப்பில் கருகச் செய்வது, *(விரலி மஞ்சளை நெருப்பில் கருக்கி உறிஞ்சா சளிக்கு நல்லது)*

**கருடர்** - செம்பருந்து.

**கருத்து** - கறுப்பாக நிறம் மாறி. *(தங்கச்சங்கிலி இப்படி கருத்துப் போச்சே)*

**கருது** - நெற்கதிர்.

**கருநாக்கு** - சொன்னது பலிக்கும் தீய வாக்கு.

**கருமாதி** - இறந்தவருக்கு 16ஆம் நாளில் செய்யும் சடங்கு.*( கருமாதிக்கு முன்னல கண்டிப்பா வெள்ள அடிக்கணும்)*

**கரைச்சல்** - தொந்தரவு.

**கரையடி** - குளத்திற்கு அருகில் உள்ள வயல்.

**கரையிடுதல்** - ஊர் குளத்திலுள்ள மீன்களை ஏலம் விடுவதற்குப் பதில் எல்லா மீன்களையும் பிடித்து கரையில் போட்டு வீட்டுக்கு வீடு கூறுவைத்துப் பங்கிடுதல்.

**கரையேத்துதல்** - கன்னிப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் கடமை. *(எம் பொண்ண கரையேத்திட்டா என் கவலை தீந்திடும்).*

**கரையேறுதல்** - வேலை முடித்து வயலிலிருந்து வெளியேறுதல். *(நேரமாயிப் போச்சே. இன்னும் கரையேறலையா?)*

**கல்கண்டு** - *கண் இமையில் வரும் கட்டி.*

**கல்கோனா** - *கடிப்பதற்குக் கடினமான சிறுவர்கள் சாப்பிடும்* இனிப்புத் தின்பண்டம்.

**கல்தொட்டி** - கல்லைக் குடைந்து செய்யப்பட்ட தொட்டி.

**கல்நொங்கு** - முற்றிய நுங்கு.

**கல்பயறு** - பயறு வகையில் ஒன்று. காய்ந்த பயறு கடிப்பதற்குக் கல் போன்று கடினமாக இருக்கும்.

**கல்பொடி** - *தச்சர்கள் உளி* போன்ற *தங்கள் கருவிகளைத் தீட்டப்* பயன்படுத்தும், *கூழாங்* கல்லைப் பொடித்து வைத்திருக்கும் தூள்.

**கல்மரவை** - மாக்கல்லில் குடையப்பட்ட கலம். இது உப்பு, ஊறுகாய் போன்றவற்றை வைக்கப் பயன்படும்.

**கல்லுக்குளி** - இறந்தவரின் *16*ஆம் நாள் நிகழும் சடங்கு.

**கல்லுளி** - கல் உடைக்கப் பயன் படுத்தும் இரும்பு உளி.

**கலக்கட்டமா** - கூடுதல் இடைவெளி கொண்டதாக. *(நாத்தை ரெம்ப கலக்கட்டமா நட்டுட்டாங்க)*

**கலஞ்சி** - கலைந்து.

**கலந்து** - கூடி ஆலோசித்து. *(அவரோட கலந்துகிட்டு ஒரு முடிவு சொல்லுறேன்)*

**கலப்புரம்** - பயிருக்குத் தேவையான பல சத்துக்கள் கலந்த உரம். *(வாழைக்கு ரெண்டு மூட்டை கலப்புரம் வைக்கணும்)*

**கலவன்** - ஒருவகை நெல்லுடன் வேறுவகை நெல் கலந்திருப்பது.

**கலைதல்** - *மிரளுதல்.*

**கவட்டக்கம்பு** - கவலையாக உள்ள கம்பு, இரண்டாகப் பிரியும் மரத்தின் கிளை.

**கவுந்துட்டு** - கவிழ்ந்துவிட்டது.

**கவுலு** - சூழ்ச்சி *(கவுலு பண்ணிச் சொத்து பூராவும் எழுதி வாங்கிட்டான்)*

**கவுளி1** - பல்லி.

**கவுளி2**- குறிப்பிட்ட அளவு கொண்ட வெற்றிலைக் கட்டு.

**கவுறு** - *கயிறு.*

**களஞ்சி** - *தங்கத்தை எடை* போடப் பயன்படுத்தும் ஒரு எடை அளவு. *11/2 கழஞ்சு = 1 சவரன்.*

**கழனித் தண்ணி** - அரிசியைக் கழுவிய தண்ணீர் *(கழனித் தண்ணியைத் தள்ளி ஊத்தாம மாட்டுக்கு வை)*

**கழனிப்பானை** - கழனித் தண்ணீர் ஊற்றி வைக்கும் பானை.

**கழனியாக்கு-தல்** - கட்டாந் தரையை வயலாக்குதல். *[கட்டாந்தரையை மண்வெட்டியால் கொத்தி பின் கலப்பையால் அமுக்கி உழவேண்டும் இவ்வாறு நான்கைந்து உழவு செய்த பின் வரப்புக் கட்டி வாய்க்கால் அமைத்தால் கட்டாந்தரை கழனியாகி விடும்]*

**கழிசடை** - கழிந்த மயிர், ஒரு வசைச்சொல்.

**கழுத்துக்கயிறு** - மாட்டின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் கயிறு.

**கழுந்துலக்கை** - நெல் குத்தப் பயன்படும் பூண் இல்லாத உலக்கை.

**கள்ளச்சாவி** - திருட்டுச்சாவி.

**கள்ளவாளி** - கள்ளன், திருடன்.

**கள்ளப்பிராந்து** - பருந்து. கழுகு வகையில் ஒன்று.

**களச்சிவிளையாட்டு** - பெண் விளையாட்டு வகையில் ஒன்று. அம்மானை வகையைச் சேர்ந்தது.

**களத்துவாசல்** - களத்துமேடு.

**களபம்** - கஸ்தூரி மஞ்சள் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட வாசனைப் பொருட்கள் சேர்ந்த கலவை.

**களவாசல் நெல்** - போரடிக்கும் போது சிதறியும் காற்றில் பறந்தும் களத்துமேட்டில் சேரும் நெல்.

**களி** - களிமண் பூமி.

**களிம்பு** - புண், காயம் போன்றவற்றில் தடவும் பசை மருந்து *(ointment)*.

**களுந்து உலக்கை** - பூண் இல்லாத உலக்கை.

**கன்னக்கோல்** - திருடர்கள் சுவரைத் துளையிடப் பயன்படுத்தும் கருவி.

**கன்னங்கரேல்** - அழுத்தமான கறுப்பு நிறம்.

**கன்னம்** - திருட , திருடர்கள் சுவரில் போடும் துளை.

**கன்னாசாரி** - செம்பு, பித்தளைப் பாத்திர வேலை செய்யும் ஆசாரி.

**கன்னாபின்னா** - தாறுமாறாக, ஒழுங்கற்று.

**கனக்கு** - பாரமாய் இருக்கிறது. *(அரிசி மூடை ரெம்பதான் கனக்கு)*

**கனத்தநாள்** - பௌர்ணமி, அமாவாசை போன்ற நாள்கள். இந்த நாள்களில் முற்றிய நோய்வாய்ப் பட்டவர்கள் இறந்து போக சந்தர்ப்பம் உண்டு என்பது நம்பிக்கை.

**கனம்** - அகலம். *(நூல் கனம் கூடிப்போச்சி. அதுதான் கதவு இணைய மாட்டேங்குது)*

**கனமா 1** - பாரமாய். *(நெல்லு மூட்டை என்னா கனமா இருக்கு)*

**கனமா 2** - பெருமளவு, அதிகமாக. *(கல்யாண வீட்டில கனமா கவனிச்சாங்களா?)*

**கஜக்கோல்** - கஜம் என்கிற நீட்டலளவையை அளக்கும் கோல். *(1 கஜம் = 3 அடி)*.

## கா

**காக்காக்குளி** - அவசர அவசரமாய்க் குறைந்த அளவு தண்ணீரில் குளித்தல் *(அவன் காக்கா குளி தானே குளிப்பான் சீக்கிரம் வந்துருவான்)*

**காக்காச்சி** - காக்கை, காகம்.

**காக்காப்பொன்னு** - தங்க நிறத்தில் மின்னும் வண்ணத்தகடு,

**காக்கா முள்** - ஒரு வகை நாட்டு உடை முள். இயல்பான உடை முள்ளை விடப் பருமனாகவும் நீளமாகவும் இருக்கும். இது விஷத்தன்மை உள்ளது.

**காங்கல** - காணவில்லை.

**காங்கை** -சூடு, வெப்பம். *(துணி தேய்க்க காங்க காணாது)*

**காஞ்சரொட்டி** - சுட்டரொட்டி.

**காட்டம்** - உறைப்பு, காரம்

**காட்டுப்பய** - முரடன். மிருக குணம் கொண்டவன்.

**காட்டுப்பயிர்** - புன்செய்ப் பயிர்.

**காட்டுப்பீ** - பிறந்த குழந்தை முதல் முதலாகக் கழிக்கும் மலம். *(பிள்ளைக்குக் காட்டுப்பீ போயிட்டா?)*

**காடாத்து** - பார்க்க: காடையத்து.

**காடாவிளக்கு** - கிராமங்களில் இரவு நேரங்களில் நடைபெறும் ஏலக்கடைகளில் வெளிச்சத்துக்காகப் பயன்படுத்தும் பெரு விளக்கு. மண்ணெண்ணெய்யில் எரியும் இந்த விளக்கின் திரி தடிமனாக இருக்கும்.

**காடி** - மரவேலையில் அகழ்ந்து/ செதுககி உருவாக்கப்படும் நீண்ட வரிப் பள்ளம்.

**காடிஉளி** - மரப்பலகையில் பள்ளம்(காடி) எடுக்கப் பயன் படும் உளி, இழைப்புளி வகை.

**காடுகோள்** - பயிர் நிலம் பயிர் செய்யப்படாமல் காடாய் மண்டிப் போதல்.

**காடையத்து** - இறந்தவர் எரியூட்டப்பட்ட மறுநாள் சிதையில் சேகரிக்கப்படும் எலும்புத் துண்டுகளை பால் ஊற்ற ஆற்றும் சடங்கு. *(காடையத்துக்கு இருந்துட்டு தானே போவீங்க)*

**காடையன்** - காடைப் பறவை போல தேவையற்ற விதத்தில் கூச்சலிட்டு அங்கும் இங்கும் அலைபவன்.

**காடோசெடியாய்** - எந்த நோக்கமுமில்லாமல், காடு மேடு என்றில்லாமல்.

**காணம்** - பயறு வகை, கொள்ளு.

**காணாக்கடி** - இன்னது கடித்தது என்று அறிய முடியாத விஷக்கடி.

**காணாக்காச்சி** - அற்புதக் காட்சி, கண்கொள்ளாக் காட்சி.

**காணாதலம்** - ஆண்/பெண் குறி.

**காணாது** - பற்றாகவில்லை, போதவில்லை.

**காணி** - நிலம் *(கவுந்தா காணி மலந்தா மாணி)*.

**காணும்** - போதும், தேவையான அளவு.

**காத்தாடி1** - காற்றில் சுழன்று மின்சாரம் உற்பத்தி செய்யும் பெரிய இரும்பு சுழற் கறங்கு.

**காத்தாடி2** - பெரிய வீடுகளில் நடுஅறையில் உயரத்தில் இருக்கிற சிறிய சதுர சன்னல்.

**காத்தாடி3** - மின்விசிறி.

**காத்தாடி4** - சிறுவர்கள் பனை ஓலையில் (+) கூட்டல் அடையாளம் போல் செய்து காற்றில் சுழல வைத்து விளையாடுவது.

**காத்திய சூ** - அலவறை(காய்ந்த பனம் பாளை)களைச் சுட்டுக் கரியாக்கிப் பொடித்து அதனுடன் உப்புக்கல்லை கலந்து அதை ஒரு துணியில் சுருட்டிக் கட்டி அந்தச் சுருட்டை ஒரு கவட்டைக் கம்பில் இறுகக் கட்டிப் பின் துணிச் சுருட்டலில் நெருப்பிட்டுக் கவட்டையைக் கயிற்று நுனியில் கட்டிச் சுற்றினால் அதிலிருந்து சுடரும் கரித்துகள்கள் பூப்பூவாய் உதிரும். திருகார்த்திகை அன்று இரவில் சிறுவர்கள் இதைச் சுற்றுவார்கள். *(பாத்துப் போ தெருவில காத்திய சூ சுத்துறாங்க நெருப்பு மேலே படப்போவுது)*.

**காத்துபரிதல்** - குசு விடுதல்.

**காதடப்பு** - நோய் போன்றவற்றால் காது கேட்காமல் போகுதல்

**காதர கூதற** - தீவினை தொடர்புடையதும் இழிந்ததுமான.

**காதுகுத்து** - காதுவலி, காது நோவு.

**காதுகுத்துதல்** - நடவாத ஒன்றை நடந்தது போல் சொல்லி நம்ப வைக்கும் முயற்சி.

**காதுகுறும்பி** - காதில் சேரும் அழுக்கை எடுக்கப் பயன்படும் முனையில் குழிவாய் உள்ள கம்பி.

**காதோலை** - காது துளையில் இடும் பனங்குருத்து ஓலை. பெண்களின் காதணி வகை.

**காந்தல்1** - நெருப்பு சுடரில்லாத தணல்.

**காந்தல்2** - எரிச்சல்.

**காந்தல்3** - செயற்கையாக வாழைக்குலையைப் பழுக்க வைக்கும் முறை.

**காந்தாரி மிளகாய்** - காட்டில் விளையும் காரத்தன்மை அதிகமுள்ள சிறிய வடிவில் உள்ள மிளகாய், ஊசிமிளகாய்.

**காப்படி** - 1/4 படி முகத்தலளவு.

**காப்பரிசி** - காது குத்து விழாவில் வழங்கப்படும் வெல்லப்பாகு பச்சரிசி கலந்த அரிசி.

**காப்பறுத்தல்** - மணமக்களுக்கு மணவிழாவில் கையில் கட்டப்படும் காப்புநூலை அறுக்கும் சடங்கு.

**காப்பு1**- வளையல்.

**காப்பு2** - மணவிழாவில் மணமக்கள் கையில் கட்டப்படும் மஞ்சள் கங்கணக் கயிறு.

**காப்புக்கட்டு** - மணவிழாவில் மணமக்களுக்கு மஞ்சள் துண்டம் கட்டிய மஞ்சளில் தோய்த்த நூல் கயிற்றைக் கட்டும் சடங்கு.

**காமாசோமா** - ஒழுக்கற்ற முறையாக, தாறுமாறாக.

**காமி** - காட்டு, காண்பி.

**காய்விழுதல்** - கருச் சிதை வடைதல்.

**காயடித்தல்** - இளம் ஆடு மாடுகளுக்குக் கருத்தடை செய்தல்.

**காயம்** - பெருங்காயம், சமையலில் பயன்படுத்தும் மணமூட்டி.

**கார்** - நெற்பயிர் சாகுபடி செய்யும் பருவம்.

**கார்த்திகைப் பொரி** - திருக் கார்த்திகை அன்று பூசைக்குப் பயன்படுத்தும் அரிசிப் பொரி.

**காரவீடு** - செங்கல் சுண்ணாம்பு சாந்தினால் கட்டப்பட்ட வீடு.

**காராட்டம்** - பொறாமை கொண்டு காட்டும் வெறுப்பு.

**கால்** - கால்வாய்.

**கால்கட்டு** - கழுதையின் முன்னங்கால் இரண்டினையும் இணையும் படி ஒரு கயிற்றினால் கட்டிவிடுவர். இதனால் கழுதையால் ஓட முடியாது. குதித்துக் குதித்து தான் செல்ல முடியும். இதுவே கால்கட்டு.

**கால்கட்டு2** - திருமணம்.

**கால்வாய்** - ஆறு, ஏரி, குளம் போன்றவற்றின் வாயில் வந்து முடியும் நீர்த் தடம்.

**காரவீடு** - செங்கல், மணல், சுண்ணாம்பு போன்றவற்றால் கட்டப் பட்ட வீடு.

**காராடுதல்** - பொறாமைப் படுதல்.

**கால் நாட்டுதல்** - திருமணம் போன்ற விழாகளுக்குப் பந்தல் போட நாள் செய்யும் சடங்கு, கோயில் திருவிழாத் தொடக்கத்தை அறிவிக்கும் நிகழ்ச்சி.

**காலம்பற** - அதிகாலையில்.

**காலேஅரைக்கால்** - 3/8 என்னும் பின்ன எண்.

**காலே மாகாணி** - 5/16 என்னும் பின்ன எண்.

**கால்மாடு** - காலடி *(கால்மாட்டுல விழுந்து மன்னிப்புக் கேட்டாலும் மன்னிக்க மாட்டேன்)*

**கால்மாடு தலமாடு** - ஒருவர் கால் இருக்கும் பக்கம் மற்றவர் தலை வைத்துப் படுப்பது.

**கா** - சிறுபிள்ளைகள் தங்களுக்குள் கோபித்துக்கொண்டு பேசாமல் இருப்பது *(எங்கிட பேசாத உம் பேச்சு கா).*

**காவெட்டு** - கொஞ்சம் காய்த் தன்மையுடன் இருக்கும் பழம்.

**காவோலை** - காய்ந்த பனை ஓலை.

**காளங்கண்ணு** - இளம் காளை.

**காளவாசல்** - சுண்ணாம்பு சுடும் சூளை.

**கான்** - தெருவின் இரு ஓரங் களிலும் உள்ள கழிவு நீர் ஓடை.

**காறல்** - தொண்டையில் உண் டாகும் கரகரப்பு.

**கானாவானா** - ஆடு மாடுகளுக்கு காலிலும் வாயிலும் வரும் ஒரு வகை நோய்.

## கி

**கிச்சடி** - ஒரு வகைச் சட்டினி, கத்தரிக்காய், தக்காளி போன்ற வற்றை மசித்துத் தாளித்துத் தயாரிக் கப்படுவது. இட்டிலி, தோசை போன்றவற்றுக்கு தொட்டுக் கொள்ள சுவையாய் இருக்கும்.

**கிச்சடி சம்பா** - நெல்வகையில் ஒன்று.

**கிச்சுக்கிச்சுபண்ணுதல்** - கீச்சங் காட்டுதல், உடலில் கூச்சமுள்ள இடத்தைத் தொட்டுத் தடவிச் சிரிப்பு உண்டாக்குதல்.

**கிச்சுக்கிச்சுத்தாம்பலம்** - குழந் தைகள் விளையாடும் ஒரு வகை விளையாட்டு.

**கிட்ட** - அருகில், பக்கத்தில்.

**கிட்டங்கி** - உற்பத்தி செய்த பொருட்களைச் சேமித்து வைக்கும் இடம்.

**கிட்டி** - மரச்சட்டம் போன்றவற்றை இறுக்கமாக இறுக்க தச்சர் பயன்படுத்தும் கருவி.

**கிடங்கு** - பள்ளம், குழி.

**கிடத்து** - நோய்வாய்பட்டு உடம்புக்கு முடியாதவரை படுக்க வைத்தல்.

**கிடத்திட்டு** - நோய் வந்து படுத்த படுக்கையாய் ஆக்கிவிட்டது.

**கிடா** - ஆடு மாடு இவற்றின் ஆண்.

**கிடாரங்கா** - நார்த்தங்காய் வகையில் ஒன்று.

**கிடாரி** - பெண் கன்று.

**கிடுகு** - முடைந்த தென்னை ஓலை.

**கிடை** - ஆட்டு மந்தையினை வயலில் கிடக்கச் செய்வது.

**கிடைமட்டம்** - தரை மட்டத்திற்கு இணையான மட்டம்;

**கிடை மறிப்பு** - வயலில் ஆட்டுக் கிடை போடுதல்.

**கிடையில** - நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாய்க் கிடப்பது.

**கிண்டி விடுதல்** - பகையைத் தூண்டி விடுதல்.

**கிண்ணரம்** - ஒரு நரம்பு இசைக் கருவி.

**கிண்ணி1** - சிறிய கிண்ணம்.

**கிண்ணி2** - கை கால் மூட்டு.

**கிணத்தடி** - வீட்டுக் கிணற்றின் அருகில்.

**கிணத்தடி நிலம்** - வயலில் உள்ள கிணற்றின் அருகில் இருக்கிற நிலம்.

**கிணத்துமிதி** - துலாக் கிணற்றில் தண்ணீர் இறைக்கும் போது நிற்கும் இடம்.

**கிராமன்சு** - கிராம முனிசீப், கிராம அதிகாரி.

**கிருமமா** - கிரமமாய், ஒழுங்காய்.

**கிரய சேளம்** - வாங்கப் போகிற நிலத்தின் பேரிலுள்ள ஒத்தித் தொகை முதலியவையொழிய கிரயத்தில் மிச்சமுள்ள தொகை.

**கிரயப்பத்திரம்** - சொத்தை விலைக்கு வாங்கியதற்கான பதிவு செய்யப்பட்ட ஆவணம்.

**கிரயம்** - விற்பனை.

**கிராணம்** - கிரகணம் (சூரிய, சந்திர கிரகணம்).

**கில்டுநகை** - பொன்வண்ணம் பூசிய போலி நகை.

**கிலுக்கு** - ஒலி எழுப்பும் குழந்தைகள் விளையாட்டுக் கருவி.

**கிலுக்குப்பெட்டி1** - பனை ஓலையில் செய்யப்பட்ட கிலுக்கு.

**கிலுக்குப்பெட்டி2** - வளவள வென்று பேசிக்கொண்டிருக்கும் பெண்ணைச் சாடையாய்ச் சொல் லும் சொல்.

**கிள்ளாக்கு** - ஊர்கோவிலில் திரு விழா நடத்த ஊர் பெரியதனக் காரரிடம் உத்தரவு வாங்குவது. இந்த உத்தரவு வாங்க ஊர் மக்கள் வெத்திலை பாக்கு வைத்து பெரிய தனக்காரரைப் பார்ப்பார்கள். பெரியதனக்காரர் அந்த வெத் திலையை எடுத்து இரண்டாக

கிழித்துப் போட்டால் உத்தரவு கிடைத்துவிட்டது என்று பொருள்.

**கிளப்புக்கடை** - உணவு விடுதி, ஓட்டல்.

**கிளியாந்தட்டு** - கிராமங்களில் இளைஞர்கள் விளையாடும் நாட்டார் விளையாட்டு.

**கிளியாஞ்சட்டி** - பார்க்க: இலுக்காஞ்சட்டி.

**கிழக்க நிக்க** - கிழக்கு நோக்கி.

**கிழக்க மாற** - கிழக்கை பார்த்து.

**கிழமேல்** - கிழக்கு மேற்காய்.

**கிழமை** - இறப்பிற்குப் பின் 16 நாட்களுக்குள் வரும் வியாழன், ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப் படும் சடங்கு.

**கிழிக்கட்டு** - பொற்கிழி போல் எதாவது ஒரு பொருளைக் கட்டி வைத்தல்.

**கிழித்தல்** - வைதல், திட்டுதல்.

**கிறங்குதல்** - சுழல், சுற்று.

**கிறுகிறுப்பு** - மயக்கம், கிறக்கம்.

**கிஸ்மிஸ்** - உலர்ந்த திராட்சை.

## கீ

**கீச்சு** - கூரிய நகங்களால் பிறாண்டு

**கீத்து** - துண்டம், துண்டு, பத்தை.

**கீப்பு** - வைப்பாட்டி.

**கீரபாத்தி** - கீரை விதைக்கப் பட்டிருக்கும் பாத்தி(பரப்பு).

**கீரமத்து** - கீரை கடையும் மத்து.

**கீரிப்பிள்ளை** - கீரி.

**கீல்1** - பூசுந்தார்.

**கீல்2** - பெட்டி, கதவு முதலிய வற்றின் இரு பக்கங்களை இணைப்பதும் அதைத் திறந்து மூடுவதற்கு ஏற்ற அமைப்பை உடையதுமான உலோகப்பட்டை, கதவின் கீல். *(கீல் சரியில்லை அதுதான் கதவை மூட கஷ்டமா இருக்கு).*

**கீலெண்ணை** - பார்க்க: கீல்1.

**கீழமாற** - கீழ் நோக்கி.

**கீழாநெல்லி** - கீழ்க் காய் நெல்லி, மருத்துவக் குணம் கொண்ட மூலி கைச் செடி, மஞ்சள் காமாலை நோய்க்குச் சிறந்த மருந்து.

**கீறல்** - சிறு கோடு, சிறு பிளப்பு.

**கீறியிருக்கு** - பிளந்திருக்கிறது.

**கீறு1** - பிறாண்டு,

**கீறு2** - பிள.

**கீறு3** - தென்னை ஓலை, பனங் கிழங்கு போன்றவற்றின் பாதி.

**கீறு-தல்** - மரக்கட்டையில் ஆசாரி கள் அடையாளம் எழுதுதல்.

**கீனாபண்ணு-தல்** - விற்று விடல் *(எல்லா சொத்தயும் கீனா பண் ணிட்டானே)*

## கு

**குச்சிக்கம்பு** - கிட்டிப்புல்.

**குச்சில்** - சிறிய வீடு, குடிசை.

**குச்சு** - நான்கு பக்கமும் ஓலையால் மறைக்கப்பட்ட குடிசை

**குட்டப்புழுதியாக்-தல்** குமமாளமடித்தல்.

**குட்டு** - இரகசியம்.

**குடலேத்தம்** - சிறு குழந்தைகளுக் குக் குடல் இடம் மாறி மேலேறு தலால் உண்டாகும் நோய்.

**குடவண்டி** - மாட்டு வண்டி குடை சாய்தல், கவிழ்தல். *(குடவண்டி போட்டதுல காலுல நல்ல அடி).*

**குடியெழும்பு-தல்** - இடம் பெயர்தல்.

**குண்டாங்கிடங்கு** - மழைநீர் தேங்கும் குட்டை.

**குண்டாமண்டி**- குறும்பு, கேலி.

**குண்டு** - சிறிய பரப்பளவுள்ள துண்டு வயல் *(கிணத்தடி குண்டு நாளக்கு அறுக்கலாமா?)*

**குத்தவச்சிட்டா** - பூப்பெய்து விட்டாள்.


**குத்துக்கல்** - குளத்தில் உள்ள நீரின் அளவை அளக்க உதவும் அளவுக்கல்.

**குத்துக்கால்** - கமலையில் இற வைசால் வடம் தங்கும் மரத்தூண்.

**குத்துப்பிரை** - நெல் குத்துமிடம்.

**குத்துப்போணி** - பெரிய பித்தளைப் போணி.

**குதிர்** - நெல் முதலிய தானியங் களைப் பாதுகாத்து வைக்கும் சுட்ட மண் கலம்.



குதிர்

**குதிரை** - உயரமான கால்களை யுடைய கோக்காலி.

**குதில்** - பார்க்க: குதிர்.

**குதுகுதுன்னு** - காய்ச்சல் அறிகுறி யாய்.

**குந்தாணி** - நெல் குத்தப் பயன்படுத்தும் உரல் வாய்மூடி.

**குப்பமேனி** - மருத்துவக் குணம் கொண்ட பூண்டுவகை. இதன் இலைச் சாறு குழந்தைகளுக்கு உண்டாகும் சளிக்குச் சிறந்த மருந்து.

**குப்பக்கீரை** - கீரை வகையில் ஒன்று.

**குப்பை** - எருக்குழி.

**கும்பக்காரி** - கரகம் ஆடும் பெண்.

**கும்பா** - வாய் அகன்ற குழிவான வட்டவடிவப் பாத்திரம்.

**கும்பாட்டம்** - கரகாட்டம்.

**கும்புடு பணம்** - திருமண நிகழ்ச்சியின்போது மணமக்கள் பெரியவர்களின் காலில் விழுந்து ஆசி வாங்கும்போது பெரியவர் களால் தரப்படும் பணம்.

**கும்மாங்குத்து** - ஊமைக்காயம் ஏற்படும்படி குத்தும் குத்து.

**கும்மாயம்** - குழையச் சமைத்த பருப்பு உணவு.

**கும்மியடித்தல்** - நண்பர்கள் சேர்ந்து கொட்டமடித்தல்.

**குமட்டிக்காய்** - மருத்துவக் குணமுள்ள கொடியில் காய்க்கும் காய்.

**குமரு** - கன்னிப்பெண்.

**குமிழ்பிடி** - கதவு முதலியவற்றில் தைத்த குமிழ்க் கைப்பிடி.

**குமைச்சல்** - குழப்பம்.

**குரங்கு டாப்பு** - கதவு, சன்னல் ஆகியவற்றின் மேல் மழை, வெயிலைத் தடுக்க அமைக்கும் அமைப்பு.

**குரங்குத்தாப்பா** - கொக்கித் தாழ்ப்பாள்.

**குரங்குப்பட்டை** - கூரை ஓடுகள் கலைந்துபோகாதபடி முகட்டி லிருந்து அடிவரை கட்டும் சுண்ணாம்புப் பட்டை.

**குருட்டரிசி** - கருப்பு அரிசி.

**குருட்டாம் போக்குல** - எதிர் பாராத விதமாக.

**குருட்டுயோகம்** - முயற்சி யின்றிச் செல்வம் சேர்வதற்குக் காரணமாகும் யோகம்.

**குருத்து** - இலைத் தளிர், இளமை.

**குருத்து மணல்** - பொடிமணல்.

**குலுக்கை** - மண்ணால் செய்யப் பட்ட பெரிய பானை.

**குழிஅம்மி** - குழிவாய் இருக்கும் அம்மிவகை.

**குழைஅரக்குதல்** - மரத்தின் இலை தழைகளை வெட்டுதல்.

**குளுவன்** - குறவன்.

**குளியாம இருக்கா** - கரு உண் டாகி இருக்கிறாள்.

**குளிரவைத்தல்** - எரிந்து கொண்டிருக்கும் குத்துவிளக்கின் திரியைப் பூவாலோ விளக்கில் உள்ள எண்ணெய்யில் அழுத் தியோ அணைத்தல். விளக்கை அணை என்று சொல்லுவது அமங்கலமாகக் கொள்ளப்படு வது வழக்கம்.

**குறடு** - ஆசாரிகள் பயன்படுத்தும் பற்றுக்குறடு.

**குறளிவிதை** - குறளியின் உதவி கொண்டு செய்யும் மாயவித்தை.

**குறியது** - மரச்சட்டத்தின் குறுக்குக் கம்பு.

**குறுக்கு** - இடுப்பு.

**குறுணி** - எட்டுப் படி கொண்ட ஒரு முகத்தலளவு.

**குறுணி வெதப்பாடு** - 8 சென்ட் பரப்பளவு கொண்ட வயல்.

**குன்னிமுத்து** - குன்றிமணி விதை, இது தங்கத்தை நிறுக்கப் பயன் படுத்தும் 1/2 மஞ்சாடி எடைக் கல்.

**குனுக்கு** - பெண்கள் அணியும் சிறிய காதணி.

## கூ

**கூச்சங்காட்டுதல்** - உடலில் கிச்சுகிச்சு மூட்டுதல்.

**கூடமாட** - காரியத்துணை.

**கூட்டுக்கணக்கு** - கூட்டல்.

**கூட்டுக்கறி** - காய், பருப்பு கலந்த உணவு.

**கூட்டுக்களவாணி** - திருட்டில் கூட்டு சேர்ந்தவன்.

**கூட்டுக்கால்** - வலுவற்ற தூணுக்கு முட்டுக்கொடுக்கும் துணைக் கால். *(நடுவீட்டுத் தூண் உழுத்த மாதரி தெரியுது, சீக்கிரம் கூட்டுக் கால் கொடுக்கணும்).*

**கூட்டுப்புள்ளி 1** - கூட்டுத்தொகை.

**கூட்டுப்புள்ளி 2** - கூட்டுப்பட்டா வில் உள்ள ஒரு பங்காளி.

**கூட்டுப்புள்ளி 3** - கூட்டுசேர்ந்து குற்றச்செயல் புரிந்தவர்களில் ஒருவன்.

**கூட்டாஞ்சோறு** - எல்லாவிதக் காய்களுடன் பருப்பு, புளி, காரம் சேர்த்துச் சமைக்கும் கதம்பச் சோறு.

**கூட்டெழுத்து** - பல எழுத்துக் களைச் சேர்த்து எழுதுவது.

**கூடப்பிறப்பு** - உடன்பிறந்தோர்.

**கூடுகத்தி** - தோலுறையுடன் கூடிய கத்தி *(இடுப்புல எப்பவும் கூடுகத்தி யோட தான் திரிவான்).*

**கூடுதல்** - மேலெல்லை. *(கூடுதலா போனா இதன் விலை பத்து ரூவா இருக்கும்)*

**கூடு மாத்திரை** - விழுங்கி உட் கொள்வதற்குரிய மருந்துப் பொடி வைத்து அடைத்த சிறிய குழல். *(capsule)*

**கூடேறுதல்** - வழக்குமன்றத்தில் சாட்சிக்கூண்டேறுதல்.

**கூண்டோடு கைலாசம்** - ஒட்டு மொத்தமாக, அனைத்தும்.

**கூத்து** - கேலிக்குரிய செயல்.

**கூதறப்பய** - கெட்டவன், இழிந்த குணமுடையவன்.

**கூதி** - பெண்குறி.

**கூதிபிள்ளை** - வசைச்சொல்.

**கூதிமவன்** - ஒரு வசைச்சொல்.

**கூந்தல்** - நுங்கு எடுக்கப்பட்ட பின் எஞ்சும் பனங்காயின் பகுதி.

**கூந்த ஒதுக்கு-தல்** - தென்னை, பனைமரங்களில் காய்ந்த பாளை களைக் கழித்தல். *(ரெம்ப நாளாச்சி தென்னைல கூந்த ஒதுக்கி).*

**கூப்பதினி** - கூழாகக் காய்ச்சிய கருப்புக்கட்டி.

**கூப்பு** - மலை காடுகளில் மரம் வெட்ட அரசால் உரிமம் அளிக்கப் பட்ட பகுதி.

**கூப்பிடு தூரம்** - பழைய நீட்டலள வில் ஒரு அலகு, சுமார் 600 மீட்டர்.

**கூரவு** - கேழ்வரகு.

**கூராப்பு** - மேகமூட்டம்.

**கூழ்வத்தல்** - அரிசியில் கூழ் காய்ச்சி செய்யும் வற்றல்.

**கூழக்கடா** - நீர்நிலைகளுக்கு அண் மையில் வாழும் பெரிய பறவை வகை. *(pelican)*

**கூழை** - பலாப் பழவகை.


**கூளக்கும்புடு** - போலித்தனமான வணக்கம், போலியான மரியாதை.

**கூறு** - புத்திசாலித்தனம், சாமர்த் தியம்.

**கூறுகெட்டவன்** - புத்தியில்லா தவன்.

**கூறுபாடு** - பார்க்க: கூறு.

**கூறோடி** - அறுவடையில் அறுப் புக்காரர்களுக்குக் கதிர் அறுக்க வேண்டிய பரப்பை கூறுபோட்டுத் தருபவர், அறுவடைக் கூலிகளுக் குத் தலைவன்.



கூனை

**கூனி** - துர்போதனை செய்பவர். *(அவங்கிட்ட பாத்து பழகு, கூனி புத்தி உள்ளவன்அவன்)*

**கூனை1** - கமலையில் நீரிறைக்கப் பயன்படும் கலம்.

**கூனை2** - பெரிதாக வனையப் பட்ட மண் குதிர்.

## கெ

**கெட்டுக்கெடத் தண்ணி** - பயன் படுத்தபடாமல் வெகு நாளாய் தேங்கிக் கிடக்கும் தண்ணீர்.

**கெதியாய்** - தெம்பாய், சக்தியுடன்.

**கெம்புதல்** - நெம்புதல்.

**கெம்பு** - சிவப்பு நிற மாணிக்கக் கல்வகை.

**கெத்து**- தன் அகங்காரம்.

## கே

**கேட்டாபெல்ட்** - கவைக்கம்பில் ரப்பர் வார் கொண்டு செய்யப் பட்ட கவண்.

**கேட்டுக்கதவு** -சுற்றுச் சுவர் வாயில் கதவு.

**கேட்டுவாசல்** - சுற்றுச் சுவரின் பெரிய வாசல்.

**கேந்தி1** - செவ்வந்திப் பூவகை.

**கேந்தி2** - அடங்காக் காமம்.

**கேந்தியாதல்** - எரிச்சலும் கோப மும் கொள்ளுதல்.

**கேப்பை** - கேழ்வரகு.

**கேருது** - கோழி முட்டையிடத் தொடர்ந்து சத்தமிடல்.

## கை

**கை** - குறுக்குக் கம்பு.

**கைசிரங்க** - இரண்டு உள்ளங்கை யும் சேர்த்து அள்ளும் அளவு.

**கைசுத்தம்** - களவு, திருட்டு போன்றன இல்லாதத் தன்மை.

**கைசோலி** - சமையல் போன்ற வீட்டு வேலைகள்.

**கைத்தடி** - இருவருக்குமிடையே சொத்துப் பறிமாற்றம் தொடர் பான பதிவு செய்யப்படாத ஒப்பந்தப் பத்திரம்.

**கைநீளுதல்** - தெரிந்தவர் வீட்டில் பழகியவர்களிடம் சின்னச் சின்னத் திருட்டைச் செய்தல்.

**கைப்பக்குவம்** - வீட்டு வைத்தியம்.

**கைப்பிடித்துணி** - அடுப்பி லிருந்து சூடான பாத்திரங்களை இறக்கப் பயன்படுத்தும் பழைய துணி.

**கைமாத்து** - அவசரக்கடன்.

**கையாள்** - கட்டடவேலை போன்றவற்றில் சில்லறை வேலை செய்யும் உதவியாள்.

## கொ

**கொக்காணி** - தொரட்டிக் கம்பு

**கொங்காணி** -மழை நேரத்தில் தலையில் போட்டுக்கொள்ள மூலையை உட்பக்கமாக மடிக்கப் பட்ட சாக்கு.

**கொச்சக்கயிறு** - தேங்காய் நாரில் திரிக்கப்பட்ட கயிறு.

**கொசம்** - சேலைக் கொசுவம்.

**கொஞ்சங்காணு** - மிகக் குறைந்த அளவு. *(இல்லைன்னு சொல்லாம கொஞ்சங்காணு கொடுத்தா)*

**கொட்டடித்தல்** - ஒரு சேதி தெரிந்தவுடன் அதை ஊரெல்லாம் பரவும்படிச் செய்தல்.

**கொட்டநூத்த காசு** - நூல் நூற்றுச் சம்பாதித்த காசு.

**கொட்டாப்புளி** - தச்சர்கள் சுத்தியல் போல் உளியை அடிக்கப் பயன்படுத்தும் சிறிய கட்டை.

**கொட்டான்1** - பத்து கிலோ எடை கொண்ட கருப்பட்டிச் சிப்பம்.


**கொட்டான்2** - மாடுகளுக்கு மருந்து புகட்டும் மூங்கில் குழாய்.

**கொட்டு** - மேளம்.

**கொடவண்டி** - மாட்டு வண்டி குடை சாய்தல். வண்டி கவிழ்தல்.

**கொடவரி** - ஊர் பொதுக்கோவில் கொடைக்கு வசூலிக்கப்படும் கட்டாய நன்கொடை.

**கொடி அடுப்பு** - பக்க அடுப்பு.



கொடிஅடுப்பு

**கொடை** - சிறு தெய்வ கோயில் திருவிழா.

**கொண்டான் கொடுத்தான் வீடு** - மகனுக்குப் பெண் எடுத்த அல்லது பெண்ணைக் கட்டிக்கொடுத்த வீடு, சம்பந்தம் கண்ட வீடு.

**கொண்டி** - தாழ்ப்பாள்.

**கொண்ணு** - திக்குவாய்ப் பேச்சு.

**கொணக்குதல்** - உடல் நலக் குறைவு.

**கொத்தாள்** - தானியத்தைத் கூலியாய்ப் பெற்று வேலை செய்யும் கூலியாள்.

**கொத்து** - அறுவடைக்கான கூலியாய்த் தரப்படும் தானியம்.

**கொதவளை** - குரல்வளை.

**கொதி** - உண்ணும் போது நேர்ந்த தீக்கண் பார்வையால் சாப்பிட முடியாமல் போகுதல்.

**கொந்து** - மண்வெட்டியால் மண்ணைக் கிளறு.

**கொப்பரை** - நெல் அவிக்க, விஷேட காலத்தில் சோறு பொங்கப் பயன்படுத்தும் கைப்பிடியுடன் கூடிய பெரிய பாத்திரம்.

**கொம்ம** - கேழ்வரகு சோளம் போன்றவற்றின் கதிரில் உள்ள தூசு.

**கொருவா** - சுவர், மரம், உலோகம் போன்றவற்றில் கூர்மையான மற்றும் கனமான பொருளினால் வெட்டும் அல்லது அடிக்கும் போது ஏற்படும் சிதைந்த பகுதி.

**கொல்லம் ஓடு** - தொழிற் சாலையில் தயாரிக்கப்பட்ட உயர்தரக் கூரை வேயும் ஓடு.

**கொல்லாங்கொட்டை-** முந்திரிக் கொட்டை.

**கொல்லாசாரி -** இரும்பு வேலை செய்யும் ஆசாரி.

**கொல்லாம்பழம் -** முந்திரி மரத்தின் பழம்.

**கொலுக்கு -** உடை கிழிந்து தொங்குகை.

**கொல்லைக்கிரு-த்தல் -** மலம் கழித்தல்.

**கொலப்பட்டினி -** நீண்ட நேரம் பட்டினியாய் இருத்தல்

**கொழ போடுதல் -** வயலில் நாற்று நடும் முன் இலை, தழை களை வெட்டிப் போட்டு தொளி உழவு உழுதல்.

**கொழித்தல் -** முறத்தில் புடைத்துத் தானியத்தில் உள்ள கல், தூசு நீக்குதல்.

**கொழியல் அரிசி -** நன்றாகக் குத்தித் தீட்டப்படாத அரிசி.

**கொழுந்தன்-** கணவனின் தம்பி.

**கொழுந்தியா -** மைத்துனி.

**கொழுப்பு -** தனி சிமெண்டும் தண்ணீரும் கலந்து குழப்பிய சாந்து.

**கொள்முதல் -** பொருட்களை வாங்குதல்.

**கொள்ளி -** ஆண்பிள்ளை, இறந்தவரின் இறுதச் சடங்கினைச் செய்வது ஆண்பிள்ளையாவதால் ஆண் பிள்ளையைக் கொள்ளி என்பது வழக்கு. *(அது கொள்ளி முடிஞ்ச சொத்துதான்)*

**கொள்ளையிலே போவான் -** பிளேக், காலரா போன்ற பெருவாரி நோயினால் சாகக் கடவான் என்பதான சாபச் சொல்.

**கொன்னு-தல் -** திக்குவாய் பேச்சு

## கோ

**கோச்ச கண்ணு -** இடுக்கிப் பார்க்கும் நோயினால் பதிக்கப் பட்ட கண்.

**கோசுப்பெட்டி -** வில்வண்டி ஓட்டி அமர்ந்திருக்கும் பகுதிக்குப் பின்னே உள்ள பெட்டி.

**கோட்டம் -** வளைவு.

**கோட்டி -** பைத்தியம்.

**கோட்டிக்காரன் -** பைத்தியக் காரன்.

**கோட்டிநாய் -** வெறிநாய்.

**கோட்டை -** 8 நாழி அளவுள்ள 28 மரக்கால் கொண்டதும் அல்லது 8 படி அளவுள்ள 21 மரக்கால் கொண்டதுமான முகத்தலளவு.

**கோட்டை -** 21 மரக்கால் அதாவது 1.75 ஏக்கர் பரப்பளவு கொண்ட வயல்.

**கோடாலிக்கொண்டை -** பெண்கள் போடும் கொண்டை வகையில் ஒன்று.

**கோடி -** புத்தாடை

**கோடிபோடுதல் -** ஆணின் இறப்புச் சடங்கின்போது விதவையாகும் பெண்ணுக்கு உறவினர்கள் வெள்ளைச் சேலை எடுத்துக் கொடுக்கும் நிகழ்வு.

**கோணக்க மாணக்க -** கோணல் மாணலாக.

**கோணிக்கிட்டு -** வளைந்தபடி, நேராக இல்லாமல்.

**கோணூசி -** கோணி தைக்கும் ஊசி.

**கோந்து** - மரப்பிசின்.

**கோம்பை1** - உலக அனுபவம் இல்லாத நிலை.

**கோம்பை2** - நாட்டு நாய் வகையில் ஒன்று.

**கோரு** - தண்ணீர் முகர்ந்து எடு, அள்ளு.

**கோழிக்காரம்** - கோழியின் காய்ந்த எச்சம்.

**கோழிக்கூடு** - வாழை வகையில் ஒன்று.

**கோறை** - உராய்ந்த காயம்.

## கௌ

**கௌசாலை** - மண் சுவர் மழையில் கரையாமல் இருக்கப் பாதுகாப்புக்காக சுவரின் மேல் பகுதியில் வேயப்படும் கூரை.

**கௌதம்** - வீட்டு வெளிச் சுவரின் நாலுபுறமும் சுற்றிக் கட்டப்படும் கட்டுமான வகை.

**கௌலிபாத்திரம்** - மஞ்சள் நிறக் காய்கள் காய்க்கும் தென்னை வகை.

**கௌளி** - வீட்டுப் பல்லி.

## ச

**சக்கர** - ஆண் குழந்தையின் குறி.

**சக்கரச்சு** - அச்சுவெல்லம். *(பொங்கலுக்கு சக்கரச்சு வாங்கிட்டு வா)*

**சக்கடாவண்டி** - பார வண்டி, மாட்டுவண்டி. *(நாளைக்கு வயலுக்கு உரம் அடிக்கணும். சக்கடா வண்டிக்கு மை போட்டு வை.*

**சக்காத்து** - இலவசம். *(சக்காத்துக்கு தர மாதரி பேசுற, காசு வாங்குறல)*

**சக்கை** - கட்டில், மேசை போன்றவை மேடுபள்ளமான இடத்தில் ஆடாமல் இருக்கக் கீழே கொடுக்கப்படும் அடை. *(கட்டுலு ஆடாமயிருக்க ஒரு சக்கைய கொடுப்பா)*

**சகடை** - தெய்வத் திரு உரு அலங்கரித்த சப்பரத்தை வைத்து இழுத்து வரும் வண்டி.

**சகலப்பாடி** - மனைவியின் உடன்பிறந்தாளின் கணவன்.

**சங்கட்டம்** - பிரச்சினை, கவலை, துன்பம். *(என்ன சங்கட்டம் வந்தாலும் மனச தளரவிடாத).*

**சங்கதி** - சேதி , விஷயம். *(சங்கதி தெரியுமா முத்தையா மக எவங்கூடயோ ஓடிப்போயிட்டாளாமே)*

**சங்காத்தம்** - உறவு, தொடர்பு. *(இனிமே ஒங்க சங்காத்தமே வேண்டாம்ப்பா)*

**சங்கு1** - பாலாடை. *(பிள்ளைக்குச் சங்குல பால ஊத்து)*

**சங்கு2** - கழுத்து. *(அவன சங்க நெரிச்சி கொன்னாலும் தப்பில்ல)*

**சச்சவுக்கம்** - சதுரம். *(அந்த வய நல்ல சச்சவுக்கமா இருக்கே)*

**சஞ்சி** - பை.

**சட்டம்** - வண்டிச் சட்டம்.

**சட்டமா** - முறையாய், ஒழுங்காக. *(சட்டமா மூணு நேரம் திங்க மட்டும் வீட்டுக்கு வந்துருவான்)*

**சட்டவளை** - குறுக்குச்சட்டம் .

**சட்டாப்பை** - சட்டஅகப்பை, தோசைதிருப்பி.

**சட்டித்தோசை** - சட்டியில் வார்க்கும் தோசை.

**சட்ரசம் பரிமாறுகை** - திருமணம் முடிந்த பின் மணமகள் மாப்பிளைக்கு உணவு பரிமாறும் சடங்கு. *(சட்ரசபந்திக்கு நீங்க உக்காரணும் அண்ணாச்சி)*

**சட்டுவம்** - பார்க்க: சட்டாப்பை.

**சட்டைசெய்தல்** - மதிப்புக் கொடுத்தல், பொருட்படுத்துதல் *(அவன் யாரையும் சட்டை செய்ய மாட்டான்).*

**சடங்காதல்** - பூப்பெய்தல், பருவமடைதல்.

**சடங்கு** - பூப்புனித நீராட்டு விழா. *(பொண்ணு சடங்குக்கு நீங்க கண்டிப்பா வந்துரணும்).*

**சடச்சி1** - தலை முடி சடை விழுந்த பெண்.

**சடச்சி2** - களைத்து.

**சடம்பு** - சணல்.

**சடவாறு** - ஒய்வெடு, இளைப்பாறு. *(சடவாற தாய்வீட்டுக்கு வந்திருக்கயா தாயீ)*

**சடார்னு** - சட்டென்று.

**சடுகுடு** - கபடி.

**சடையில்லை** - சடையில் அணியும் ஆபரணம்.

**சண்டு** - பதர்.

**சத்தங்காட்டுதல்** - வேலைக்கு வரும்படி அழைத்தல், கூப்பிடுதல் *(நாளைக்கு அறுப்புக்கு ஆட்களை சத்தங்காட்டீரு)*

**சத்திப்பு** - வாந்தி.

**சதக்குப்பை** - நாட்டு மருந்துச் சரக்கு.

**சந்து** -தொடையிடுக்கு. *(சந்துல ஒரு கட்டி ரெம்ப வலிக்கு)*

**சப்சாடா** - முழுவதும், முற்றிலும். *(சப்சாடா எல்லாத்தையும் வித்துட்டான்)*

**சப்பல்** - சப்புதல், நெளிதல் *(பானையில் சப்பல் எடுக்கணும் ஆள் வந்தா சொல்லு)*

**சப்பாத்து** - காலணி, செருப்பு,

**சப்புச்சவறு** - வேண்டாத பொருட்கள் *( ஏன் இப்படி சப்புச் சவத்தை எல்லாம் போட்டு வீட்டை நிறைச்சு வச்சிருக்க)*

**சப்பையாய்** - தட்டையாய்.

**சம்சாரி** - விவசாயி.

**சம்சாரத் தொழில்** - விவசாயம்.

**சம்படம்** - மூடியுள்ள சிறிய பாத்திரம்.

**சம்மந்தி** - கணவனின் தங்கை.

**சமட்டு** - மிதி.

**சமையக்கட்டு** - சமையல் அறை.

**சரப்பளி** - ஒரு கழுத்தணி.

**சரடு** - கயிறு.

**சரடுவிடுதல்** - பொய்யும் கற்பனையும் கலந்து சொல்லும் சேதி. *(அவன நம்பாதே ரெம்ப சரடு விடுவான்)*

**சரல்** - சவுட்டுமண்.

**சருக்குக்கட்டை**- தேரோட்டத்தை ஒழுங்குபடுத்த தேர்க் காலிலிடும் மரக்கட்டை

**சல்லடம்** - சுடலைசாமி ஆடுபவர் அணியும் கறுப்பு நிற கால்சட்டை

**சல்லிக்காசு** - குறைந்த மதிப்புள்ள அந்தக் கால நாணயம். *(இனிமேல் உனக்குச் சல்லிக்காசு கிடையாது)*

**சல்விசு** - மலிவு. *(தக்காளி விலை ரெம்ப சல்விசா இருக்கே)*

**சலம்** - சீழ். *(முள்ளு குத்தி காலுல சலம் வச்சிருக்கு)*

**சலம்புதல்** - உளறுதல், ஓயாமல் பேசுதல். *(அவன் ஏன் எப்பவும் சலம்பிகிட்டே இருக்கான்)*

**சவ்வுமிட்டாய்** - சவ்வு போல் இழுபடும் இனிப்புமிட்டாய்.

**சவதி** - சகதி, சேறு.

**சவளப்பிள்ளை** - அடுத்த குழந்தை பிறந்த பின்னும் பால்குடி மறவாத மூத்த குழந்தை.

**சவுக்காரம்** - சோப்புக்கட்டி. *(துணி துவைக்கும் சவுக்காரைக் கட்டி வாங்கிட்டு வா)*

## சா

**சாக்கு1** - கோணி .

**சாக்கு2** - பொய்க்காரணம்.

**சாக்குபோக்கு** - போலிக் காரணம்.

**சாக்கோட்டி** - மசக்கை. *(சாக் கோட்டிகாரிக்கு எது சாப்பிட்டா லும் வாந்தி பண்ணதான் செய்யும்)*

**சாட்டக்கம்பு** - தார்க்கம்பு. *(சாட்டக்கம்பால ரெண்டு சாத்து சாத்துனாதான் சரிவரும்)*

**சாட்டவரைக்காய்** - நீளமாக இருக்கும் அவரைக்காய் வகையில் ஒன்று.

**சாடை** - சாயல் *(அவன் ஒன் சாடைக்கே இருக்கானே)*

**சாணிப்பால்** - மாட்டுச் சாணம் கரைத்த தண்ணீர்.

**சாத்து-தல்1** - கதவு போன்ற வற்றை மூடுதல். *(தூறல் அடிக்கு பாரு. சன்னல சாத்து)*

**சாத்து-தல்2** - அடித்தல், உதைத் தல். *(அவன ரெண்டு சாத்து சாத்துனா தான் சரி வருவான்)*

**சாத்திவை** - சாய்த்துவை. *(பலகை யைச் சுவரில் சாத்திவை)*

**சாதிக்காய்ப்பெட்டி** - ஊசி இலை மரவகைப் பலகையினால் செய்யப்பட்ட பெட்டி.

**சாந்து** - சுண்ணாம்பும் மணலும் கீலந்த கலவை.

**சாந்து குழைத்தல்** - மண் அல்லது சிமெண்ட் கலவையைக் கலக்கு தல்.

**சாந்துச்சட்டி** - சாந்துக் கல வையை அள்ளும் இரும்புச் சட்டி, பாண்டு.

**சாந்துப்பொட்டு** - பெண்கள் நெற்றியில் இடும் பொட்டு.

**சாம்பாக்கமார்** - பறையர்.

**சாமணம்** - தட்டாசாரிக் கருவி.

**சாமி** - சாமை எனும் தானிய வகை. *(சாமி சோறு சாப்பிட்டா உடம்புக்கு ரெம்ப நல்லது)*

**சாய்பு** - இஸ்லாமியர், முஸ்லிம்.

**சாய்ப்பு** - ஓட்டு இறக்கம், சாய்வான கூரை.

**சாய்ந்தரம்** - சாயுங்காலம், மாலைநேரம்.

**சாரணவேர்** - நாட்டு மருந்துச் சரக்கு.

**சாரம்1** - கைலி.

**சாரம்2** - சுவர் கட்டும் போது வசதியாக நின்று வேலை செய்ய கம்புகளால் கட்டப்படுவது.

**சாலுவிதை** - உழவுக்குப் பின்னேயே விதையை விதைத்துச் செல்லுதல்.

**சாவக்கோழி** - சேவல்.

**சாவி** - நெற்பதர்.

**சாவிகொடுத்தல்** - பலதும் சொல்லி ஒருவனின் கோபத்தை மேலும் அதிகப்படுத்துதல். *(அவன் பொண்டாட்டி நல்ல சாவி கொடுத்து அனுப்பியிருக்கா போல, அதுதான் இப்படி ஆடு தான்)*

**சாளை** - ஒருவகை மீன்.

## சி

**சிக்கடித்தல்** - சிக்கு நாற்ற மடித்தல்.

**சிக்காரு பண்ணு-தல்** - சிக்கனம் பண்ணுதல்.

**சிங்கி1** - ஜால்ரா.

**சிங்கி2** - எல்லாவற்றுக்கும் ஆமாம் சாமி போட்டுக்கொண்டு ஒருவரை அண்டிப் பிழைப்பு நடத்துபவன். *(அவனுக்கு இவன் சரியான சிங்கி)*

**சிங்கி அடித்தல்** - வாழ்வதற்குப் பணமின்றித் திண்டாடுவது.

**சிட்டம்** - குறிப்பிட்ட நீளம் கொண்ட கையால் நூற்ற நூலின் அளவு. *(எத்தன சிட்டம் கொண்டு வந்திருக்க)*

**சிட்டவட்டி** - நாள்தோறும் தவணை முறையில் செலுத்தும் கடன்.

**சிட்டா** - குறிப்பேடு. *(சிட்டால என்ன இருக்குனு பாரேன்)*

**சிட்டி** - மண்கிண்ணம்.

**சிட்டை** - வரவு செலவு விபரங் காட்டும் கணக்குப் புத்தகம் *(சிட்டையில இருக்கிறபடி பாத்தா இருப்பு குறையுதே)*

**சித்தாள்** - கட்டட வேலையில் கொத்தனாருக்கு உதவி புரியும் வேலையாள்.

**சிப்பம்** - கருப்பட்டி, புளி போன்ற வற்றின் ஒரே எடை உள்ள சிறிய அளவில் கட்டப்பட்ட கட்டு. *(நேத்து கருப்பட்டி எத்தன சிப்பம் வந்தது)*

**சிப்பல்** - கஞ்சி வடிக்கும் கண் தட்டு. *(சோத்த வடிக்கணும் சிப்பல் தட்டு எங்க)*

**சிரட்டை1** - கொட்டாங்கச்சி. *(ரெண்டு சிரட்டாப்பை வேணும்)*

**சிரட்டை2** - முழங்கால் முட்டு. *(கீழ விழுந்ததுல சிரட்ட உடஞ்சி போச்சு)*

**சிரட்டக்கருப்பட்டி** - கொட்டாங் கச்சியில் ஊற்றிக் காய்ச்சிய கருப்புக்கட்டி. *(சிரட்டகருப்பட்டி என்ன வில)*

**சிரட்டாப்பை** - கொட்டாங் கச்சியில் செய்த நீண்ட கையுள்ள அகப்பை. விஷேட வீட்டுச் சமை யலில் இதனைப் பயன்படுத்துவர்.

**சிராய்** - பனங்கட்டை, மரக்கட்டை போன்றவற்றைச் செதுக்கிய பின் எஞ்சும் கழிவு.

**சிராய்ப்பு** - தரையில் உராய்வ தால் ஏற்படும் காயம்.

**சிரிப்பாணி** - அடங்காச்சிரிப்பு, அளவில்லாத சிரிப்பு.

**சில்லாட்டை** - தென்னை, பனை மர மட்டைகளை மரத்தோடு

பிணைத்து வைத்திருக்கும் பகுதி.

**சில்லுக்கருப்பட்டி** - சுக்குப் போட்டு சின்னசின்னத் துண்டுகளாக ஊற்றப்பட்ட கருப்பட்டி.

**சில்லுமூக்கு** - பொன்னாசி.

**சிலந்தி** - உடலில் உண்டாகும் ஒரு வகை விஷக்கட்டி.

**சிலுப்புதல்** - தயிர் கடைதல்.

**சிலும்பு** - சிறிய பனஞ்சிராய்.

**சிறு தீவனம்** - நொறுக்குத் தீனி.

**சிறுபயறு** - பாசிப்பயறு, பச்சைப்பயறு.

**சிறு பருப்பு** - பாசிப்பருப்பு, பச்சைப்பருப்பு.

**சிறுவாடு** - வீட்டிலுள்ள பெண்களின் சிறுசேமிப்பில் சேரும் பணம். *(சிறுவாட்டுப் பணத்தில் எனக்கு ஒரு சட்டை எடுத்துக் கொடேன் பாட்டி)*

**சிறு வீட்டுப் பொங்கல்** - பொங்கல் கழிந்து தைபூசத்திற்கு முன் ஒரு நாள் வீட்டில் உள்ள சிறுமிகளால் விடப்படும் பொங்கல்.

## சீ

**சீக்காளி** - நோயாளி.

**சீங்குழல்** - புல்லாங்குழல்.

**சீசம்.** - ஈயம் *(பித்தளை சட்டி சீசம் போய் கிடக்கு சீசம் பூசணும்)*

**சீசா** -கண்ணாடிக் குப்பி. *(கீழ விழுந்து உடஞ்சிராம சீசாவைப் பத்திரமா வை)*

**சீட்டி** - வாயால் சீழ்க்கை ஒலி எழுப்புதல் *(கொஞ்சங்கூட மரியாதை இல்லாம சீட்டி அடிச்சிட்டு வார)*

**சீட்டித்துணி** - பூ போன்ற வடிவங்கள் அச்சடித்த துணிவகை. *(சீட்டித்துணில பாவாடை தச்சிப் போட்டா பிள்ளைக்கு நல்லாயிருக்கும்)*

**சீட்டுகரஸ்வான்** - ஏலச்சீட்டு நடத்துபவன்.

**சீண்டரம்** - தொந்தரவு, *(இந்த மாதரி சீண்டரம் பிடிச்ச வேலையெல்லாம் நம்மால செய்ய முடியாதப்பா)*

**சீண்டுதல்** - கோபம் கொள்ளச் செய்தல், தொந்தரவு செய்தல் *(உனக்கு வேற வேல இல்லயா அவன போயி சீண்டிட்டு இருக்க)*

**சீணம்** - தளர்ச்சி, அலுப்பு.

**சீணித்து** - அழிவுற்று, செல்வம் நலிவுற்று. *(யாபாரம் இல்லாம கட சீணித்துப் போச்சு)*

**சீத்துவம்** - திறமை. சக்தி.

**சீந்து-தல்** - மதித்தல். *(இப்படி இருந்தா உன்ன நாய் கூட சீந்தாது)*

**சீந்துவார்** - மதிப்பவர். *(நீ சீந்துவார் இல்லாம சீரழிய தான் போற)*

**சீப்பு** - வாழைக் குலையின் பழங்களின் அடுக்கு.

**சீப்புசீப்பா** - அடுக்கடுக்காய்.

**சீம்பால்** - பசு ஈன்ற முதல் மூன்று நாள் பால் *(மாடு ஈனிட்டாமே. சீம்பால் கிடைக்குமா)*

**சீமைச்சரக்கு** - அபூர்வப் பொருள், வெளிநாட்டுப் பொருள் *(சீமைல இல்லாத சரக்கு மாதரி இந்த வில சொல்லுற)*

**சீலமண்** - மருந்துச் சட்டியின்

வாயைக் கட்டும் துணியின் மேல் பூசும் மண் பூச்சு.

***சீவாளி*** - நாகஸ்வரத்தின் ஒரு பகுதி.

***சீவிலி*** - பலி பூசைக்காக நாள் தோறும் எழுந்தருளச் செய்யும் தெய்வம்.

***சீவுளி*** - தச்சர் பலகையைச் சீவு வதற்குப் பயன்படுத்தும் இழைப் புளி.

***சீனாக்காரம்*** - படிகாரம்.

***சீனாசட்டி*** - சமையலுக்குப் பயன்படுத்தும் இருப்புச் சட்டி.

***சீனிஅவரைக்காய்*** - கொத்த வரங்காய்.

***சீனிக்கிழங்கு*** - சக்கரை வள்ளிக் கிழங்கு.

***சீனிமிட்டாசி*** - சர்க்கரையில் செய்த மிட்டாய்.

## சு

**சுக்காப்பி** - சுக்கு, மிளகு, கருப் பட்டி இவை கலந்த சூடான பானம். *(வாடை நேரத்துல சூடா சுக்காப்பி குடிச்சா இதமா யிருக்கும்)*

**சுக்காம்பாறை** - சுண்ணாம்பு சத்து நிறைந்த பாறை. *(இது சுக் காம் பாற பூமி.அது தான் தண்ணி கடுத்து கிடக்கு)*

**சுக்குசுக்கா** - துண்டு துண்டாய். *(கண்ணாடி தம்ளர் சுக்குசுக்கா ஒடஞ்சிப் போச்சு)*

**சுக்குசெட்டி** - கருமி, கஞ்சன். *(அவனே ஒரு சுக்குசெட்டி அவங் கிட்ட போயி காசு கேக்கிறயே குடுப்பானா)*

**சுக்குநாறிப்புல்** - ஒரு வகைப் புல்.

**சுக்குநூறா** - பார்க்க: சுக்குசுக்கா

**சுக்குப்பால்** - சுக்குச் சாறு

**சுக்குவென்னி** - பார்க்க: சுக்குக் காப்பி.

**சுகக்கேடு** - உடல் நலமின்மை.

**சுகப்படாது** - சரிப்படாது, நல்ல விதமாக இருக்காது.

**சுகமாதல்** - நோய் குணமாகுதல். *(காய்ச்சலுன்னு சொன்னியே இப்பம் சுகமாயிட்டா)*

**சுகவாசி** - பார்க்க: சுகஜீவனம்.

**சுகஜன்னி**- பொருந்தா நேரத்தில் உடலுறவு கொள்ளுவதனால் உண் டாகும் ஜன்னிக் காய்ச்சல். குறிப் பாக எண்ணெய் தேய்த்துக் குளித்த அன்று உடலுறவு கொண் டால் இவ்வாறு உண்டாகும் என்பது நம்பிக்கை. *(அந்தக் காலத் துல எங்க தாத்தா சுகஜன்னி வந்து செத்துப் போனதா சொல்லு வாங்க)*

**சுகஜீவனம்** - உழைப்பு ஏது மில்லாமல் வரும் வருமானத்தில் வாழ்பவன்/ள்.

**சுடுதண்ணி** - சோறுவடித்த கஞ்சி.

**சுண்டக்கறி** - சுண்ட வைத்த பழங்கறி. *(பழையதில் மோர் ஊத்தி சுண்டக்கறி வச்சு சாப்பிட்டா தேவாமிர்தமா இருக்கும்)*

**சுண்டக்கா பய** - அற்பன், பொடிப்பயல். *(இந்த சுண்டக்கா பய எப்படியெல்லாம் பேசிட் டான்)*

**சுண்டுவது** - விரலால் வலிக்கும் படி தெறிப்பது.

**சுண்ணாம்புக்கரண்டை** - வெத்திலை சுண்ணாம்பு வைக்கப் பயன்படும் சிமிழ். *(சுண்ணாம்புக் கரண்டையை எங்க வச்சேன்னு தெரியல. நீ பாத்தியா?)*

**சுணக்கம்** - தாமதம். *(இன்னும் என்ன சுணக்கம் சீக்கிரம் கெளம்புங்கப்பா)*

**சுணங்குதல்** - தாமதித்தல். *(இப்படி சுணங்கிட்டே இருந்தா எப்ப போய் சேர்றது)*

**சுத்தக்கிரயம்** - எல்லா உரிமைகளையும் விலை கொடுத்து வாங்குதல். *(வீட்டை சுத்தக்கிரயத்துக்கு முடிச்சிற வேண்டியதுதான்)*

**சுத்தப்படாது** - சரிப்பட்டு வராது. *(அவன இந்த வேலய செய்யச் சொன்னா சுத்தப்படாது)*

**சுத்தப்பொய்** - முழுப்பொய். *(அவன் என்னப் பத்தி சொல்லுறது எல்லாம் சுத்தப் பொய்)*

**சுத்தமா** - முழுவதுமாய், முற்றிலுமாய். *(கையில இருந்த துட்டெல்லாம் சுத்தமா செலவழிஞ்சி போச்சு)*

**சுத்தி1** - மருந்து முதலியவற்றின் குற்றம் நீக்குதல்.

**சுத்தி2** - சுத்தியல்.

**சுத்திப்போடுதல்** - திருஷ்டிக் கழித்தல். 'மிளகாய்வத்தல், உப்பு, கடுகு போன்றவற்றை எடுத்து திருஷ்டி உள்ளவரைச் சுற்றிப் பின் அதை அடுப்பில் போடுதல். *(மாப்பிள்ளை பொண்ணுக்கு சுத்திப் போடும்மா ஊர் திட்டியெல்லாம் கழியட்டும்)*

**சுத்துக்கால்** - வயலைச் சுற்றி உள்ள ஓரப்பகுதி.

**சுதந்தரம்** - அறுவடையின் போது விவசாயம் சாராத தொழிலாளிகள் தவசங்களைச் சம்பளமாகப் பெறும் உரிமை.

**சுதி குறைஞ்சு போச்சு** - வீராப்பு குறைந்து போகுதல்.

**சும்மாடு** - தலைச்சுமை தலையை அழுத்தாமல் இருக்க தலையில் சுமைக்கு அடியில் வைக்கும் துணிச்சுருட்டை.

**சும்பப்பய** - மூடப்பயல் *(சும்பப் பய அவன் அவங்கிட்ட உனக்கு என்ன பேச்சு)*

**சுமகூலி** - சுமை தூக்குவதற்குக் கொடுக்கப்படும் கூலி. *(சுண்டக்கா காப்பணம் சுமகூலி முக்காப் பணம்)*

**சுரசம்** - சூட்டுக்கோல் போன்ற வற்றால் 'சுர்'ரென்று சத்தம் வரும்படிக்கு மருந்துச் சாற்றைச் சூடு பண்ணுதல். *(இதை சுரசம் பண்ணி சாப்பிடு)*

**சுரண்டு** - பிறாண்டு.

**சுருக்க** - விரைவாய், சீக்கிரமாய். *(கொஞ்சம் இரி. கடைக்குப் போய்யிட்டு சுருக்க வந்துருதேன்)*

**சுருக்கா** - சீக்கிரமாய். *(கடைக்கி போயிட்டு சுருக்கா வா. நா வெளிய போவணும்)*

**சுருக்காங்கண்ணி** - சுருக்கு முடிச்சு. *(மாட்ட சுருக்காங்கண்ணி போட்டுக் கட்டு. அப்பதான் அவுக்க சுளுவா இருக்கும்)*

**சுருட்டு மருந்து** - மிளகாய்ப் பயிர் போன்ற பயிர்களில் உண்டாகும் இலைச் சுருட்டு நோய்க்குத் தெளிக்கும் பூச்சு மருந்து.

*(நாளைக்கு மிளசெடிக்கு சுருட்டு மருந்து அடிக்கணும்)*


**சுருள்** - திருமண விஷேடத்தில் சொந்தங்களுக்கு செய்யும் செய் முறைக் கட்டு. *(உடப்பிறந்தா சுருள் வைக்க மறந்துறாத)*

**சுரை** - தோடு போன்ற அணி களின் திருகை முடுக்கும் குழல். *(சுர தேஞ்சு போச்சு போல. திருக்கு சரியா சேர மாட்டேங்குது)*

**சுவாவி** - அப்பாவி. *(சுவாவி அவன் பாவம் அவன போய் அடிச்சிரிக்கயே)*

**சுவரொட்டி1** - ஆட்டின் மண் ணீரல்.

**சுவரொட்டி2** - சுவரில் ஒட்டிய படி ஆணியில் மாட்டக்கூடிய சிறிய மண்ணெண்ணெய்ச் சிமினி விளக்கு.




**சுழட்டி** - கதவின் உள் தாழ்ப்பாள். *(தூங்கப் போனா கதவுசுழட்டிய போட்டுட்டுத் தூங்கு)*

**சுழட்டு** - சுற்று. *(அவன் கம்ப சுழட்டுனானா ஒரு பய பக்கத்துல நிக்க முடியாது)*

**சுழண்டு** - சுற்றி. *(அடிச்ச அடியில பய சுழண்டு விழுந்துட்டான்ல)*

**சுழியன்** - சுட்டித்தனம் மிக்கவன், கெட்டிக்காரன். *(பய படுச் சுழியன்)*

**சுள்ளி** - விறகு.

**சுள்ளை** - சூளை.

**சுளவு** - முறம்.

**சுளு** - எளிது.

## சூ

**சூத்தப்பல்** - சொத்தைப் பல். *(சூத்தப்பல்லு வலிச்சுகிட்டே இருக்கு)*

**சூத்தை** - சொத்தை. *(சூத்தை பாத்து காய பொறுக்கு)*

**சூட்டிப்பு** - சூட்டிகை, சுறுசுறுப்பு. *(பையன் நல்ல சூட்டிப்பா இருக் கானே)*

**சூட்டுக்கோல்** - சூடு வைக்கும் கம்பி.

**சூட்டோடு சூடாய்** - ஒரு செயலை முடித்ததும் அதன் தொடர்ச்சி யாய். *(சூட்டோடு சூடா சின்னவ கலியாணத்தையும் முடிச்சிட்டா நிம்மதியா மூச்சு விடலாம்)*

**சூடடிப்பு** - தாள் அடி , அடித்த கதிரைச் சூட்டிலிருந்து எடுத்து உதறுதல் *(ராத்திரி சூடடிப்புக்கு மறக்காம வந்துருப்பா)*

**சூடம்** - சூடன், கற்பூரம். *(ரெண்டு ரூவாக்கி சூடம் குடுப்பா)*

**சூடாயிருத்தல்** - கோபமா யிருத்தல்.

**சூடு பிடித்தல்** - நீர்க் கடுப்பு நோய்.

**சுடுபோடு-தல்** - மாடு போன்ற பிராணிகளுக்கு சூட்டுக்குறியிடுதல்.

**சூதுவாது** - கள்ளங்கபடு. *(அவன் சூதுவாது இல்லாதவன்)*

**சூலிப்பிள்ளை** - கர்ப்பிணி பெண். *(சூலிப்பிள்ளைக்கு ஆச பட்டத வாங்கி குடு)*

**சூவிடுதல்** - திருக்கார்த்திகை அன்று கரியையும் உப்பையும் பொடித்துத் துணியில் கட்டி நெருப்பிட்டுக் கயிற்றில் கட்டிச் சுற்றுவது.

## செ

**செங்கணக்கு** - பொய்க் கணக்கு. *(அவனெழுதுன கணக்க குப்பையில போடு. எல்லாம் செங் கணக்கு)*

**செங்கமால்** - செங்கற் சூளை. *(செங்கமாலுக்குப் போய் ரெண்டு வண்டி செங்கல் எடுத்துட்டு வரணும்)*

**செங்காமட்டி** - செங்கல்

**செங்காய்** - பழுக்கும் பருவத்தில் உள்ள காய். *(செங்காயா ரெண்டு மாங்கா தாயேன்)*

**செத்த நேரம்** - கொஞ்ச நேரம். *(செத்த நேரம் ஒன் சைக்கிளை கொடுக்கியா)*

**செந்தட்டி** - உடலில் பட்டால் நமைச்சல் உண்டாக்கும் தன்மை கொண்ட இலைகளை உடைய செடி

**செந்தவிடு** - சம்பா நெல் பச்சரிசி தவிடு.

**செந்துளுவன்** - சிவந்த தோலுடைய பழங்களைக் கொண்ட வாழை வகை.

**செந்தூக்கு** - நேராய்த் தலைக்கு மேலே தூக்குதல். *(இவ்வளவு பெரிய கல்ல செந்தூக்கா தூக்கிட் டானே)*

**செண்டவத்தல்** - முற்றும் விளையாத, பழுக்காத சற்று வெள்ளை நிறத்தில் இருக்கும் சொத்தை மிளகாய் வற்றல்.

**செண்டா** - வருவாய்த் துறைக்குக் கொடுபட வேண்டிய கடன் பாக்கிக்காக வருவாய்த் துறையினரால் கடன்பட்டவரின் அறுவடைக்குத் தயாராய் இருக்கும் வயலில் நாட்டப்படும் வெள்ளைக் கொடி. இப்படிக் கொடி நாட்டப்பட்டால் கடன் அடைபடாமல் அந்த வயலில் அறுவடை செய்ய முடியாது.

**செண்டு** - பூச்செண்டு.

**செணம்** - கணப்பொழுது.

**செப்பானை** - செம்புப்பானை.

**செப்பு சாமான்** - சிறு பிள்ளைகளின் விளையாட்டுப் பொருள். *(சின்ன பிள்ளையா நீ இன்னும் செப்பு சாமான் வச்சு விளையாடுத)*

**செப்பை** - இடுப்பு, குறுக்கு.

**செம்மான்** - தோல் உபகரணங்கள் செய்யும் தோல் கலைஞர்.

**செம்முதல்1** - மக்குதல்.

**செம்முதல்2** - மருந்துப் பண்டங்களைப் புடமிடும்போது களிமண்ணில் தோய்த்த துணியால் மூடுவது.

**செமித்தல்** - செரித்தல், சீரணமாதல்.

**செராட்டாப்பை** - கொட்டங்கச்சியில் செய்யப்பட்ட நீண்ட கையுள்ள அகப்பை.

**செரை** - தொந்தரவு.

**செல்லடித்தல்** - கடனைத் திருப்பிக் கொடுக்கையில் கடன் பத்திரத்தில் வரவு வைத்தல்.

**செல்லாகிப் போனார்** - இறந்து போனார். *(அவர பத்தி இப்ப வந்து கேக்குறிங்களே அவர் செல்லாகி போயி ரெண்டு வருசம் ஆச்சு)*

**செல்லும் செலவுக்கு** - அவசியமான செலவுக்கு போதுமானதாக.

**செலவாளி** - உதாரித்தனமாகச் செலவு செய்பவன்.

**செலவுப்பெட்டி** - அஞ்சறைப் பெட்டி

**செவலை** - செவல் நிறம், கபில நிறம். *(செவலைப் பசு வந்திட்டா பார்)*

**செவனேனு** - எதுவும் பேசாமல், அமைதியாக.

**செவுட்டுல** - கன்னத்தில். *(செவுட்டுல அடிச்ச மாதரி சொல்லிட்டு வந்திட்டேன்)*

**செவுள்** - கன்னம்.

**சென்டு** - நில அளவையில் ஒன்று, 100 சென்ட் ஒரு ஏக்கர்.

**சென்னை** - கன்னம் *(ஓங்கி சென்னையில ஒரு அற விட்டா காது பிஞ்சிரும்)*

## சே

**சேக்கா** - சிறுவர்கள் சண்டையிட்டு மீண்டும் நண்பர்களாவது, பழமிடுவது.

**சேக்காளி** - நண்பன். கூட்டாளி.

**சேக்கு** - கிராப்பு, முடிவெட்டுகை.

**சேகரம்** - குடும்பம், வம்சம்.

**சேங்கொட்டை** - சேமரக் கொட்டை, இந்தக் கொட்டையின் பால் கொண்டு சலவைத் துணிகளுக்குக் குறியிடுவர்.

**சேடான்** - பூரான்.

**சேத்துப்புண்** - சேறு, தண்ணீர் முதலியவற்றில் நீண்ட நேரம் நிற்பதால் கால் விரல்களுக்கிடையே உண்டாகும் புண்.

**சேந்தமானிக்கி** - சேர்ந்தாற் போல்.

**சேர்** - தானியங்களைச் சேமித்து வைக்கும் களஞ்சியம்.

**சேர்மானம்** - பலவகையான பொருட்களைச் சேர்த்துச் செய்யக்கூடிய கலவையில் சேரக்கூடிய பொருட்களின் பெயர் மற்றும் அளவு.

**சேளம்** - மீதி, மிச்சம், பாக்கி.

**சேறடி** - நாற்று போன்றவற்றின் வேரில் இருக்கும் சேறு.

**சேனை** - பிறந்த குழந்தைக்கு முதன் முதல் கொடுக்கப்படும் சீனித் தண்ணீர்.

## சை

**சைடு** - ஹேர்பின், கொண்டை ஊசி.

**சைடுவாங்கு** - ஒரு வாகனம் மற்றொரு வாகனத்தை முந்துவது.

**சைவப் படைப்பு** - சிறுதெய்வங்

களுக்குப் படைக்கப்படும் சைவ நைவேதியம்.

**சைனா கோழி** - கலப்பினக் கோழி, சீனா கோழி.

## சொ

**சொக்காரன்** - தந்தை வழி உறவினன்.

**சொங்கி** - ஒன்றுக்கும் பயனற்றவன், ஒன்றும் இயலாதவன்.

**சொச்சம்** - மீதிப்பணம்.

**சொடக்கு விடுதல்** - நெட்டி வாங்குதல்.

**சொண்டான் கலயம்** - சிறிய மண்சட்டி.

**சொதி** - தேங்காய்ப் பாலில் செய்யப்படும் குழம்பு, நெல்லை வட்டார விருந்துகளில் சிறப்பான இடம் பெறும் ஒன்று.

**சொர்ணாப்பம்** - சாமி சப்பரத்தில் வீதி உலா வரும்போது சாமிக்குத் தேங்காய்ப் பழம் வைத்து அர்ச்சனை செய்வது.

**சொல்லாம பறயாம** - தகவல் எதையும் தெரிவிக்காமல்.

**சொளவு** - சுளகு, முறம்.

## சோ

**சோட்ட** - பருத்திப்பிஞ்சு.

**சோடி** - அலங்கரி.

**சோடு** - செருப்பு.

**சோத்துக்கை** - வலது கை.

**சோத்துப்பலகை** - சோறு வடிக்கப் பயன்படும் பலகை.

**சோந்துபோ-தல்** - சோர்ந்து போகுதல்.

**சோப்புளாங்கி** - பார்க்க: சொங்கி.

**சோமாறு** - பரிமாறு.

**சோவாரி** - சோம்பேறி, பயனற்றவன்.

**சோவை** - இரத்தச் சோகை.

**சோலி** - வேலை.

**சோவி** - சோழி.

**சோறு** - பனை முதலியவற்றின் வலுவற்ற உள்ளீடு

## ட

**டப்பா** - சிமிழ். *(பொடி டப்பாவை யாரவது பாத்தீங்களா?)*

**டப்பி** - பார்க்க: டப்பா.

**டபரா** - தட்டையான அடிபாகத்தைக் கொண்ட சின்னக் கிண்ணம்.

**டம்மாரம்** - முழுச்செவிடு.

## டா

**டாணா ஆணி** - (ட)டாணா வடிவத்திலிருக்கும் ஆணி.

## டி

**டிகிரி** - வழக்கில் நீதிமன்ற ஆணை.

**டிரங்கு பெட்டி** - துணி மணி வைக்கப் பயன்படும் இரும்புத் தகட்டினாலான பெட்டி.

## டூ

**டூக்காப்பதக்கம்** - பெண்கள் அணியும் பதக்க வகை.

## டூ

**டூ** - சேர்ந்திருக்கும் நடுவிரலையும் சுட்டு விரலையும் பிரித்துக் காட்

டிச் சிறுவர்களுக்கிடையே நட்பை முறித்துக்கொள்ளும் குறிப்பு. *(உன்னோட டூ)*

## டோ

**டோலாக்கு** - பெண்கள் காதணி.

## த

**தக்களி** - பஞ்சுப் பட்டையில் நூல் நூற்கும் கருவி. (அந்த காலத்தில பள்ளிக்கூடத்துக்கு பிள்ளைங்க தக்களியும் பஞ்சி பட்டையும் கொண்டு போனாங்களாம்)

**தகடுதத்தம்** - தில்லுமுல்லு, ஏமாற்றுவேலை.

**தகடுவைத்தல்** - ஒருவரைக் கெடுக்க அல்லது அழிக்க மந்திரித்த செம்பு அல்லது வெள்ளித் தகட்டை அவருக்குத் தொடர்பான இடத்தில் புதைத்து வைத்தல்.

**தகணு** - முளைவிட்ட பனங் கொட்டையின் உள்ளீடு.

**தகரால்** - வாய்ச்சண்டை, வாக்கு வாதம். *(பேசிக்கிட்டு இருக்கும் போதே ரெண்டு பேருக்கும் தகரால் ஆயிப் போச்சு)*

**தகை** - தாகம். *(தண்ணி தகையா இருக்கு குடிக்கத் தண்ணி இருந்தா குடேன்)*

**தகையாறு**- தாகம் தணி.

**தச்சக்குடி** - தச்சர் குடியிருக்கும் பகுதி.

**தச்சமுழம்** - 33 அங்குலம் அல்லது 2 3/4 அடி கொண்ட நீட்டலளவு.

**தச்சு** - தச்சு வேலை செய்பவர் ஒரு நாள் வேலை அளவு. *(கட்டிலுக்கு அஞ்சு தச்சு ஆகும்)*

**தச்சுக்கழித்தல்** - புதிதாகக் கட்டிய கட்டடத்தின் புது மனை புகு விழாவிற்கு முந்தைய இரவு தச்சர்களால் செய்யப்படும் சடங்கு. *(ஆசாரிகிட்ட சொல்லி தச்சு கழிக்க எற்பாடு பண்ணச் சொல்லணும்)*

**தசாங்கம்** - பத்து வகை மணமூட்டிகளாலான தூபப் பொடி.

**தட்டட்டி** - செங்கல் குத்திய கட்டடத்தின் மொட்டை மாடி.

**தட்டளிதல்** - அலைக்கழிதல், நிலை குலைதல்.

**தட்டளிந்து** - அலைகழிந்து.

**தட்டளிவு** - மனம் அலைபாயுதல்.

**தட்டப்பயறு** - பயறு வகை.

**தட்டாக்குடி** - பொற்கொல்லர் குடியிருக்கும் பகுதி.

**தட்டாம் பூச்சி** - தும்பி.

**தட்டான்** - பொற்கொல்லர்.

**தட்டு1** - மரச்சட்டதில் உள்ள துளை.

**தட்டு2** - சிறிய பரப்புள்ள வயல்.

**தட்டு3**- பாகம், பகுதி.

**தட்டுசொளவு** - வட்டமான முறம்.

**தட்டுப்படுதல்** - புலன்களுக்கு விஷயமாதல். *(ஆளு என்ன ரெம்ப நாளா கண்ணுலயே தட்டுப் படல)*

**தட்டுமறித்தல்** - கிளியந்தட்டு விளையாட்டு.

**தட்டை** - சோளம், கம்பு போன்ற வற்றின் தாள்.

**தடயம்** - தங்க நகை. *( தடயத்த வச்சி பணம் பொரட்ட வேண்டியதுதான்)*

**தடவ(ல்)** - தடவை, முறை. *(எத்தன தடவ சொன்னாலும் உனக்குப் புரியாதா)*

**தடவுபருத்தி** - காய்ப்பு குறைந்த பின் பறிக்கும் பருத்தி.

**தடி** - தேர்ச் சக்கரத்தை உருளச் செய்யும் பெரிய மரத்துண்டு.

**தடி சாத்துதல்** - கையெழுத்துப் போடுதல்*(பத்தரத்துல தடிசாத்த வேண்டியது தான் பாக்கி)*

**தடித்த பேச்சு** - வரம்பு மீறிய பேச்சு. *(தடித்த பேச்சு பேசிட்டான் அதுதான் கோவம் வந்துட்டு)*

**தடிபோடுதல்** - தேர் இழுக்கும் போது சக்கரம் சுழல சக்கரத்தை நீண்ட தடியால் தூக்கிவிடுதல்.

**தடிமாடு** - தடியன்.

**தடியங்காய்** - கலியாணப் பூசணி, சாம்பல் பூசணி, திருஷ்டி பூசணி.

**தடி வெட்டிப் போடுதல்** - ஒரு செயல் நடை பெறாமல் போகும் படிப் பேசுதல்.

**தடுக்கு** - ஒருவர் உட்காரக்கூடிய அளவிலான ஓலைப்பாய்.

**தடுமல்** - ஜலதோஷம்.

**தடை1** - மெட்டி முதலியவை காலி லிருந்து கழன்று விட்டாமல் இருக்க மெட்டி போன்றவற்றின் முன்பாகப் போடும் இரும்பு வளையம். *(காலுல ஏன் தட போட்டுருக்க மெட்டி கழறுதா?)*

**தடை2** - பொடி, புகையிலை போன்றவற்றைப் பொதிய பயன் படும் காய்ந்த வாழை மட்டை.

**தண்டங்கீரை** - கீரை வகையில் ஒன்று.

**தண்டட்டி** - காதணி வகை.

**தண்டல்** - தோணித் தலைவன்.

**தண்டு1** - கீரைத்தண்டு.

**தண்டு2** - வசூல் செய், வசூலி.

**தண்டை** -கால்தண்டை, காலில் அணியும் ஆபரண வகை.

**தண்டையம்** - நீளக் கழி.

**தண்ணிகாட்டுதல்** - கால்நடை களைத் தண்ணீர் குடிக்கச் செய் தல். *(செவல மாட்டுக்கு தண்ணி காட்டிட்டையா?)*

**தணிவு** - குறைவு, தாழ்வு.

**தத்து** - உயிராபத்தை உண்டாக்கக் கூடிய விபத்து அல்லது நிகழ்வு, கண்டம்*(வண்டியில இருந்து கீழ விழுந்தது தத்துக் கழிஞ்ச மாதரின்னு நினச்சிக்கோ)*

**தப்பளம் போடுதல்** - எண்ணெய் முதலியவற்றைத் தலை, உடம்பு இவற்றில் நிரம்ப தேய்த்தல்.

**தப்பிதம்** - தவறு. *(இந்த மாதரி தப்பிதம் இனி மேல் நடக்காது)*

**தம்படிகாசு** - பழைய காலத்துக் குறைந்த மதிப்புள்ள நாணயம். *(எங்கிட்ட தம்படிகாசு கிடையாது)*

**தமர்** - துளை போடும் கருவியால் போடப்பட்ட ஓட்டை.

**தமர் உடுக்கை** - துளையிடும் கருவி.

**தமரு** - துளையிடும் கருவி.

**தரம்** - தடவை, முறை. *(இந்த ஒரு தரம் கண்டிப்பா எனக்கு நீ உதவி பண்ணியே ஆகணும்)*

**தரா** - செம்பும் காரீயமும் கலந்த உலோகம்.

**தராதரம்** - ஏற்றத்தாழ்வு. *(பெரிய வன் சின்னவங்கிற தராதரம் இல்லாம போச்சி)*

**தரிப்பு** - இருப்பு. *(அவள் வந்துட் டான்னு கேட்டதுல இருந்து இவனுக்கு ஒரு எடத்துலயும் தரிப்பு கொள்ளமாட்டேங்குது)*

**தருவை** - இரண்டு மணல் மேடு களுக்கு இடையே உள்ள பசுமை யான பகுதி.

**தலக்கயறு** - மாட்டைக் கையில் பிடித்துக்கொள்ளுவதற்கு வசதியாக மாட்டின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் நீளக் கயிறு.

**தலகாணி** -தலையணை.

**தலபட்டு** - தலையிட்டு. *(நீ தல பட்டு தான் இந்த காரியத்த நல்லபடியா முடிச்சி தரணும்)*

**தலபாடம்** - முற்றாக ஒன்றைக் கற்றுத் தேர்ந்த நிலை.

**தலபாரம்** - தலைவலி. *(காலை யில இருந்து தலப்பாரமா இருக்கு)*

**தலயடிநெல்** - நெற்கதிரின் முதலடி நெல்.

**தலயீத்து** - மாட்டின் தலைப் பிரசவம் *(தலயீத்து மாடா பாத்து ஒண்ணு வாங்கணும்)*

**தலையிலடிக்க** - ஒருவர் தலை யைத் தொட்டுச் சத்தியம் செய்தல். *(தலையிலடிக்க எனக்கு ஒண்ணும் தெரியாது)*

**தவ்வுதல்** - தாவுதல்.

**தவக்கா** - தவளை.

**தவசுப்பிள்ளை** - வீடுகளில் சமையல் வேலை செய்யும் சமையல்காரர்.

**தவட்டை** - கன்னம்.

**தவளக்கொத்து** - இரட்டைக் கொக்கி. *(இந்த வீட்டுல ஊஞ்சல் மாட்ட தவளக்கொத்து இருக்கா)*

**தவளை வரவழைத்தல்** - கை முண்டாவில் சதை திரளும்படி செய்தல்.

**தளகயறு** - பனை ஏறுபவர் காலில் மாட்டிக் கொள்ளும் கயிறு.

**தளம்** - நடுக்கூடம், பட்டாலை. *(தளத்துல படுத்துக்கோ)*

**தளவாட சாமான்** - ஒரு வேலை யைச் செய்வதற்குத் தேவையான கருவிகள் மற்றும் பொருட்கள்.

**தளுத்தல்** - துளிர்த்தல். *(முருங்க நல்ல தளுத்துட்டு பாத்தையா)*

**தறி** - கம்பு முதலியவற்றைத் துண் டாக்கு. *(சீக்கிரம் ரெண்டு விறகை தறிச்சு போடு)*

**தன்பழுப்பு** - செயற்கை முறை யில் அல்லாமல் காய் தானாகப் பழுத்தல்.

**தன்னக்கட்டிபோதல்** - வரவும் செலவும் ஒனறாய் இருத்தல் *(புதுசா தொடங்கின யாபாரம் தன்னக்கட்டி போகுதுன்னு சொன் னான்)*

## தா

**தாக்கல்** - செய்தி, தகவல். *(ஊருக்குப் போன உன் மகங்கிட்ட இருந்து எதாவது தாக்கல் வந்ததா?)*

**தாக்காட்டு-தல்** - ஒரு செயலைச் செய்ய விடாமல் தாமதப்படுத்த வைத்தல். *(நானும் எவ்வளவோ தாக்காட்டிப் பாத்துட்டேன்*

ஆனாலும் அவன் போயிட்டான்)

தாக்கு - மிளகாய் வற்றல் எடை அளவு. *(இந்தப் பறியில வத்தல் எத்தன தாக்கு வந்திருக்கு?)*

தாக்கோல் - சாவி, திறவுகோல். *(இந்த தாக்கோல அம்மா வந்தா குடுத்துடு)*

தாச்சல் - கோவணம். *(தனக்குத் தனக்குன்னா தாச்சலும் பதக்குக் கொள்ளும்)*

தாச்சி - நாட்டார் விளையாட்டில் தொடவேண்டிய இடம். *( நான் தாச்சி தொட்டுட்டேன்)*

தாட்டிகம் - பெருமை. *(எங்க அண்ணாச்சி அவங்க ஊருல எவ்வளவு தாட்டிகமா இருக்காங்க பாத்தீகளா)*

தாட்டு1 - குவித்து வைத்திருக்கும் பருத்திப் பொதி. *( என்னப்பா பருத்தி ஒரு தாட்டு குறையுது விலை போய்ட்டா?)*

தாட்டு2 - கமலை கூனையின் கீழ்ப் பக்க வாயில் கட்டப்பட்டிருக் கும் நீண்ட தோல் சால்.*(தாட்டு கிழிஞ்சிருக்கு செம்மாங்கிட்ட கொண்டு போயி தச்சிட்டு வந்துரு)*

தாட்டு 3- சாக்கு, கோணி.

தாத்து - நீரில் மூழ்கடி. *(அதிகமா பேசுன தண்ணில தாத்து சாகடிச் சிடுவேன்)*

தாப்பா - தாழ்ப்பாள் *(உள்ள தாப்பா போட்டுட்டுப் படுத் துக்கோ)*

தாபிள்ளங்க - சொந்தக்காரர்கள், ஒரு தாய் மக்கள். *(நாமெல்லாம் தாபிள்ளங்க தானே)*

தாம்போதி - தரைப்பாலம். *(சுடலகோயில் தாம்போதில ரெம்ப தண்ணி போகுதாம். இன் னக்கி சந்தைக்கி போக முடியாது)*

தாமசம்1 - தங்குமிடம், வசிக்கு மிடம். *(ஐயாவோட தாமசம் எங்க)*

தாமசம்2 - தாமதம், சுணக்கம் *(பொறப்பட கொஞ்சம் தாமசம் ஆயிட்டு, பொறுத்துக்கணும்)*

தாயமாட்டம் - காலதாமதம் . *(தாயமாட்டமில்லாம கலியாணத் துக்கு சீக்கிரம் பொறப்பட்டு வாங்க)*

தாயாதி - உறவினர், சொந்தக் காரர். *(தாயாதிகளுக்குள்ள என்ன சண்ட)*

தாயார் - அம்மா *(உங்க தாயா ரோட ரெட்ட வட சங்கிலி உங்க ஓடப்பிறந்தாவுக்குத் தான் சேரணும்)*

தாயீ - பெண் பிள்ளயை வாஞ்சை யுடன் விளித்தல். *(நான் ஊருக்குப் போயிட்டு வரட்டுமா தாயீ)*

தார்க்கம்பு - தார்க்குச்சு *(தார்க் கம்ப வச்சி குத்துனதில மாட்டுக்கு ரத்தமே வந்துட்டு)*

தார்சா - வீட்டின் முன் அறை *(அப்பா தார்சாவில உக்கார்ந் திருக்கார்),*

தாரு - வாழைக் குலை. *(மார்க் கட்டுக்கு இன்னைக்கு எத்தன தாரு அனுப்பி இருக்குன்னு தெரியுமா?*

தாவா - முறையீடு, பிராது *(உங் களுக்குள்ள இருந்த பொதுமுடுக்கு தாவா என்னாச்சி)*

தாவாரம் - தாழ்ந்த ஓட்டுக் கூரை *(தாவாரத்துல காயப் போட்டுருக்க நெல்ல அள்ளி வை)*

**தாவிளஆயிட்டு** - நோய் குணமாகுதல், உடல் நலம் தேறுதல். *(சேதாரமில்லாமல் தாயும் பிள்ளையுமாக ஆகுதல் அதாவது சுகப்பிரசவம் ஆகுதலைக் குறிக்க ஆளப்பட்ட சொல் நாளாவட்டத்தில் நோய் குணமாதலையும் குறிக்க ஆளப்படுவது வழக்காகிவிட்டது)*

**தாள்** - நெல் போன்ற பயிர்களின் அடிப்பாகம். *(தாள நல்ல ஒட்ட அறுங்கப்பா)*

**தானாதி** - பண்ணையார் வீட்டு மேலாளர். *( நீ என்ன அவனுக்குத் தானாதியா பெருசா பேச வந்துட்ட)*

## தி

**திகை-தல்** - தீர்மானப்படுதல், முடிவாகுதல். *(இந்தத் திருப்பாவது பொண்ணுக்கு இந்த இடம் திகையணும்)*

**திட்டுவாசல்** - வீட்டின் பின் வாசல், புறக்கடை *(ஏன் யாருக்கும் தெரியாம திட்டுவாசல் வழியா வந்துட்டு போறான் ஒந்தம்பி?)*

**திடுதிப்புன்னு** - திடீரென்று, எதிர்பாராமல். *( சொல்லாம கொள்ளாம திடுதிப்புனு இப்படி முன்ன வந்து நிக்கயே)*

**திண்டுக்கு முண்டு** - ஏறுக்குமாறாய், எதிரிடைப்பேச்சு. *(எதுக் கெடுத்தாலும் திண்டுக்கு முண்டு பேசுரத விடமாட்டயா நீ?)*

**திரடு** - மேடு, வயல்வெளியில் உள்ள மேட்டுப் பகுதி. *(தெக்கு வய திரடுல இருக்குற பனையில கூந்த ஒதுக்கணும் )*

**திரண்டுட்டா** - பூப்பெய்திவிட்டாள், பருவமடைந்துவிட்டாள். *(பொண்ணு திரண்டுட்டாளாமே சொல்லவே இல்ல)*

**திராட்டு** - நெருக்கடி.

**திருக்கண்சாத்துதல்** - சப்பரத்தில் வீதிவலம் வரும் சாமியைத் தரிசித்தல். *(ராத்திரி சப்பரம் வரும்போது திருகஞ்சாத்தணும் மறந்துறாத)*

**திருக்கு** - மூக்குத்தி, தோடு முதலியவற்றின் திருகு. *(மூக்குத்தி திருக்க காணம் யாராவது பாத்தீங்களா)*

**திருக்குச்செம்பு** - கூஜா. *(திருக் குச்செம்புல பாலு வச்சிருக்கேன். மறக்காம எடுத்துக் குடி)*

**திருக்குப்பூ** - தலையில் அணியும் ஆபரண வகை.

**திருகுதாளம்** - ஏமாற்றுவேலை, புரட்டு. *(இன்னும் ஒந் திருகு தாளத்த நீ விடலையாப்பா)*

**திருண** - மணமேடை, திண்ணை. *(கலியாணத்துல திருண அலங்காரம் பிரமாதமா இருக்கே)*

**திருத்து-தல்** - தரிசு நிலத்தைப் பாசனத்துக்குச் சீர்திருத்துதல் *(ஒத்த பனைக்கு வடதட்டு தரிச இந்த வருசமாவது திருத் தணும்ப்பா)*

**திருநா** - திருவிழா, திருநாள். *(தெப்ப திருநாக்கு வர முடியுமான்னு தெரியல)*

**திருநாறு** - திருநீறு, விபூதி. *(அம்மா அப்பா கால்ல விழுந்து திருநாறு பூசிக்கப்பா)*

**திருப்பு** - தடவை, முறை.

**திருப்புளி** - பலகையில் முறுக் காணியை முடுக்கும் உளி *(சின்னத் திருப்புளிய யார்டா எடுத்தா?)*

**திருவலக்குத்தி** - தேங்காய்த் துருவி. *(திருவலக்குத்திக்குப் பல்லு ராவ சொன்னேன ராவுனய்யா?)*

**திருவுளச்சீட்டு** - தெய்வச் சித்த மறியக் குலுக்கிப் போட்டு எடுக் கும் சீட்டு. *(யாருக்கும் வருத்தம் வேண்டாம் சாமி முன்னால திரு வுளச்சீட்டு போட்டுப் பாத்துடு வோம்)*

**திருவை** - மாவு திரிக்கப் பயன் படும் கல் யந்திரம். *(ஆசாரி கிட்ட திருவைக் குச்சி போட்டுத் தர சொல்லு)*

**திரை** - நாற்றுகளை பிடுங்கி கட்டுகளாகக் கட்டுவது. *(திரை உருட் டியாச்ச? நல்லா கட்டி வை)*

**திலா** - தண்ணீர் இறைக்கும் ஏற் றம். *(அந்தக் காலத்துல கீரத்தோட் டத்துக்கு திலாவுலதான் தண்ணி எறப்போம்)*

## தீ

**தீட்டு-தல்** - தவிடு நீங்க அரிசி யைக் குத்துதல். *(அரிசியை இன்னைக்காவது தீட்டணும்)*

**தீண்டக்காரி** - மாதவிலக்கான பெண். *(பச்சபுள்ளைய தீண்டக் காரி தூக்காம பாத்துக்கோ)*

**தீண்டல்** - மாதவிலக்கு.

**தீத்துவிடு-தல்1** - பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருதல். *(பெரியவரு தான் தலையிட்டு பிரச்சனைய தீத்துவிட்டாரு)*

**தீத்துவிடு-தல்2** - கணவன்-மனைவி பிரச்சினையில் மத்தியஸ் தர்கள் தலையிட்டு மணவிலக்கு செய்து வைத்தல். *(ஊர் பஞ்சாயத் துல பேசிப் பொண்டாட்டிய அவன் தீத்துவிட்டுட்டான்)*

**தீயல்** - குழம்பு வகை. *(மத்தியான சாப்பாட்டுக்குத் தீயல் வைக்கப் போறேன் சாப்பிட வந்துருங்க)*

**தீர்க்கம்** - தெளிவு, உறுதி. *(அவன் முடிவுல அவன் தீர்க்கமா இருக்கான்)*

**தீர்வை** - அரசு விதிக்கும் வரி வகை. *(வீட்டுத் தீர்வ கட்ட என்னக்கி கடேசி நாளு?)*

**தீரவாசம்** - நதி நீர்ப் பாசனம் பெறும் வயல்கள். *(தீரவாசத்து விவசாயிகளே தண்ணி இல்லாம கஷ்டபடுதாங்க , மானாவாரி விவசாயிங்க நாம எம்மாத்திரம்)*

**தீவட்டி** - கோவில் விழாக்களில் வெளிச்சம் உண்டாக்க வாகனங் களின் முன் கொண்டு செல்லப்படு கிற தீப்பந்தம்.

**தீவட்டித்தடியன்** - எதற்கும் உதவாத மூடன் *(தீவட்டித்தடியன் மாதரி வெட்டியா ஊர சுத்திகிட்டு வாரயே நீ திருந்தவே மாட்டயா?)*

**தீவு** - தண்ணீர்த் தட்டுப்பாட்டால் நெற்பயிர் முழுமையாக விளை யாமல் கருகிப் போகுதல் *(இந்த வட்டமும் தீவு அறுக்க வேண்டி யதுதான் போல)*

**தீனி** - கால் நடைகளுக்கான தீவனம். *(மாட்டுக்குத் தீனி வச் சிட்டுக் கடைக்குப் போயிட்டு வா)*

## து

**துக்கவீடு** - இழவு கொண்ட வீடு. *(துக்கவீட்டுக்குப் போயிட்டு வந்து*

*கிட்டு இருக்கேன். குளிச்சிட்டு வந்து உன்னப் பாக்கேன்)*

**துந்தரிக்கம்** - முகக்களை *(இன்னய அலங்காரத்துல அம்மன் ரெம்ப துந்தரிக்கமா இருக்குல்ல)*

**துட்டி** - சாவுச் செய்தி. *(நடுவூரு துட்டி வந்ததா?)*

**துட்டு** - ஒரு ரூபாயின் 48 பங்கில் ஒன்று என்ற மதிப்புக் கொண்ட நாணயம். *(கா துட்டு இல்லாம நானே சங்கடப்படுதேன். ஏங்கிட்ட வந்து நூறு ரூபா கேக்குறயே என்னத்த சொல்ல?)*

**துடுப்பு** - கூழ் காய்ச்சும்போது அதைக் கிண்டிவிடப் பயன்படும் தட்டையான நீளக் கட்டை *(ஏலா பாட்டி வீட்டுல போயி துடுப்பு வாங்கியா. காலேல கூழ் காச்சணும்)*

**துடுப்புக்குழி** - பிள்ளை பெற்ற தீட்டுக் கழியும் வரை பிள்ளை பெற்ற பெண் குளிக்கும் தண்ணீர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் விழும் படி வெட்டி வைக்கும் குழி. *(கீழ முடுக்கு தூம்பாக்கு நேரா துடுப்புக் குழி வெட்டுப்பா)*

**துடுப்புக்குழி நாச்சியார் படையல்** - பிள்ளை பெற்ற தீட்டுக் கழிக்கும் நாளன்று அதாவது பிள்ளை பெற்ற 16ஆவது நாளன்று தீட்டுக்கழிக்கும் சடங்கில் முக்கிய இடம் பெறும் நிகழ்வு. துடுப்புக்குழியைப் பெண் தெய்வமாகப் பாவித்துச் சடங்கு அன்று அவித்த முட்டையில் மை கொண்டு அம்மன் முகம் வரைந்து அன்று சமைக்கும் சோறு, கறி முதலியவற்றைப் பிசைந்து ஐந்து அல்லது ஏழு உருண்டைகளாகப் பிடித்து அவற்றையும் அவித்த முட்டையை நெட்டுவசத்தில் நான்காக வகுந்த துண்டங்களையும் துடுப்புக்குழி நாச்சியாருக்குப் படைத்து வழிபடுவார்கள். பின் அந்தப் படையல் சோற்று உருண்டைகளில் இரண்டையும் முட்டைத் துண்டங்களையும் துடுப்புக் குழியில் போட்டு மூடிவிடுவார்கள். மீதமிருக்கும் சோற்று உருண்டைகளில் ஒரு வாய் பிள்ளைப் பேறு கண்ட பெண் சாப்பிடுவாள். கரு தங்காத பெண்கள் துடுப்புக் குழி நாச்சியார் படையல் சோற்றில் ஒரு வாய் சாப்பிட்டால் கரு உண்டாகும் என்பது நம்பிக்கை. இந்தச் சடங்கில் வண்ணாத்தியின் பங்கு முக்கிய இடம் பெறுகிறது.

**துண்டரிக்கம்** - பார்க்க: துந்தரிக்கம்.

**துண்டு** - ஒரே பூவில் மாலை போல் கட்டியாகக் கட்டப்பட்ட சிறிய பூத்துண்டு *(பூக்காரி கிட்ட பத்து அரளி பூத்துண்டும் சேத்துக் கொண்டுவரச் சொல்லு)*

**துணைப்பட்டினி** - கணவனை இழந்த பெண் கருமாதி விஷேடத்திற்கு முன் விரதம் மேற்கொள்ளும் போது அவளுக்குத் துணையாக அவளுடன் சேர்ந்து விரதம் மேற்கொள்ளும் பெண்.

**துத்தி** - பிரசவமான பெண்கள் வயிற்றில் ஏற்படும் வரித் தேமல்.

**துப்பரவா** - முற்றிலுமாய், முழுவதுமாய். *(வயக்காட்ட வித்த காசப் பூராம் இப்படி துப்பரவா*

*செலவழிச்சுட்டு நிக்கயே. இனி செலவுக்கு என்னப் பண்ணுவ)*

**துப்பாளு** - பணம் பெற்றுக் கொண்டு எதிராளியைப் பற்றிய செய்திகளைச் சொல்லும் உளவாளி. *(சொட்டத்தலையன் கிட்ட பாத்துப் பேசு, அவன் துப்பாளா இருப்பானோன்னு சந்தேகமா இருக்கு)*

**துப்புனி** - எச்சில்.

**துய்யமல்லி** - நெல் வகை.

**துர்நீர்** - உடலில் உள்ள கெட்ட நீர். *(உடம்புல துர்நீர் இருக்க தனாலதான் மேலெல்லாம் புண்ணா வாரிப்போட்டுருக்கு)*

**துரத்தல்** - இருமல். *(துரத்தல் இன்னும் விடலையா? கஷாயத்தை குடீனா குடிக்கமாட்டேங்க)*

**துருசம்** - விரைவு, வேகம். *(கடைக்குப் போயிட்டு துருசமா வாடா)*

**துருத்தி** - தோலில் செய்த உலை ஊது கருவி.

**துருத்து-தல்** - வெளித்தோன்றுதல், வெளித்தள்ளுதல் *(அவளுக்கு பல்லு எப்படி துருத்தீட்டு இருக்கு பாரு)*

**துலாம்** - நூறு பலம் கொண்ட நிறுத்தலளவு. *(கருப்பட்டி துலாம் என்ன வில?)*

**துலுக்கக்குடி** - இசுலாமியர் குடியிருப்பு.

**துவச்சல்** - அரிவாள், கோடரி போன்ற வெட்டுக் கருவிகள் எளிதில் முனை மழுங்காமல் இருக்க அவற்றைக் கடும் வெப்பத்தில் சூடாக்கிச் சட்டென்று தண்ணீரால் குளிர்விப்பர். இப்படிச் செய்வதால் அந்த இரும்பு எளிதில் முனை மழுங்காமல் இருக்கும்படிக்கு வலுப்பெறும். *(அருவாவ துவச்சலுக்கு குடுதுட்டு வான்னு சொன்னனே கொண்டு போய் குடுத்தையா?)*

**துவர்த்து** - உடம்பைத் துடைக்கும் துண்டு *(அந்த பச்ச துவர்த்து எங்க பாத்தையா?)*

**துவையல்** - சட்னி, தொகையல். *(தோசைக்கு வெள்ளப்பூடு துவையல் அரைக்கணும்)*

**துள்ளாட்டம்** - கேளிக்கை, கொண்டாட்டம். *(பள்ளிக்கூடம் விட்டாச்சின பிள்ளைங்களுக்கு எல்லாம் ஒரே துள்ளாட்டம்தான் போ)*

**துள்ளுமறி** - ஆட்டுகுட்டி.

**துளுவன்**- வாழை வகையில் ஒன்று. *(துளுவன் எத்தன மூடுன்னு தெரியுமா?)*

**துறவல்** - சாவி. *(குச்சு வீட்டு துறவல எங்க வச்சிருக்க?)*

## தூ

**தூக்கச்சடவு** - தூங்கி எழுந்த பின்னும் உள்ள சோர்வு. *(இன்னும் தூக்கச்சடவு தீரலயா?)*

**தூக்கல்** - கூடுதல், அதிகம். *(சுண்ணாம்புல நீலம் கொஞ்சம் தூக்கலா இருக்குல?)*

**தூக்கு** - சுவரின் ஒழுங்கு அறியும் நூல் கயிறு. *(தூக்கு விட்டுப் பாக்கலையா பூச்சு ஏன் இப்படி துருத்திட்டி இருக்கு?)*

**தூக்குச்சட்டி** - தூக்குப்போணி,

**தூக்குவாளி.** *(பள்ளிவாசலுக்குப் போயி தூக்குச்சட்டில நோம்பு கஞ்சி வாங்கிட்டு வாடா)*

**தூத்தல்1** - மழைத்தூறல். *(என்ன அவசரம் தூத்தல் நின்ன பெறகு போலாமே)*

**தூத்தல்2** - வீட்டைப் பெருக்குதல். *(இப்பதான் வாசல தூத்தேன். அதுக்குள்ள எவ்வளோ குப்ப சேந்துட்டு)*

**தூம்பாகுழி** - கழிவு நீர் வெளியேறும் வாய். *(தூம்பாக் குழிய மூடி வைங்கன்னு எத்தன தடவ சொல்லுறேன், யாரும் கேக்க மாட்டேங்காங்களே)*

**தூமை** - மாதவிடாய் இரத்தம்.

**தூரமா** - ஒரு இடத்திற்குப் போகும்போது எங்கே போகிறாய் என்று கேட்பது சகுனத்தடை என்ற நம்பிகையில் தூரமா என்று கேட்பது வழக்கு. *(தூரமா பொறப்பட்டாச்சு?)*

**தூரு1**- மரத்தின் அடிப்பகுதி. *(மரத்த தூரோட வெட்டிரு)*

**தூரு2** - பெருக்கிச் சுத்தம் செய். *(காலேலையே வீட்டைத் தூருன்னா ஒரு நாளாவது செய்தாளா?)*

## தெ

**தெக்கத்தி** - தென்பால் நிலப் பகுதி. *(தெக்கத்தி காய்னாலே தனி ருசிதான்)*

**தெக்கநிக்கி** - பார்க்க: தெக்கமாற

**தெக்கமாற** - தெற்குத் திசை நோக்கி. *(தம்பி தெக்கமாற விரசலா எங்க போறான்?)*

**தெக்காட்டுக்காரன்** - தென்பக்க நிலப் பகுதியை சேர்ந்தவன். *(தெக்காட்டுக்காரன்ல அதுதான் ரெம்ப ரோசமா இருக்கான்)*

**தெகட்டுதல்** - திகட்டுதல்.

**தெங்காசிவழக்கு** - இரு தரப்பினருக்கும் இடையே உள்ள விவகாரத்தில் இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் எளிதில் வழக்குத் தீர்க்கும் முறை. *(தெங்காசி வழக்கா உங்க விவகாரத்த முடிச்சுக்கிட்டீங்க போல)*

**தெண்டம்1** - அபராதம். *(நீ செஞ்ச தப்புக்கு நான் தெண்டம் அழ வேண்டியிருக்கு)*

**தெண்டம்2** - வீண். *(தெண்ட சோத்து ராமா குண்டு போட்டாச்சு. கொட்டிக்க வாடா)*

**தெண்டில்** - ஓணான்.

**தெத்துப்பல்லு** - ஒன்றின் மேல் ஒன்று ஏறி முளைத்த பல் *(ஒந் தெத்துப்பல்ல காட்டி இளிக்காத)*

**தெப்பக்கட்டை** - மாட்டுவண்டியின் அச்சு பொருத்தப்பட்டிருக்கும் கட்டை.

**தெம்பு** - பலம், தைரியம். *(நீ கூட இருக்குற தெம்புலதான் இந்தக் காரியத்துல நான் துணிஞ்சி இறங்குதேன்)*

**தெம்மடல்** - தெற்கு வடக்காக *(தெம்மடலா ஒரு வீட்டுமனை இருந்தா சொல்லு)*

**தெம்மாடி** - கையாலாகாதவன், கோழை. *(அவன்தான் ஒரு தெம் மாடின்னு தெரியாதா உனக்கு, அவன நம்பி எப்படி இந்தக் காரியத்துல இறங்குன?)*

**தெளுத்தண்ணி** - கஞ்சித்தெளிவு. *(காச்ச அடிக்கிற பிள்ள கொஞ்சம் தெளுத்தண்ணியாவது சாப்பிட்டா என்ன)*

**தென்னு** - நெம்பு. *( ஏல கல்ல நல்லா தென்னி தள்ளுல)*

## தே

**தேக்சா** - நெல் அவியல் போன்ற வற்றுக்குப் பயன்படும் வாய் அகன்ற பாத்திரம், கிடாரம். *(நெல் அவிக்க புதுசா ஒரு தேக்சா வாங் கணும்)*

**தேங்காசிரட்ட** - கொட்டாங்கச்சி

**தேங்காமூடி** - இரண்டாக உடைத்த தேங்காயின் ஒரு பாதி *(அடுக்களையில ஒரு தேங்காமூடி வச்சிருந்தனே பாத்தியா?)*

**தேங்காமுறி** - பார்க்க: தேங்கா மூடி.

**தேங்குழல்** - உழக்கில் மாவை வைத்துப் பிழிந்து செய்யும் முறுக்கு. *(தீவாளிக்கு மறக்காம தேங்குழல் செய்யணும்)*

**தேட்டம்1** - உழைத்துத் தேடிய செல்வம்.

**தேட்டம்2** - ஆசை, ஆவல், தேடு தல். *(ஊருக்குப் போன புள்ளய பாக்கணுங்குற தேட்டம் கொஞ்சங் கூட இல்லயே உனக்கு?)*

**தேட்டை** - பார்க்க: தெளுத் தண்ணி

**தேத்தாங்கொட்டை** - கலங்கிய நீரைத் தெளிய வைக்கும் விதை. *(தேத்தாங்கொட்டையில தெளிய வச்ச மாதரி அவ்வளவு தெளிவா இருக்கு தண்ணி)*

**தேத்து** - தைரியப்படுத்து, நம்பிக்கையூட்டு. *(பய ரெம்ப பயந்துட்டு இருந்தான். எடுத்துச் சொல்லித் தேத்தி வச்சிருக்கேன். இனி கவல இல்ல)*

**தேய்-த்தல்** - இஸ்திரி போடுதல் *(தொவச்ச சட்டைய தேச்சு வைக் கலையா?)*

**தேரக்கா** - தேரைநோய்த் தாக்கு தலால் உள்ளீடற்றுப் போன தேங் காய் *( ரெண்டு கா ஒடச்சும் ரண்டும் தேரக்காவாயிட்டே)*

**தேரம்** - நேரம் *(ரெம்ப தேரமா உனக்காகக் காத்துட்டு இருக் காம்பா)*

**தேரி** - மணற்பாங்கான நிலம்.

**தேரோட மால தெருவோட** - ஆதாரவற்று அனாதியாய்த் திரிதல். *(இப்படி தேரோட மால தெரு வோடங்குற மாதரி அலய விட்டுட் டாளே)*

**தேவடியாமவன்** - வசைச் சொல். *(தேவடியாமவனுக்கு எவ் வளவு கொழுப்பு இருந்தா இப் படிப் பேசுவான்)*

**தேவாமிர்தம்** - நல்ல சுவையான உணவு. *(கல்யாண வீட்டுல சாப் பாடு தேவாமிர்தமா இருந்தது)*

**தேள்வ** - தேவை *(அவனுக்கு ஏதா வது தேள்வ இருந்தா பேசுவான், இல்லைன்னா பாக்காத மாரி போயிருவான்)*

## தொ

**தொக்கம்** - செரிக்காமல் சிறு குழந்தையின் வயிற்றில் தங்கி விட்ட பொருள் *(தொக்கம்*

*விழுந்துருக்குமோ என்னவோ தெரியல. ரெண்டு நாளா பிள்ளைக்கு வயத்தால போகுது)*

**தொக்கு** - இரண்டு மூன்று பொருட்களைச் சேர்த்து அரைத்து வைத்த கட்டியான குழம்பு.

**தொங்கட்டம்** - காதணி *(இந்தத் தொங்கட்டம் ஒனக்கு ரெம்ப நல்லா இருக்கே)*

**தொட்டுக்கோ தொடச்சிக்கோ** - பற்றியதும் பற்றாதுமான.

**தொடுப்பு** - கள்ள உறவு.

**தொண்டப்போச்சல்** - இருமல் *(ராத்திரியெல்லாம் ஒரே தொண்டப்போச்சல் தூங்கவே இல்ல)*

***தொண்டி*** - களவு போன பொருள்.

***தொண்டு*** - ஒடுக்கமான வழி, சுவர் போன்றவற்றில் உள்ள சிறிய துளை. *(இந்த தொண்டு வழியா அந்தப் பக்கம் போயிரலாம்)*

**தொத்தியேறு-தல்** - கையைக் காலைப் பற்றி ஏறுதல் *(கொரங்கு மாதரி எப்படி தொத்தி ஏறுதான் பாரு)*

**தொப்பாரம்** - தோளில் சுமந்து கொண்டு போகிற அளவுள்ள மூட்டை *(கள்ள புருசனுக்கு தொப்பாரம் கட்டி குடுத்த மாதரில்ல ஒனக்கு கட்டிக் குடுக்க வேண்டியிருக்கு)*

**தொரண்டி** - அங்குசம். *(முருங்கக்கா பறிக்கணும். ஒங்க வீட்டு தொரண்டிய கொஞ்சம் குடேன்)*

**தொரட்டி** - பார்க்க: தொரண்டி

**தொரட்டு** - தொல்லை, சிக்கல். *(இந்த தொரட்டெல்லாம் நமக்கு வேண்டாமுன்னுதான் நான் ஒதிங்கிகிட்டேன்)*

**தொவளம்** - கிணற்றைச் சுற்றிக் கட்டப்பட்ட பாதுகாப்புச் சுவர். *(தொவளத்துல உக்காராதேன்னு எத்தன தரம் சொல்லுதேன் கேக்க மாட்டயா?)*

**தொழிமரம்** - தொழி உழவுக்குப் பின் நிலத்தைச் சமன் செய்யப் பயன்படுத்தும் பரம்பு.

## தோ

**தோட்டா** - பாறை போன்ற வற்றைப் பிளப்பதற்குத் துளையில் வைத்து வெடிக்கப்படும் வெடி மருந்துக் குச்சு. *(தோட்டா வச்சி தான் பாறையை உடைச்சோம்)*

**தோடம்** - தோட்டம், *(கீரத் தோடத்துக்கு வேலி போட்டாச்சா?)*

**தோடு** - மேலோடு *(அண்டித் தோடு ரெண்டு லோடு வந்திருக்கு)*

**தோண்டி** - கிணற்றில் இருந்து தண்ணீர் இறைக்கப் பயன்படும் பனை ஓலையில் முடையப்பட்ட ஓலைப்பட்டை *(பழய தோண்டி ஓட்டயாயிட்டு. புது தோண்டி ஒண்ணு வாங்கிட்டு வா)*

**தோதகத்தி** - உயரமான மர வகை.

**தோது1** - சௌகரியம். *(இப்படி கால நீட்டி தரேல உக்காந்திருக்கது தான் தோதா இருக்கு)*

**தோது2**- மரச் சட்டங்களைச் செய்யும்போது ஆசாரி அதன் அளவுகளை அடையாளப் படுத்தி வைத்திருக்கும் ஓலைத் தகடு. *(நிலக் கதவுக்கு வரிஞ்சி வச்சிருந்த தோது எங்க பாத்தியா?)*

**தோப்புக்கரணம் போடுதல்** - ஒருவர் சொல்வதை எல்லாம் மறுப்பின்றிக் கேட்டல். *(அவன் பொண்ட்டாட்டிக்கு தோப்புக் கரணமில்ல போட்டுட்டு இருக் கான்)*

**தோம்ராகட்டில்** - கொசுவலை கட்டும் வசதி உள்ள மரக் கட்டில். *(இந்த தோம்ராகட்டில் எங்க தாத்தா காலத்துல இருந்து இருக்கு)*

**தோலான் துருத்தி** - எந்தவித மான தகுதியும் இல்லாத நபர்கள். *(தோலான் துருத்தி எல்லாம் கூட் டத்துக்கு வந்திருந்தானுங்க)*

## ந

**நக்குவாரி** - தென்னை மர வகை.

**நகம்வாங்கி** - நகம் வெட்டும் கருவி.

**நகரா** - பெரும் முரசு.

**நச்சரிப்பு** - தொந்தரவு. *(நச் சரிப்பு தாங்க முடியாமதான் ஊருக்குப் போகச் சம்மதிச்சேன்)*

**நச்சு** - ஒவ்வொரு சிறு விஷயத் திலும் அதிகப்படியான முயற்சி வேண்டுவதாக அமைவது. *(இந்த மாதரி நச்சு வேலயெல்லாம் நம் மால செய்ய முடியாதுப்பா)*

**நசுங்கினி** - அவரை போன்ற கொடிகளில் காய்களைத் தாக்கும் ஒரு வகை நோய்.

**நசு நசு-த்தல்** - விடாமல் மழை தூறிக்கொண்டே இருத்தல்.

**நசுநசுன்னு** - உலராமல் எப்போதும் ஈரமாகவே இருத்தல். *(அடுக்கள ஏன் நசுநசுன்னு இருக்கு).*

**நட்டகுத்தற** - செங்குத்தாக. *(கொடிக்கம்பு நட்டகுத்தற நாட்டு)*

**நட்டம்மா** - நேராய், செங்குத்தா.

**நடபடி**- நடவடிக்கை. *(கொஞ்ச நாளாவே ஓம் பையனோட நடபடி சரியில்ல. என்னான்னு கேளு)*

**நடை** - முன் வாசல் .

**நடை திறப்பு** - குறிப்பிட்ட நேரத் தில் கோவில் வாயில் திறக்கும் நிகழ்வு. *(மார்கழி மாசம் விடியக் காலம் நாலு மணிக்கே நட திறந்து ருவாங்க)*

**நடை மாத்து** - சில சடங்குகளின் போது நடந்துசெல்வதற்காகப் பாதையில் விரிக்கப்படும் துணி.

**நண்ணி** - நன்றி. *(மனுசன்னா நண்ணி விசுவாசத்தோட இருக் கணும்)*

**நத்தம்** - கிராமத்தில் குடியிருப்புப் பகுதி.

**நப்பி** - கஞ்சன்.

**நரகல்** - மலம்.

**நல்லது** - நல்ல பாம்பு.

**நறுக்குமூலம்** - மருந்துச் சரக்கு.

## நா

**நாகர்** - சடையில் அணியும் ஆபரண வகை.

**நாகத்தகடு** - துத்தநாகத் தகடு.

**நாசுவத்தி** - நாவிதப் பெண்.

**நாசுவன்** - நாவிதர்.

**நாட்கருது** -அறுப்புக்கு முன் நல்ல நாள் பார்த்து ஊர் அம்மன் கோவில் அம்மனுக்குச் சமர்ப் பிக்க வயலில் இருந்து அறுத்து வரும் கதிர். *(நாளைக்கு நாட்கருது செய்ய நாள் பாத்துருக்கு. எங்கை யும் வெளிய போயிராதே)*

**நாண்டுட்டு** - தூக்கிட்டுக்கொண்டு. *(வடக்குத் தெருவுல யாரோ நாண்டுட்டு நிண்ணு செத்துப் போனாங்கலாமே யாரு?)*

**நாதாங்கி** - தாழ்ப்பாள்.

**நாம** - நாம்.

**நாமுள்** - முழங்கால் முட்டி, முழங்கை முட்டி போன்ற இடங்களின் தோலில் முள் போலத் தோன்றும் ஒரு வகைத் தோல் வியாதி.

**நாயுருவி** - மூலிகைச் செடி. இதன் வேர் கொண்டு பல் தேய்த்தால் பல் உறுதியாகும்.

**நார்பெட்டி** - பனை மட்டை நாரினால் முடையப்பட்ட பெட்டி. *(இந்த வாரம் சந்தைக்குப் போனா பெரிய நார்பெட்டி ஒன்னு வாங்கிட்டு வா)*

**நாராங்கி** - தாழ்ப்பாள். *(வெளில போனா நாராங்கி போட்டுட்டுப் போக மறந்துறாத)*

**நாவிதர்** - நாலுவிதர். அதாவது பண்டிதம், முண்டிதம், சங்கீதம், புரோகிதம் ஆகிய நாலுவித கலைகளில் தேர்ந்தவர். (1. பண்டிதம்= மருத்துவம், 2. முண்டிதம் = சிகை அலங்காரம், 3. புரோகிதம் = வாழ்க்கை வட்டச் சடங்கை நடத்தும் குரு, 4. சங்கீதம் = இசைக் கலைஞர்). இந்த நான்கு அறிவுகளும் நிரம்பியவர்களே நாவிதர். காலப்போக்கில் நாவிதரிடமிருந்து பண்டித, புரோகித, சங்கீத அறிவுகளை எல்லாம் சிலர் திருடிக் கொண்டனர். முண்டிதமான முடி திருத்தும் தொழில் மட்டும் நாவிதருக்கு ஒதுக்கப்பட்டது. இப்படிச் செய்ததன் மூலம் முடிதிருத்தும் தொழிலைச் செய்யும் சாதியினர் நாவிதர் என்ற இழி நிலையை அடந்தனர்.

**நாவு-தல்** - அரிசியில் கல் நீக்கப் புடைத்தல் . *(பெட்டியிலிருக்குற அரிசிய நாவியாச்சா)*

**நாழி1** -நாழிகை, 24 நிமிடம் கொண்ட கால அளவு. *(எத்தன நாழி உனக்காகக் காத்திருக்கிறது)*

**நாழி2** - முகத்தலளவை. *(நிற நாழி நெல்லு வைக்க மறந்துறாத)*

**நாழி ஓடு** - வீட்டுக்கூரை அமைக்கப் பயன்படும் ஓடு. *(ஒங்க வீட்டு கூர இன்னும் நாழி ஓடாதான் இருக்கா?)*

**நாழிதூரம்** - ஒரு நாழிகை நேரத்தில் நடக்கக்கூடிய தூரம். *(நம்ம வீடு இங்க இருந்து அர நாழிதூரம் தான் இருக்கும்)*

**நாள்வழிச் சிட்டை** - நாள் தோறும் உள்ள கணக்கு வழக்குகளை குறித்துவைக்கும் பேரேடு. *(daybook)*

**நாளா அன்னக்கி** - நாளை மறு நாள். *(நாளா அன்னக்கி ஓம் மக ஊருக்கு வரதா சொன்னா)*

**நாளைக்கழிச்சி** - பார்க்க: நாளா அன்னக்கி.

## நி

**நிச்சிதார்த்தம்** - திருமணம் நிச்சயம் செய்து தாம்பூலம் மாற்றும் சடங்கு. நிச்சயத் தாம்பூலம். *(மேலத்தெரு நிச்சிதார்த்த வீட்டுக்குப் போகலையா?)*

**நிசாரம்** - சாரமற்று, அசட்டையாக.

**நித்தம்** - பார்க்க: நிதம்.

**நிதம்** - நாள்தோறும், தினமும். *(நிதம் குடிச்சிட்டு வந்து ஏன் இப்படி உயிர வாங்குத)*

**நிமுட்டாம் பழம்** - தொடை போன்ற இடத்தில் அழுத்தமாகக் கிள்ளுதல். *(நிமுட்டாம் பழம் குடுத்தா தான் சொன்ன பேச்சி கேப்பான்)*

**நிமுணன்** - நிபுணன். *(மரமேறி தேங்கா திருடுறதுல அவன் நிமுணம்ப்பா)*

**நிரவு-தல்1** - சமமாக்குதல். *(பள்ளத்துல மண்ணப் போட்டு நிரவி விடுப்பா)*.

**நிரவு-தல்2** -சமனாகப் பங்கிடுதல். *(இருக்குறத எல்லாத்துக்கும் நிரவிக் குடும்மா)*

**நிலக்கடலை** - வேர்க்கடலை. *(நிலக்கடல பிடுங்குனா கொஞ்சம் பச்சக்கடல கொண்டா என்ன?)*

**நிலப்படி** - வாசல்படி. *(நிலப் படில உக்காராதேன்னு சொன்னா கேக்கவே மாட்டேங்கறயே)*

**நிலம் கீறுதல்** - விடியல். *(நிலம் கீறுறதுக்கு முன்னே வயலுல நிக்கணும்)*

**நிலயடி**- அறுவடையின்போது நெற்கதிரை நிலத்தில் ஓங்கி அடித்து நெல்மணிகளை உதிரச் செய்தல்.

**நிலுவை** - வராமல் நிற்கும் பாக்கி.

**நிலை** - தேர் நிற்குமிடம். *(இப்பலாம் தேரு ஒரே நாளுல நிலைக்கு வந்துருது)*

**நிலைக்கண்ணாடி** - ஆளுயர முகம் பார்க்கும் கண்ணாடி.

**நிலைஆரம்** - வாசல் நிலையில் கட்டும் பூ மாலை.

**நிறநாழி** - நெல் நிறைத்து வைத்த நாழி, வாழ்க்கை வட்டச் சடங்குகளில் நிறை நாழி வைப்பது என்பது தவிர்க்க முடியாத ஒரு மரபு. *(விளக்கு முன்னால இன்னும் நிறநாழி வைக்கலையா?)*

**நிறுத்தல்** - பணப்பரிமாற்றத்தில் பாக்கி வைத்தல். *(நிறுத்தல் போட்டு தான் பத்தரம் முடிக்க வேண்டியிருக்கும் போல)*

## நீ

**நீஞ்சு** - நீந்து. *(நீஞ்சத் தெரியாத மாடு தண்ணியோடுதான் போகும்)*

**நீச்சு** - நீச்சல்.

**நீச்சுத்தண்ணி** - பழைய சோறும் நீத்தண்ணியும் கலந்த நீராகாரம். *(இன்னக்கி கால சாப்பாடு நீச்சுத் தண்ணிதான்)*

**நீட்டம்** - நீளம். *(உங்க தோட்டத்துப் புடலங்காய் எவ்வளவு நீட்டமா இருக்கு)*

**நீட்டக்கத்திரி** - கத்திரிக்காய் வகையில் ஒன்று. *(மாமா வீட்டுத் தோடத்துல நீட்டக்கத்திரி போட்டு இருக்காங்க. போயி ரெண்டு கா ஆஞ்சிட்டு வா)*

**நீத்தண்ணி** - பழைய சோற்றுத் தண்ணீர். *(எது எப்படிப் போனாலும் எனக்கு காலேல எந்திச்சதும் ஒரு செம்பு நீத்தண்ணி குடிச்சிரணும்)*

**நீத்து-தல்** - சுண்ணாம்பு, சிப்பி

போன்றவற்றை நீரச்செய்தல். *(வெள்ளை அடிக்க நாளக்கி சுண்ணாம்பு நீத்தி வை)*

**நீர்** - நீங்கள் எனும் விளிச்சொல்.

**நீர்க்கடம்பு** -கடம்ப மர வகை.

**நீர்க்கடுப்பு** - சூட்டின் பேரில் சிறுநீர் துளித்துளியாக வெளியேறிச் சிறுநீர் துவாரத்தில் கடுப்பை உண்டாக்கும் நோய். *(வெயில் காலம் வந்தாலே நீர்க்கடுப்பால் ரெம்ப அவஸ்த பட வேண்டியிருக்கு)*

**நீர்க்கொழுக்கட்டை** - நீராவியில் வேகும் பச்சரிசி மாவால் செய்த கொழுக்கட்டை. *(நீர்க்கொழுக்கட்டை வெந்த தண்ணியில கருப்பட்டி போட்டு சாப்பிட்டா என்னா ருசியா இருக்கும் தெரியுமா?)*

**நீர்க்கொள்ளுதல்**- ஜலதோஷம் பிடித்தல். *(வெளியூர் போனனா தண்ணி ஒத்துக்காம நீர்க்கொண்டிருக்கு)*

**நீர்ச்சுருக்கம்** - பார்க்க: நீர்க்கடுப்பு.

**நீர்ப்பாச்சி** - குளத்து நீரை எல்லா வயலுக்கும் முறைப்படி பாய்ச்சுபவர்.

**நீர்மாலை** - இறந்தவரைக் குளிப்பாட்ட நீர் நிலையிலிருந்து நீர் கொண்டு வரும் சடங்கு. *(நீர்மாலை எடுக்கதுக்கு முன்னால நீ வந்துடடா)*

**நீர்மோர்** - மோருடன் நீர் பெருக்கி இஞ்சி, பெருங்காயம், பச்சைமிளகாய் போன்றவற்றைச் சேர்த்துத் தயாரிக்கப்படும் பான வகை. *(மோர் மடத்துல போயி செம்புல நீர்மோர் வாங்கிட்டு வந்துருதேன்)*

**நீலம்பாஞ்சிபோதல்** - விஷக்கடியினால் உடல் முழுவதும் நீல நிறமாய் மாறிப் போகுதல். *(ஏதோ விஷப்பாம்புதான் கடிச்சிருக்கணும் அதுதான் மேலெல்லாம் நீலம் பாஞ்சிருக்கு)*

**நீலம் போடுதல்** - துவைத்த துணிகளுக்கு நீலமேற்றுதல். *(வெள்ளத் துணிக்கெல்லாம் நீலம் போடுன்னு எத்தன தரம் சொல்லியிருக்கேன் ஏன் செய்ய மாட்டேங்க)*

**நிரூத்து** - கடும் மழை நேரத்தில் வீட்டுச் சுவரில் ஏற்படும் ஈரப்பதம். *(மழைக்காலத்துல சுவரெல்லாம் நீரூத்து அடிக்குது. இந்த வருசமாவது சரி பண்ணுங்க)*

## நு

**நுணா** - மஞ்சனாறி மரம், மஞ்சனத்தி மரம்.

**நுப்பது** எ முப்பது. *(இந்த நுப்பது ரூபாய தேங்கா கடைல கொண்டு குடுத்திட்டு வா)*

**நுள்ளு-தல்** - கிள்ளுதல். *(யம்மா தம்பி என்னய நுள்ளிட்டான்)*

**நுனி** -முனை.

**நுனை-தல்** - நுழைதல். *(கூட்டத்துக்குள்ள எப்படி நுனஞ்சிக்கிட்டு போறாம் பாரு)*

## நூ

**நூமுறுக்கி** - வலை நூலை முறுக்கப் பயன்படும் கருவி.

**நூல்விடு-தல்** - மன ஓட்டத்தை ஆழம் பார்த்தல். *(எம் மனசுல என்ன இருக்குன்னு மெல்ல நூல் விட்டு பாத்தான்)*

**நூலாம்படை** - ஒட்டடை

**நூனாழி** - தறியில் ஓடும் ஓடம்.

## நெ

**நெடுப்பம்** - நீளம்.

**நெத்து** - முற்றிக் காய்ந்த காய். *(வெண்டக்கா நெத்து எடுத்து வை, வித்துத் தட்டணும்)*

**நெத்துக்கு விடு-தல்** - மரம், செடி, கொடிகளில் காயைப் பறிக்காமல் வித்துக்காக முற்றவிடுதல்.

**நெத்திச் சுட்டி** - பெண்கள், குழந்தைகள் அணியும் ஆபரணவகை.

**நெளிவு** - பெண்கள் அணியும் மோதிர வகை. *(ஒங் கையில இருந்த பாம்பு நெளிவு எங்கே?)*

**நெறநாழி** - பார்க்க: நிறநாழி.

**நெறவிளக்கு** - எண்ணெய் நிரம்பிய எரியாத விளக்கு. *(காத்துல விளக்கு அணஞ்சிடக் கூடாது அதனால நெறவிளக்கா இருக்கட்டும்).*

**நெறிகட்டுதல்** - கை, கால்களில் ஏற்படும் புண் மற்றும் காயங்களில் சீழ் பிடிப்பதால் தொடை இடுக்கு கை அக்குள் போன்ற இடங்களில் உண்டாகும் வீக்கம்.

## நே

**நேத்திக் கடன்** - நேர்த்திக்கடன்

**நேத்திக்கு** - நேற்றைக்கு. *(நேத்திக்கு ராத்திரி நீ எங்கே போயிருந்த?)*

**நேந்திரம்** - வாழை வகை.

**நேரபலன்** - காரியம் தொடங்கப் பட்ட வேளையின் பலன்.

**நேரம் கடத்தல்** - தாமதப்படுத்தல்.

**நேரியல்** - ஜரிகைத் துண்டு.

**நேரத்தே** - குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே.

## நொ

**நொங்கு** - நுங்கு.

**நொட்டக்கை** - இடதுகை.

**நொட்டாங்கை** - பார்க்க: நொட்டக்கை.

**நொட்டை1** -சப்புக்கொட்டுதல்.

**நொட்டை2** - குறை.

**நொடி** - பள்ளம், குழி.

**நொடி-த்தல்** - ஒடித்தல்.

**நொண்டிச்சாக்கு** - பொய்க் காரணம்.

**நொம்பலம்** - வேதனை.

**நொய்யரிசி** - குருணை.

## நோ

**நோக்கா** - நுகத்தடி.

**நோக்காக்குச்சி** - நுகத்து முனைக் குச்சி.

**நோக்காடு** - நோய்.

**நோட்டம் பார்த்தல்** - ரகசியமாக ஒன்றை/ஒருவரைப் பற்றி அறிய முயலுகை.

**நோட்டு** - பிராமசரி நோட்டு .

**நோண்டு-தல்** - துருவி விசாரித்தல்.

## ப

**பக்கக் கண்ணு** - வாழை மரத்தின் அடியில் முளைக்கும் வாழைக் கன்று. *(இல அறுக்கிறதுன்னா பக்கக்கண்ணுலதான் அறுக் கணும்)*

**பக்கம்** - நாள். *(நீ ஊருல இருந்து வந்த ரெண்டாம் பக்கம் அக்கா பிள்ள பெத்தா)*


**பக்கா** - படி, முகத்தலளவு. *(தோசைக்கு ஒரு பக்கா அரிசிக்குக் காப்பக்கா உழுந்துங்குற அளவுல போடணும்)*

**பக்கி** - அலங்காராம் இல்லாத நிலை. *(ஏன்டீ இப்படி பக்கி மாரி நிக்க)*

**பகடை** - அருந்ததி.

**பங்கறகொத்து** - ஒரு வேலையை அரை குறையாகச் செய்தல்

**பங்கா** - கயிற்றினால் ஆட்டும் தொங்கு விசிறி *(பங்கா இழுக் குறது பத்துஆளு படுத்து தூங்குறது ஒத்த ஆளு)*



பங்கா

**பச்ச உடம்புக்காரி** - சமீபத்தில் பிள்ளைப் பேறு ஆனவள்.

**பச்சத்தண்ணி** - சூடு பண்ணாத குளிர்ந்த நீர். *(வெயில் நேரத்துல யாவது பச்சத்தண்ணில குளிச்சா என்னடா)*

**பச்சநாடன்** - வாழை வகையில் ஒன்று.

**பச்சவட்டுக்கல்லு** - சுடாத செங்கல். *(கீழச்செவரு பச்ச வட்டுக்கல்லுக் கட்டுதான்)*

**பசலியாண்டு** - வருவாய்த் துறை தொடர் ஆண்டு.

**பசியாத்து-தல்** - பசியைத் தணித் தல். *(புள்ள இப்படி அழுதே, பசி யாத்தாம அங்கன என்னப் பண்ணுத?)*

**பசை உள்ள ஆள்** - பணம் செழித்த ஆள்.

**பஞ்சப்பாட்டு**- இல்லாமையைச் சொல்லி எப்போதும் புலம்புதல். *(இவ என்னக்கித்தான் இந்த பஞ்சப் பாட்டு பாடுதத நிப்பாட்டப் போறாளோ?)*

**பஞ்சார** - சீனி, வெள்ளைச் சர்க்கரை.

**பட்டக்கொலுசு** - காலில் அணியும் கொலுசு வகை.

**பட்டறைக் கட்டை** - தட்டார் நகை செய்யும்போது தங்கத்தை தட்டப் பயன்படுத்தும் சிறிய இரும்புத் துண்டு பொருத்தப்பட்ட கட்டை

**பட்டாக்கத்தி** - வாள். குறிப்பாக உரிமம் பெற்ற வாள். அதாவது வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் பொது மக்கள் வாள் வைத்திருக்

கும் உரிமை தடை செய்யப்பட்டிருந்தது. சிறப்பு அனுமதி பெற்றுத்தான் தனியாள் வாள் வைத்துக்கொள்ள முடியும். அதாவது இன்றைய நாளில் தனியார் துப்பாக்கி வைத்துக் கொள்ள அரசிடம் உரிமம் பெற்றுக் கொள்வது போல.

**பட்டி** - ஆட்டுக்கிடை. *(கீழவயலுல நாளைலேலல இருந்து பட்டி போடச் சொல்லி இருக்கேன்)*

**பட்டியல்** - மரம், மூங்கில் போன்றவற்றின் குறைந்த அளவு கனமும் அகலமும் கொண்ட நீளத்துண்டு.

**பட்டைக்கருப்பட்டி** - பனை ஓலைப்பட்டையில் காய்ச்சி ஊற்றிய கருப்பட்டி வகை.

**படப்பு** - கிராமக் கோவிலில் சாமிக்குப் படைக்கும் நைவேத்தியம் *(படப்பு பிரிச்ச பெறவுதன் ஊருக்கு போகணும்)*

**படத்தி** - வாழை வகை.

**படம்** - கால் பாதத்தின் மேல் பக்கம்.

**படவரி** - வீட்டுத்தோட்டத்தில் அவரை,புடலைக்கொடி வகைகள் படரப் போடப்படும் பந்தல். *(படவரிக்கு குழி தோண்டிட்டயா?)*

**படிக்கம்** - வெற்றிலைச் சாற்றைத் துப்பப் பயன்படுத்தும் வாய் அகன்ற பித்தளைப் பத்திரம்.

**படிச்செலவு** - தினசரிச் செலவு. *(படிச்செலவுக்கு எவ்வளவு ரூவா தாராங்க?)*

**படியளத்தல்** - தினப்படி வாழ்க்கைக்குரிய அனைத்தும் அளித்தல்.

**படுக்காளித்தனம்**
போக்கிரித்தனம் *(அவன் என்னா படுக்காளித்தனம் பண்ணுதான்)*

**படுக்காளிப்பய** - போக்கிரி.

**படுக்கை வசம்** - கிடைமட்டம்.

**படுதா** - திரைச் சீலை, மூடுசீலை *(வில்வண்டிப் படுதா தச்சி வாங்கியாச்சா?)*

**பண்டுவம்** - சிகிச்சை, மருத்துவம். *(என்ன பண்டுவம் பாத்தும் சீக்கு கொணமாகவே மாட்டேங்கு)*

**பண்டுவர்** - மருத்துவர்.

**பத்தக்கொறடு** - பற்றுக்குறடு.

**பத்தயப்பெட்டி** - தானியங்கள் போட்டு வைக்கும் பெரிய மரப் பெட்டி.

**பத்தரை மாத்து** - தங்கத்தின் சுத்தத்தன்மை.

**பத்தவைப்பு** - உலோகங்களை ஒட்ட வைத்தல்.

**பத்தியம்** - நாட்டு மருந்து சாப்பிடும்போது கடைப்பிடிக்க வேண்டிய உணவுக் கட்டுப்பாடு.

**பத்து** - வயல். *(நைனாங்குளத்து பத்துல அந்த ரெண்டு மரக்கா குண்டு நாளைக்கு அறுத்துருலாமா?)*

**பத்துதல்** - மாட்டை ஓட்டுதல்.

**பத்தும்** - போதும். *(பத்து ரூவா குடுக்கயே அது பத்துமா?)*

**பத்துளி** - பற்றுப்புள்ளி, மளிகைக் கடையில் கடனுக்குப் பொருள் வாங்குபவர். *(பத்துளி சீட்டுல பருப்பு வாங்கிட்டு வா)*

**பதக்கு** - இரண்டு மரக்கால் கொண்ட முகத்தல் அளவு.

**பதலம்** - கவனம், பத்திரம். *(பாத்து பதலமா போயிட்டு வா)*

**பதவல்** - குப்பை. *(வீடு பூராம் ஏன் இப்படி பதவலா இருக்கு?)*

**பதனம்** - பார்க்க: பதலம்.

**பதி** - பத்து.

**பதினி** - பதநீர். *(காலப்பதினி நெதமும் குடிச்சா ஒடம்பு கெதியா இருக்கும்)*

**பம்பை1** - நையாண்டி மேளம்.

**பம்பை2** - பரட்டை முடி. *(அவ னோட பம்ப தலய பிடிச்சி உலுப்பு உலுப்புன்னு உலுப்பிட்டா)*

**பம்மல்** - மேகமூட்டம். *(மானம் பம்மலாய் இருக்கே மழை வருமா?)*

**பம்முதல்** - பதுங்குதல். *(புள்ளிக் காரன் எங்கையோ பம்மிட்டான் போலயே)*

**பயினி** - பதநீர்.

**பரக்கப் பார்த்தல்** - வேறு கவன மாக இருத்தல். *(நான் என்ன சொல்லிகிட்டு இருக்கேன் நீ எங்க பரக்கப் பாத்துகிட்டு நிக்க)*

**பரம்படித்தல்** - உழுத பின் விதைப்புக்காகப் பரம்பு சட்டத் தால் வயலைச் சமப்படுத்துதல்.

**பரம்புச் சட்டம்** - பரம்படிக்கப் பயன்படும் உழவுக் கருவி.

**பரிசுகெடுதல்** - சீரழிதல். *(இப்படி புத்திகெட்டு அலஞ்சா வம்பா பரிசுகெட்டு தான் போகப் போற)*

**பருத்திமாறு** - பருத்திச் செடி யின் தண்டு. *(நெல்லு அவிக்க ணும் நாலுக்கெட்டு பருத்தி மாற கொண்டாந்து போடு)*

**பருவம்** - பயிரிடுவதற்கான காலத் தில் பயிரிடப்படும் பயிர். *(இந்த வட்டம் என்ன பருவம் வச்சிருக்க?)*

**பருவெட்டு** - காய், கனி, தானியம் இவற்றில் வடிவில் பருமனானது.

**பலகாரம்** - இட்டிலி, தோசை போன்ற சிற்றுண்டி. *(காலலே பல காரம் சாப்பிட்டுட்டு ஊருக்குப் போலாம்)*

**பலவட்டறை** - பல ஆண்களுடன் தொடர்புடையவள்.

**பலம்** - சுமார் 50 கிராம் அளவு கொண்ட ஓர் எடை அளவு.

**பலவெஞ்சனம்** - மளிகைச் சாமான்.

**பவுசு** - பெருமை. *(புதுத்துட்டு சேந்த பவுசு. என்னாம்மா கொழிக் கிறா?)*

**பவுண்டு** - ஆடு, மாடு போன்ற கால்நடைகள் பிறர் வயலில் மேய்ந்து நாசம் விளைவித்தால் அவற்றைப் பிடித்து அடைக்கும் தொழு. உரிய அபராதம் கட்டிய பின்னரே அவற்றின் சொந்தக் காரரிடம் ஒப்படைக்கப்படும். *(கீழ வீட்டு மாட்ட பவுண்டுல அடச் சிட்டாங்கலாமே தகவல் தெரியுமா?)*

**பவுரண** - பௌர்ணமி. *(வர வெள்ளிக்கிழமையா பவுரண?)*

**பவுன்** - சவரன். *(பிள்ளைக்கு எத்தன பவுன் செய்யப் போற?)*

**பழங்கறி** - சுண்டக்கறி.

**பழயபாடாவதி** - பழைய பயனற்றது. *(இந்த பழய பாடாவதி சாமானை எல்லாம் ஏன் வச்சிருக்க)*

**பழு** - ஏணியின் படிச்சட்டம். *(அந்தப் பத்து பழு ஏணியை எடுத்துகிட்டு வா)*

**பழுக்கக்காச்சு-தல்** - இரும்பு போன்றவற்றைச் சிவக்கச் சூடாக்குதல்.

**பழுப்பு** - காய் பழுத்திருக்கும் தன்மை. *(பழுப்புக் காணாது. இன்னும் கொஞ்சம் பழுக்கணும்)*

**பழுப்புப்போடு-தல்**- புதிதாக செய்து முடித்த தங்கநகைக்குப் பொன் நிறமேற்றுதல்.

**பழைது** - பழஞ்சோறு. *(காலேல தெனமும் பழைதுதான் சாப்பிடு வேன்)*

**பள்ளக்கால்** - தாழ்ந்த நிலத்தில் பாயும் வாய்க்கால்.

**பள்ளம் தோண்டு-தல்** - ஒரு வனைக் கெடுக்க முயலுதல். *(அவங்கிட்ட பாத்து பழகு. கூட இருந்தே பள்ளம் தோண்டுதவன் அவன்)*

**பள்ளிவாசல்** - மசூதி.

**பறக்களி** - கட்டுப்பாடு இன்றித் திரியும் ஆண், பெண்ணைக் குறிக் குக் வசைச் சொல். *(ஏன் இப்படி பறக்களி மாரித் திரியுற?)*

**பறிதல்** - வெளிப்படுதல். *(ஓட்டை குழல் ஊத்து பறியுமா?)*

**பன்னருவா** - புல், கதிர் அறுக்கப் பயன்படும் பற்கள் உள்ள வளைந்த அரிவாள்.

**பன்னிநெய்** - பதப்படுத்தப்பட்ட பன்றியின் கொழுப்பு.

**பனங்கம்பு** - பனைமரக் கட்டை *(உங்க வீட்டு ஓட்டு சாய்ப்பு பனங்கம்பா வேறயா?)*

**பனங்கல்கண்டு** - ப்தநீரைக் காய்ச்சிச் செய்யப்படும் கற்கண்டு வகை. *(ராத்தரியெல்லாம் தொண்டப்போச்சலா இருக் குன்னு சொன்னல. ரெண்டு நாளைக்கு பாலுல பனங்கல்கண்டு போட்டு தரேன் குடி)*

**பனங்கை** - பார்க்க: பனங்கம்பு.

## பா

**பாக்கி** - மீதம். *(பால்காரனுக்குக் கொடுத்தது போக பாக்கி எவ் வளவு இருக்கு?)*

**பாங்கிணறு** - பயனற்றுப் பாழடைந்த கிணறு.

**பாச்சா** - பாச்சை.

**பாச்சாவுருண்டை**- விஷ கற்பூர வில்லை. *(பிரோவுல பாச்சா வுருண்டையை போட்டு வை)*

**பாசாணம்** - விஷம், நஞ்சு. *(மேலத்தெருவுல எவனோ பாசாணத்த தின்னுட்டானாமே யாருன்னு உனக்குத் தெரியுமா?)*

**பாதகத்தி** - பாதகம் செய்பவள்.

**பாதாளக்கரண்டி** - வீட்டுக் கிணற்றில் விழுந்த வாளி போன்ற பொருட்களை எடுக்கப் பயன் படும் சாதனம். *(வாளி கிணத்துல அந்து விழுந்துட்டு. அக்கா வீட்டுல போயி பாதாளகரண்டிய வாங் கிட்டு வா)*

**பாந்து1** - பொந்து.

**பாந்து2** - சுவரில் கற்களுக்கு இடையில் உள்ள சந்து.

**பாட்டம்** - நிலத்தைப் பயிரிட குத்தகைக்கு விடும் முறை. *(இந்தப் பூ பாட்டத்த எப்ப தரப் போற?)*

**பாட்டுல போடு-தல்** - படுக்கை வசத்தில் போடுதல்.


**பாடு1** - நிலைமை. *(வருமானம் கொஞ்சம் கூடுதலா வருது. அதால எம் பாடு கொஞ்சம் பரவாயில்ல)*

**பாடு2** - மீன்செழிப்பு. *(இந்த மாசம் மீன் பாடு ரெம்ப நல்லா இருக்கும்)*

**பாடுபேசுதல்** - பெண்கள் வீட்டு, ஊர் நிலவரம்பற்றிப் பேசுதல்.

**பாடுவ்ாசி** - நெல் போன்ற வற்றை அளந்த பின் ஏற்படும் குறைவு. *(படுவாசின்னு சொல்லி எவ்வளவு நெல்லு அள்ளுத)*

**பாம்படம்** - காதணி வகை. *(கிழவி பாம்படத்தை யாருக்குத் தரப் போறா?)*




**பாம்பு நெய்** - சாரப்பாம்பின் கொழுப்பு.

**பாரக்கயறு** - வண்டியில் பாரத்தைக் கட்டப் பயன்படும் வடக் கயிறு. *(வரும்போது நெல்லு மூட்ட ஏத்திட்டு வரணும். பாரக்கயித்த மறக்காம வண்டில எடுத்துப் போடு)*

**பால்கஞ்சி** - பாலில் அரிசியை குழைய வைத்து அதில் முருங்கைப் பூ, சுக்கு, சாரணவேர், பூண்டு போன்றவற்றைச் சேர்த்து வைக்கும் கஞ்சி. கருவுற்ற ஐந்தாவது மற்றும் ஏழாவது மாதங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கு இந்தக் கஞ்சி வைத்துக் கொடுப்பது வழக்கம்.

**பாலுண்ணி** - உடம்பில் மிளகு அளவிலும் வடிவிலும் உண்டாகும் ஒரு வகைச் சதை வளர்ச்சி *(அவளுக்கு வலது காதுகிட்ட ஒரு பாலுண்ணி இருக்கும்)*

**பாவுதல்** - விதைத்தல்

**பானக்கம்** - கருப்பட்டி, புளி, ஏலக்காய் போன்றவற்றைக் கரைத்துச் செய்யப்படும் பானம். *(சூரசம்மாரம் முடிஞ்சதும் சட்டி விரதம் இருந்தவங்களுக்கு கோவில்ல பானாக்கம் குடுப்பாங்க)*

## பி

**பிசானம்** - தை, மாசி மாதங்களான அறுவடைக் காலம், *(பிசானத்துக்கு தண்ணி ஓடிடும், ஆனா காருக்கு ஒப்பேறுமான்னு தெரியல)*

**பிசின்** - மரக்கோந்து. *(என்னடா அவங்கூட பிசின் மாரி ஒட்டிட்டு திரியிற)*

**பிசினாறி** - கஞ்சன். *(அவனே ஒரு பிசினாறி. அவங்கிட்ட போயி நீ பணம் கேட்டிருக்க பாரு)*

**பிஞ்ச** - புஞ்சை நிலம். *(பிஞ்ச காட்ட வித்துறலாம்னு நினைக்கேன்)*

**பிட்டி** - இடுப்பு. *(ராவெல்லாம் பிட்டி வலி தாங்க முடியல)*

**பிடி** - நான்கு விரல் அளவு. *(ஒஞ் சங்கிலி எட்டு பிடின்னு ஓங்கையா சொன்னாரே ஆனா ஏழு பிடி தானே இருக்கு)*

**பிடிமண்ணு** - ஏற்கெனவே குடி கொண்டிருக்கும் இடத்திலிருந்து ஒரு தெய்வத்தை வேறோர் இடத் தில் குடியமர்த்த வேண்டி பழைய இடத்திலிருந்து புதிய இடத்திற்கு எடுத்துச் செல்லும் கைப்பிடி மண். *(ஆலமரதடியில இருந்த சாமியை அங்க இருந்து பிடி மண்ண எடுத்துட்டு வந்து அம்பது வருசத்துக்கு முன்ன இந்த இடத் துல குடியமத்துனாங்க)*

**பிடிமானம்** - ஆதாரம். *(எனக்கு இருந்த ஒரே பிடிமானம் அவ தான். இப்ப அதுவும் இல்ல)*


**பிரயோசனம்** . பயன்பாடு, உபயோகம். *(அவன கொண்டு நமக்கு ஒரு பிரயோசனமும் கிடை யாது)*

**பிராந்து** - பருந்து. *(இருந்த ஒரு குஞ்சையும் கள்ளப்பிராந்து தூக்கிட்டு போயிட்டு)*

**பிராயம்** - வயது. *(ஒரே பிராயத் துக்காரங்க சேந்துதான் சுத்து வாங்க, என்ன செய்ய)*

**பிரித்தல்** - வசூலித்தல்.

**பிரிமணை** - பானை தரையில் ஆடாமல் இருக்கும் படி வைக்கும் வட்ட வடிவான பொருள். *(இந்த குண்டியில்லாத பாத்திரத்த பிரி மணல வைன்னு எத்தன தடவை சொல்லியாச்சு)*



பிரிமணை

**பிரியாணி** - முறுக்காணி. *(நாலு அரேஅரைக்கா பிரியாணி எடுத்தா)*

**பிள்ள** - இளம்பெண்.

**பிள்ளையாண்டன்** - பையன். *(பிள்ளையாண்டன எங்கையோ பாத்த மாரி இருக்கே)*

**பிளாச்சு** - மூங்கில் போன்ற வற்றின் பிளவு .

**பிற்பாடு** - பிறகு.

**பின்கொசம்** - முதுகுபுறம் வைத் துக் கட்டும் சேலைக்கொசுவம்.

## பீ

**பீ உருட்டி வண்டு** - வண்டு வகையில் ஒன்று.

**பீக்குழி** - பல்லாங்குழி விளை யாட்டில் குழியில் போடுவதற்குக் காய் இல்லாமல் வெற்றுக் குழி யாய் விடப்படும் குழி.

**பீங்கான்**- சீனா களிமண்ணில் சுடப்பட்ட பாத்திரம். *(அது பீங் கான் கிண்ணம் கீழ போட்டுறாத. உடஞ்சிறப் போகுது)*

**பீச்சக்கை** -இடது கை. *(பீச்சக் கையால எதையும் வாங்காதேன்னு எத்தன தடவ சொல்லுதேன் மண்டையில ஏற மாட்டேங்கே)*

**பீச்சாங்கை** - பார்க்க: பீச்சக்கை.

**பீத்தண்ணி** - தொடர்ந்து நீராகப் பேதியாதல். *(ராத்திரில இருந்து பீத்தண்ணியா போகுது. என்னவாமோ சாப்பிட்டுப் பாத்துட்டேன். ஒன்னுக்கும் அடப்படல)*

**பீத்து** - பெருமை பேசுதல். *(எப்பவும் இவ தாம்பிறந்த வீட்டு பெருமைய பத்தி பீத்திகிட்டே இருக்கா)*

**பீத்துணி** - குழந்தை மலம் கழித்த துணி.

**பீநாறி** - ஒரு செடி வகை.

**பீப்பி** - நாகசுரம்.

**பீராஞ்சு** - சேகரம்பண்ணி, சிறிது சிறிதாகச் சேகரி.

## பு

**புகைச்சல்** - கோபத்தால் உண்டாகும் மன எரிச்சல்.

**புகைசுத்து-தல்** - அதிகச் சூட்டில் வேகும் சோறு புகை சூழ்ந்து நாறுதல்.

**புகையாறை** - அடுக்களை போன்ற இடங்களில் உள்ள புகை யேறிய நூலாம்படை *(அடுக்களையில எவ்வளவு புகையாறை இருக்கு அத அடிச்சா என்ன?)*

**புட்டாம்** - சேலையில் போடப் பட்டிருக்கும் பூ வேலை. *(இதே மாரி பச்சேல புட்டாம் போட்ட சேல ஓங்கிட்ட ஒன்னு இருக்குல்லா?)*

**புத்தரிசி பொங்கல்** - முதல் அறுப்பு நெல்லைக் குத்திச் சோறு பொங்கும் சடங்கு. *(நாளைக்குப் புத்தரிசி பொங்க விடணும். ஏற்பாடு பண்ணீரு)*

**புதுநிறம்** - மாநிறம், கருப்பும் சிவப்பும் அல்லாத பொது நிறம்.

**புல்லமாடு** - வெளிர் பழுப்பு நிற மாடு *(மேயப் போன புல்ல மாடு இன்னும் வரலையே என்னான்னு பாரு)*

**புல்லாக்கு** - மூக்கில் தொங்க விடும் அணி வகை.

**புல்லாந்தரை** - புல்வெளி.

**புல்லை** - வெளிர் பழுப்பு நிறம்.

**புலுக்கை** - ஆட்டின் கழிவு.

**புழுங்கல்** - அவித்த நெல்.

**புள்ளிக்கணக்கு** - துணி வியாபாரிகள் துணியிலிடும் விலைக் குறியீடு.

**புள்ளிக்காரன்** - பெயர் சொல்லாது குறிப்பிடப்படுபவன்.

**புள்ளி பார்-த்தல்** - அறுவடைக்கு முன் வயலின் விளைச்சலை மதிப்பிடுதல்.

**புளிக்கறி** - புளியுடன் தேங்காய் சேர்த்து அரைத்து வைக்கும் குழம்பு.

**புளியில்லாக்கறி** - புளி இல்லாமல் மிளகு, துவரம்பருப்பு, முதலியவற்றைச் சேர்த்து வைக்கும் குழம்பு.

**புறணி** - புறம் பேசுதல். *(புறணி பேசுறதே அவளுக்குச் சோலி)*

**புறப்பாடு** - உடலில் உண்டாகும் புண், கட்டி. *(முதுகுல ஒரு புறப்பாடு. ரெண்டு மூணு நாளா ஒரே பாடுதான்)*

**புறப்பாட்டு வீக்கம்** - புண்ணினால் உண்டான வீக்கம்.

**புழுக்கடி** - தலை மயிரை உதிர

வைக்கும் வியாதி.

**புன்னைக்கெண்ணெய்** - புன்னைக்காய் கொட்டையிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் விளக்கு ஏரிக்கப் பயன்படுத்துவர்.

## பூ

**பூக்கட்டிப்பார்-த்தல்** - குழப்பமான விஷயத்தில் தெய்வ சம்மதம் பெற வெள்ளைப் பூவையும் சிவப்பு பூவையும் தனித் தனியாகப் பொதிந்து தெய்வ சந்நிதியின் முன்பு போட்டு ஒரு பூவை எடுத்து முடிவுக்கு வருதல். *(சாமிக்கு முன்னால பூக்கட்டி போட்டுப் பாத்து ஒரு முடிவு பண்ணுவோம்*

**பூச்சீட்டு** - ஆறு மாதங்களுக்கு ஒரு முறை(ஒவ்வொரு மகசூலுக்கும்)பணம் செலுத்தும் சீட்டு. *(ஏம்பா இன்னும் எத்தன பூக்குப் பணம் அடைக்க வேண்டியிருக்கும்)*

**பூசணம் பூத்தல்** - உணவுப் பொருட்களில் காளான் படருதல்.

**பூசி மெழுகு-தல்** - செய்த தவறையோ தப்பான பேச்சையோ நியாயப்படுத்துதல்.

**பூசைக்காப்பு** - செமயாய் அடித்தல்.

**பூட்டாங்கயிறு** - மாட்டை நுகத்தடியில் பூட்டப் பயன்படும் கயிறு.

**பூட்டு** - ஐந்து வாழை இலைகள் கொண்ட அடுக்கு.

**பூண் உலக்கை** - இரும்புப் பூண் பொருத்தப்பட்ட உலக்கை.

**பூடம்** - நாட்டார் தெய்வ வடிவு.

**பூத்து** - புதைத்து.

**பூதம்** - பூரான்.

**பூந்திக்கொட்டை** - தட்டார் தங்க நகைகளைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தும் அழுக்கு நீக்கும் கொட்டை *(பூந்திக்கொட்டை வாங்கிட்டு வரச் சொன்னேனே வாங்கிட்டு வந்திருக்கயா?)*

**பூப்போல** - மென்மையாக, மெதுவாக.

**பூராவும்** - முழுவதும், *(சம்பளப் பணம் பூராவும் தொலஞ்சி போச்சுன்னு சொல்லுறானே பாவி நான் என்ன செய்ய?)*

**பூலாஞ்சுண்டான்**.- வாழை வகை.

**பூவரி** - தென்னம் பூ.

## பெ

**பெட்டி** - இஸ்திரிப் பெட்டி.

**பெட்டி அடுப்பு** - சுற்றிச் செங்கல் கட்டு தேவைப்படாத கனத்த சுட்ட மண் அடுப்பு.

**பெட்டிபோடுதல்** - இஸ்திரிப் போடுதல் *(சட்டைய பெட்டிப் போட சொன்னேனே போட்டையா?*

**பெண்சிரட்டை** - தேங்காயின் கண் உள்ள பாதிப் பகுதி.

**பெரட்டு** - தில்லு முல்லு.

**பெரட்டுக்காரன்**
ஏமாற்றுக்காரன்.

**பெரட்டுதல்** - வாந்தி வரும் உணர்வு.

**பெரட்டி**- புரட்டி.

**பெரண்டை** - கொடி வகை, மருத்துவக் குணம் நிறைந்தது. *(இட்டி*

*விக்குப் பெரண்ட தொவையல் அரைக்கவா?)*

**பெரிய மனுஷியாதல்** - பருவ மடைதல். *(பேத்திப் பொண்ணு பெரிய மனுஷியாயிட்டா போல?)*

**பெருங்கால் பிடித்தல்** - ஒரே இடத்தில் அசையாமல் உட்கார்ந் திருப்பதால் கால் திமிர் பிடித்துப் போதல்.

**பெறங்கை** - புறங்கை. *(தேன தொட்டவன் பெறங்கைய நக்கா மலா இருப்பான்?)*

**பெறடை** - சன்னல் கதவைப் பின் பக்கமாகத் தாழிடும் தாழ். *(சன்னல சாத்தி பெறடையப் போடு)*

**பெறத்த** - பின்னால். *(சத்தமில் லாம பெறத்த வந்து நிக்கையே)*

**பெறத்தநிக்க** - பின் நோக்கி. *(வண்டி பெறத்த நிக்க போயிராம அண்ட குடு)*

**பெறாசல்** - பின்வாசல். *(பெறா சல் கதவ யாரு தெறந்து போட்டா?)*

**பெறாட்டி** - பிறகு. *(வயக்காட்டுக் குப் போயிட்டு வந்து பெறாட்டி உன்னப் பாக்கேன்)*

## பே

**பேக்கொட்டு** - நாட்டார் கோவி லில் இசைக்கப்படும் மேளம்.

**பேக்கோவில்** - சுடலைமாடன் போன்ற உக்கிரமான நாட்டார் தெய்வக் கோவில்.

**பேசரி** - மூக்கில் அணியும் ஆப ரணம்.

**பேறுகாலம்** - பிரசவம்.

**பேத்த** - விபரம் இல்லாதவன்.

**பேயன்** - வாழை வகை.

**பேருவாதி** - சரிபாதி.

**பேரேடு** - வியாபாரக் கடையில் வரவு செலவுக் கணக்கு போன்ற விபரங்களைக் குறித்து வைக்கும் ஏடு.

**பேன்சீப்பு** - தலையிலிருந்து பேன் எடுக்கப் பயன்படும் சீப்பு.

## பை

**பைசல்** - தீர்வு *(விவகாரத்த பைசல் பண்ணிட்டு நீ ஊருக்குப் போனா போதும்)*

**பைசா** - குறைந்த மதிப்புள்ள நாணயம்.

**பைதா** - வண்டிச்சக்கரம்.

**பைய** - மெதுவாய், மெல்ல. *(கண்ணாடிச் சாமான் பாத்து பைய கீழ வையி)*

## பொ

**பொக்கணம்** - பரதேசிகள் பிச்சை ஏற்கும் பை. *(பரதேசி பொக்கணம் கெட்டி வச்ச மாரி அதுல அப்படி என்ன தான் வச்சிருக்க?)*

**பொக்களம்** - கொப்புளம், கட்டி. *(உள்ளங்காலுல ஒரு பொக்களம். ரெண்டு நாளா நடக்கக் கூட முடி யாம அவஸ்தையா இருக்கு)*

**பொக்கு1** - உள்ளீடு முற்றாத தானியம்.

**பொக்கு2** - பொருக்கு.

**பொங்கக்கட்டி** - தைப். பொங்கல் விட மண்ணால் செய்யப்பட்ட அடுப்புக்கட்டி.

**பொங்கு** - சோறாக்கு.

**பொச்சு** - பெண்குறி.

**பொசல்** - புயல்.

**பொசுங்கல்** - சிறு தூறல். *(காலையிலே இருந்து பொசுங்கலாவே இருக்கு. வெளிலயே போக முடியல)*

**பொட்டை1** - பெண்குழந்தை.

**பொட்டை2** - குருடு. *(உனக்குக் கண்ணு பொட்டையா? இப்படி வந்து இடிக்கையே?)*

**பொடதி** - பிடரி, பின்மண்டை. *(பொடதில ரெண்டு சாத்து சாத்தி அந்தப் பயல வெரட்டு)*

**பொடப்பு** - வீக்கம். *(தலையில் என்ன பொடப்பு? எங்கயாவது முட்டிகிட்டயா?)*

**பொடவு** - பொந்து.

**பொடிநடை** - சிறுநடை. *(பொடி நடையா கடைக்குப் போயிட்டு வாரேன்)*

**பொடிமட்டை** - மூக்குப்பொடி பொதியப் பயன்படும் காய்ந்த வாழை மட்டை.

**பொடிசு** - சிறியது. *(தேங்கா என்ன ரெம்ப பொடிசா இருக்கு?)*

**பொணையல்** - பிணையல்.

**பொத்து** - மூடு. *(சரி சரி, வாய பொத்திட்டு சும்மா இரி)*

**பொத்துப்போச்சு** - தீ மற்றும் சூட்டினால் உடல் வெந்து போவது. *(பால் பொங்கி கையில் விழுந்து கை பொத்துப்போச்சு)*

**பொத்தை** - சிறுகுன்று.

**பொதுப்படையா** - பொதுவாக.

**பொதி1** - சுமை.

**பொதி2** - பருத்தி போன்றவற்றின் எடை அளவு.

**பொதிப்பட்டம்** - நெற்பயிரில் பால் பிடிக்கும் பருவம். *(பொதிப் பட்டதுல இப்படித் தண்ணித் தட்டுப்பாடா இருக்கே. வெள்ளாம என்னாகுமோ தெரியலயே)*

**பொதியல்** - களத்தின் முதல் மரக்கால் நெல்லை கடவுளுக்கு சமர்ப்பிக்கும் காணிக்கை. இந்த நெல்லை குத்திக் கோவிலில் பொங்கலிட்டு ஊர் மக்கள் அனைவரும் உண்பர்.

**பொதுமு-தல்** - நீரில் ஊறுதல். *(ஈரத்துல பொதுமிப் போயி இருக்கு அரிசி).*

**பொந்து** - மரத்தில் உள்ள ஓட்டை, வளை.

**பொரிகடலை** - பொட்டுக் கடலை. *(பொரிகடலை துவையல் அரைச்சி வச்சிரு)*

**பொரிச்சம் பார்த்தல்** - சோழி போட்டுப் பார்த்துப் பலன் சொல்லுதல்.

**பொருத்து-தல்** - விளக்கு ஏற்று தல். *(சாயந்தரம் விளக்கு பொருத்துற நேரத்துல இந்த வேலையெல்லாம் செய்யாதேனு எத்தன தடவை சொல்லுறது)*

**பொருத்து** - நெற்றி இணைவு.

**பொலி** - நெல்லில் தூசு போக்க முறத்தில் அள்ளி நீளமாக தூத்துவர். அவ்வாறு தூத்தும் நெல் நீளமாகக் குவியும் குவியல்.

**பொழி** - வரப்பு *(அந்த பொழி வரையிலும் நம்ம எல்ல தான்)*

**பொழுதடைய** - சாயுங்காலம்

**பொழுதூற** - மாலை, சாயுங் காலம். *(நேத்து பொழுதூறயே*

*அவன் ஊருக்குப் போயிட்டானே)*

**பொறத்த** - பின்பக்கம், பின்னால்.

**பொறத்தநிக்க** - பின்நோக்கி, பின்பக்கமாக.

**பொறவு** - பிறகு.

**பொறாசல்** - பார்க்க: பெறாசல்.

**பொன்னாசி** - மூக்கின் உள் பகுதி. சில்லுமூக்கு.

## போ

**போக்கத்தவன்** - எந்த வசதியும் இல்லாதவன்.

**போக்கத்து** - எந்த வழியும் இல்லாமல். *(போக்கத்துப் போயி கடேசியில இங்க வந்துருக்கான்)*

**போக்கழிஞ்சி** - எல்லாம் இழந்து. *(இந்த மாதரி நீ பண்ணிக் கிட்டு இருந்தா போக்கழிஞ்சிதான் போவ)*

**போக்காளன்** - இளம் வயதில் இறந்து போனவன்.

**போக்கிலி** - அயோக்கியன், துஷ் டன். *(அவன் பெரிய போக்கிலி பயலாலா இருக்கான்)*

**போக்குவெயில்** - மாலை வெயில்.

**போகச்சுல** - போகும் போது. *(வேர்க்கடல பையில போட்டு வச்சிருக்கேன். போகச்சுல மறக்காம எடுத்துட்டுப் போ)*

**போஞ்சி** - எலுமிச்சைச் சாறும் உப்பும் கலந்த பானம்.

**போணிசட்டி** - பெரிய பித்தளைப் பத்திரம் *(போணி சட்டியில வென்னீ வச்சிருக்கேன். போயி குளி)*

**போதமில்லாமல்** - தன் உணர் வற்ற நிலை. *(ரெண்டு நாளா இப் படிதான் போதமில்லாம இருக்கார்)*

**போல்** - மாட்டுவண்டியின் நீள மான பகுதி. இதன் முனையில் தான் நுகத்தைக் கட்டுவார்கள் *(pole* என்ற ஆங்கிலச் சொல்லிற்கு நீள இரும்பு அல்லது மரத்துண்டு என்றே பொருள்).

**போறாமை** - பொறாமை. *(அவன் ரெம்ப போறாம பிடிச்ச வானா இருக்கானே)*

## ம

**மச்சம்1** - தங்கத்தின் மாற்று அறிய வைத்திருக்கும் மாதிரிப் பொன்.

**மச்சம்2** - ருசு.

**மச்சி** - செங்கல் குத்திப் பாவிய மேல்தளம்.

**மசங்கு** - மயங்கு.

**மசிக்கூடு** - மைக்கூடு.

**மசியல்** - காய்களை மசித்துச் செய்யும் கறி.

**மசுக்குட்டி** - புழுவகை.

**மசுராண்டி** - வசைச் சொல்.

**மசுரு** - மயிர்.

**மஞ்சணை** - கிராமக் கோவில் களில் பயன்படுத்தும் மஞ்சள், சுண்ணாம்பு, எண்ணெய் கலந்த வாசனைச் சாந்து.

**மஞ்சாடி** - இரண்டு குன்றிமணி களின் எடை கொண்ட தங்கத்தை நிறுக்கும் எடை அளவு.

**மட்டப்பா** - செங்கல் குத்திய கூரை.

**மட்டம் பார்-த்தல்** - சுவர் முதலியவற்றின் ஒழுங்கை கவனித்தல்.

**மட்டமாக்கு-தல்** - சமனாக்குதல்.

**மட்டி1** - மந்த புத்தி உள்ளவன்.

**மட்டி2** - வாழைப்பழ வகை.

**மட்டுக்கும்** - அது வரைக்கும்.

**மடசாம்பிராணி** - சுறுசுறுப் பற்றவன், மடையன்.

**மடப்பள்ளி** - கோயில் சமையல் அறை.

**மண்டகப்படி** - உற்சவமூர்த்தி மண்டபத்தில் எழுந்தருள்வதற்காகச் செய்யும் செலவு.

**மண்டையிடி** - தலைவலி.

**மப்பு1** - செருக்கு, திமிர்.

**மப்பு2** - மேகமூட்டம்.

**மம்பட்டி** - மண்வெட்டி. *(மம்பட்டி கை ஒடஞ்சி போயி எத்தன நாளாச்சு, எப்ப மாத்தப் போற)*

**மய்யம்** - சவம், சடலம். *(ஆஸ்பத்திரியில் இருந்து மய்யம் எப்போ வருதாம்?)*

**மயிர்மாணிக்கம்** - ஊசிபோன்ற சிறிய இலைகளைக் கொண்ட சிறிய சிவப்பு நிறப் பூக்கள் பூக்கும் கொடி வகை.

**மயிலை** - வெண்மை கலந்த கருப்பு. *(மயிலைக் காளையைப் பிடித்துக் கட்டு)*

**மயினி** - மதினி, அண்ணி.

**மரக்கால்** - நெல் அளக்கப் பயன்படும் முகத்தலளவைக் கருவி.

**மரக்குரங்கு** - சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு.

**மரச்சீனிக்கிழங்கு** - வள்ளிக் கிழங்கு.

**மரம்** - வயலைச் சமன்படுத்தும் சாதனம்.

**மரவை** - மரக்கட்டையில் செய்த பாத்திரம். உப்பு போன்றவற்றை வைக்கப் பயன்படுவது.

**மருத்துவச்சி** - கிராமங்களில் பிள்ளைப் பேறு பார்க்கும் மருத்துவப் பெண்.

**மருவீடு** - திருமணம் முடிந்து மணமகள் வீட்டிற்கு மணமக்கள் செல்லும் சடங்கு.

**மருந்து** - வசிய மருந்து. *(இவனுக்கு ஏதோ மருந்து வச்சிட்டா அவ, அது தான் இப்படி அவ காலடியிலேயே கிடக்கான்)*

**மருந்துக்கும்** - கொஞ்சமும். *(மருந்துக்கு கூட அவன் உண்மையை பேச மாட்டான்)*

**மல்லாடு-தல்** - ஒரு காரியத்தைச் செய்து முடிக்கப் போராடுதல்.

**மல்லி** - கொத்தமல்லி விதை, தனியா.

**மல்லி இலை** - கொத்தமல்லித் தழை.

**மல்லுக்கட்டு-தல்** - பார்க்க: மல்லாடுதல்.

**மறுகால்** - குளம் பெருகி அதிகப்படி நீர் வழியும் வழி.

**மறுநாத்து** - மறுநாள்.

**மறுமாத்தம்** - சுண்டக் கறி.

**மறுமுள்** - அம்மை நோய் இறங்குவது போல் தோன்றித் தலைக்குத் தண்ணீர் ஊற்றிய பின் மீண்டும் முத்துக்கள் கோர்ப்பது.

## மா

***மாக்கான்*** - மூடன், மடையன்.

***மாங்காய்1*** - ஆடு மாடு போன்ற விலங்குகளின் சிறுநீரகம்.

***மாங்காய்2*** - நடுவில் வைரமும் சுற்றிலும் பதினோரு சிவப்பு கற்களும் பதித்த கழுத்தணி.

***மாங்குழை*** - மாவிலை.

***மாச்சல்*** - சோம்பல்.

***மாச்சீனி*** - பொடிக்கப்பட்ட நாட்டுச் சர்க்கரை.

***மாசப்பிறப்பு*** - மாதத்தின் முதல் நாள்.

***மாசமா இருத்தல்*** - கர்ப்பமாக இருத்தல்.

***மாசாந்தம்*** - கடைசி வெள்ளி, கடைசி செவ்வாய் போன்ற நாட்களில் கோவிலுக்குச் செல்லுதல்.

***மாசி*** - சிறிய கடல் மீன் வகை.

***மாசில்*** - மகசூல், விளைச்சல்.

***மாட்டல்*** - பெண்கள் காதணியில் இருந்து தலைமயிரில் மாட்டும் ஆபரணம்.


***மாட்டுத்தாவணி*** - கால்நடைச் சந்தை.

***மாடாக்குழி*** - சுவரில் உள்ளடங்கி இருக்கும் விளக்கு பொருத்தி வைக்கும் புரை.

***மாணி*** - ஆண்குறி.

***மாத்து1*** - தங்கத்தின் தரம்.

***மாத்து2*** - நல்லது, கெட்டது போன்ற சடங்குகளுக்குப் பந்தல், நடைபாவடை முதலியவற்றுக்காக ஊரார் பயன்படுத்த வண்ணாரால் கொடுக்கப்படும் துணி.



மாடாக்குழி

***மாத்துமாலை*** - திருமணத்தின் போது மணமக்கள் ஒருவருக்கு ஒருவர் மாற்றிக் கொள்ளும் மாலை.

***மாப்பு*** - மன்னிப்பு.

***மாய்மாலம்*** - பாசாங்கு.

***மாரடித்தல்*** - நெஞ்சில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்தல். *(மாரடிச்சக் காசு மடி மேல)*

***மால்1*** - வேளாண் பொருட்களை மொத்தக் கொள்முதல் செய்யும் வணிக நிறுவனம்.

***மால்2*** - காளவாசல், சூளை.

***மாவட மரவட*** - நிலத்தில் உள்ள மரம் செடி மற்றும் ஆடு மாடு. இந்தச் சொல் நில விற்பனைப் பத்திரத்தில் கையாளப்படும் சொல். இதையே தாவரசங்கமச் சொத்து என்றும் குறிப்பிடுவர். அசையும் மற்றும் அசையாச் சொத்து.

***மாவுத்தன்*** - யானைப் பாகன்.

***மானாவாரிக்குளம்*** - மழை ஒன்றையே நீர் ஆதாரமாகக் கொண்ட குளம்.

## மி

**மிச்சம்** - மீதி

**மிஞ்சி** - கால் விரலில் அணியும் சலங்கை கோர்த்த வெள்ளி மெட்டி

**மிட்டாசி** - இனிப்பு, மிட்டாய்.

**மிதி உழுந்து** - நன்செய் நிலத்தில் நெல் அறுவடைக்கு முன் விதைத்து அறுவடையின் போது காலில் மிதிபட்டு முளைத்து அறுவடைக்குப் பின் முதிரும் உழுந்து வகை.

**மிராட்டிச்சி** - நரிக்குறத்தி.

**மிராட்டியன்** - நரிக்குறவன்.

**மிளசெடி** - மிளகாய்ச் செடி.

**மிளவத்தப் பூச்சி** - கரப்பான் பூச்சி.

**மிளவத்த மால்** - மிளகாய் வத்தல் மண்டி.

**மிளா**- மானின் வகை.

**மிளாறு** - புளியமரம் போன்றவற்றின் வளையும் தன்மையுடைய இளங்கம்பு.

**மினுக்கட்டாம் பூச்சி** - மின் மினிப்பூச்சி.

**மினுக்குமினுக்குன்னு** - ஒளி குறைந்த தன்மை.

## மீ

**மீனெண்ணெய் மாத்திரை** - ஒரு வகை மீனிலிருந்து எடுக்கப்படும் நெய் அடைக்கப்பட்ட கூடு மாத்திரை (capsule).

**மீந்து போச்சு** - மீதம் ஆகியது.

**மீன்பாடு** - மீன் கிடைக்கும் அளவு.

**மீன்வெட்டு** - இரவு நேரங்களில் தீப்பந்த வெளிச்சத்தின் கவர்ச்சியில் ஆற்று மீன்களை நீரின் மேல் மட்டத்திற்கு வரச் செய்து நீளக் கத்தியால் வெட்டி வேட்டையாடுதல்.

## மு

**முக்கட்டு** - மூன்று கற்கள் வைத்துச் செய்யப்பட்ட ஆண்கள் அணியும் காதணி.

**முக்கலேமுண்டாணி1** - 15/16 என்ற பின்ன எண். இதன் மதிப்பு கிட்டத்தட்ட 94%

**முக்கலேமுண்டாணி2** - பெரும்பாலும் நிச்சயமாய். (முக்கலே முண்டாணி அவன் வந்துருவான்)

**முக்காத்துட்டு** - ஒரு ரூபாயில் 64இல் ஒரு பங்கு மதிப்புள்ள பழைய நாணயம்.

**முக்கு** - மூலை, முனை.

**முக்குறுணி** - மூன்று மரக்கால் பரப்பளவு கொண்ட வயல். அதாவது 24 செண்ட் பரப்பு.

**முக்கூட்டு எண்ணெய்** - இலுப்பை எண்ணெய், வேப்பெண்ணெய், புங்கையெண்ணெய் மூன்றும் கலந்த கூட்டு எண்ணெய். முக்கூட்டு எண்ணெய்யினால் தெய்வத்திற்கு விளக்குப் போட்டால் தெய்வ அருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

**முகப்பு** - வீடு, கட்டடம் போன்றவற்றின் முன் பக்கம்.

**முகரக்கட்டை**- முகம்.

**முங்கி** - மூழ்கி.

**முசல்** - முயல்.

**முசுறு** - சாடுமூஞ்சிக்காரன்.

**முட்டு** - கை, கால் எலும்பு இணைப்பு.

**முட்டுக்கட்டை**- ஓட்டத்தை மட்டுப்படுத்த மாட்டின் கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் சிறிய துண்டுக் கட்டை.

**முட்டைப்பத்து** - எலும்பு முறிவுக்கு கோழிமுட்டையின் வெள்ளைக்கரு கொண்டு போடப்படும் பற்று.

**முடுக்கு1** - விரைவுபடுத்துகை.

**முடுக்கு2**- குறுகிய சந்து.

**முண்டச்சி** -விதவை.

**முண்டாசு** - தலைப்பாக்கட்டு.

**முதக்கால்** - முதல்குளம். *(முதக்கால் நிறஞ்சா தான் மறுகால் பாயும்)*

**முந்தாநேத்து** - நேற்றைக்கு முந்தைய நாள்.

**முந்தி1** - முந்தானை.

**முந்தி2** - முன்னம்.

**முந்திரி** - ஒரு பின்னஎண். *[1/320]*

**முந்திரிக்கொட்டை** - எல்லா விஷயத்திலும் தான் தான் என்று முந்திக்கொண்டு தலையை நீட்டுபவன்.

**முந்திரிக்கொத்து** - ஒரு வகை இனிப்புப் பண்டம்.

**முந்திரிப்பழம்** - உலர்ந்த திராட்சைப் பழம்.

**முப்பாரம்** - பாரவண்டியில் முன்பக்கம் ஏற்றப்பட்ட பாரம்.

**முழுக்க** - முழுதும்.

**முழி** - கண்விழி.

**முழி-த்தல்** - விழித்தல்.

**முழுக்கு** - குளியல்.

**முழுசும்** - முழுவதும்.

**முள்வாங்கி** - காலில் குத்திய முள்ளை எடுக்கப் பயன்படும் கருவி.

**முறி** - தேங்காயின் இரண்டாக உடைந்த பகுதி, தேங்காய் மூடி.

**முறிஞ்சிபோதல்** - பால் திரிந்து போகுதல்.

**முனி** - நுனி.

## மூ

**மூக்கறுப்பு** - அவமானம்.

**மூக்கறை**-குறைமூக்குள்ளவன்/ள்

**மூக்காந்தண்டு** - மூக்கின் எலும்புள்ள மேற்பகுதி.

**மூக்குத்திக்காய்** - கொடியில் காய்க்கும் காய் வகை.

**மூக்குபூறு-தல்** - மாட்டின் மூக்கில் கயிறு மாட்டத் துளையிடுதல்.

**மூக்காண்டி** - தொடர்ந்து இரண்டு குழந்தைகள் பிறந்து இறந்து போகும் நிலையில் மூன்றாவது பிறக்கும் குழந்தைக்கு மூக்குக் குத்திச் செம்பு வளையம் போடுவார்கள். அப்படிச் செம்பு வளையம் போட்டிருக்கும் ஆண்பிள்ளை.

**மூச்சுவிடநேரமில்லை** - ஓய்வில்லாத வேலை.

**மூசு** - கலப்புகள் நீக்கப்பட்ட சுத்தத் தங்கம்.

**மூஞ்சி** - முகம்.

**மூத்தகுடியா** - முதல் மனைவி.

**மூத்தவள்** - முதல் பெண்.

**மூதி** - வசைச்சொல்.

**மூப்பு** - முதுமை. வயதில் பெரிய.

**மூட்டை** - மூட்டைப்பூச்சி.

**மூட்டு** - பொருத்து.

**மூட்டம்** - வாழைக்காயைப் பழுக்க வைக்கும் முறை.

**மூடு** - செடி

**மூத்திரம்** - சிறுநீர்.

**மூலைக்குவைத்தல்** - முன்னோர் நினைவாகப் படையல் வைத்துப் பூசை செய்தல்.

**மூளி** - நகை எதுவும் அணியாத நிலை.

**மூணு** - மூன்று.

## மெ

**மொட** - பணமின்மையால் ஏற்படும் தடை.

**மெழுகு1** - எண்ணெய்ப் பிசுக் கினால் உண்டாகும் களிம்பு.

**மெழுகு2**- மாத்திரையும் அல் லாது லேகியமும் அல்லாத பிசு பிசுப்புத் தன்மை கொண்ட மருந்து.

**மௌாப்பழம்** - மிளகாய்ப்பழம்.

**மௌாவத்தல்** - மிளகாய்வத்தல், சிவப்புவத்தல்.

**மென்னி** - குரல்வளை.

**மெனக்கெடு-தல்** - வேறு வேலைகளை விட்டுவிட்டு ஒன்றில் சிரத்தை கொள்ளுதல்.

## மே

**மேக்கமாற** - மேற்கு நோக்கி.

**மேக்கால** - மேற்கு நோக்கி.

**மேக்கநிக்க** - மேற்கு நோக்கி.

**மேக்கூர்** - மேற்குத் திசையில் உள்ள ஊர்.

**மேச்சக்கால்** - ஆடு மாடு மேய்ந்து கொண்டிருக்கும்மிடம், மேய்ச்சல் நிலம்.

**மேசைஅடுப்பு** - தரைமட்டத் திலிருந்து இடுப்பளவு உயரத்தில் கட்டப்பட்டிருக்கும் அடுப்பு.

**மேலாக்கு** - பெண்கள் மார்பின் மேலிடும் சேலை.

**மேலாக்குல** - மேற்புறமாக, மேலாக.

**மேவு-தல்1** - நிரவி சமனாக் குதல்.

**மேவு-தல்2** - முடிவெடுக்கக் கலந்து பேசுதல்.

**மேழி** - கலப்பை.

**மேனி** - நிலத்தின் சராசரி விளைச் சல்.

**மேஸ்திரி1** - கொத்தனார்.

**மேஸ்திரி2** - தையல்காரர்.

## மை

**மைலக்காளை** - கருமை கலந்த வெள்ளை நிறக் காளை.

**மைனர் சுண்ணாம்பு** - வெற் றிலை போடப் பயன்படும் சாயம் ஏற்றப்பட்ட சுண்ணாம்பு.

**மைனர் செயின்** - இளம் வயதுக்காரர்கள் அணியும் சங்கிலி.

**மைனர்விளையாட்டு** - இளம் வயதில் புரியும் காதல் லீலை.

**மையம்** - பிணம்.

**மையவாடி** - இடுகாடு.

## மொ

**மொகப்பு** - கட்டடம் போன்ற வற்றின் முன் பகுதி.

**மொகரக்கட்டை** - முகம்.

**மொங்காங்கட்டை** - திமிசுக் கட்டை

**மொல** - முலை.

**மொளி** - எலும்புகளின் இணைவு.

**மொழுக்கை** - ஆபரணம் போன்றவற்றில் வேலைப் பாடற்று இருத்தல்.

## மோ

**மோக்கா** - நுகம்.

**மோட்டு ஓடு** - கூரை முகட்டில் வேயப்படும் ஓடு.

**மோத்திரம்** - சிறுநீர்.

**மோர்மிளகாய்** - மோரில் ஊற வைத்த பச்சை மிளகாய். முற்றாத மிளகாயை இரண்டாக வகுந்து, மோர், உப்புக் கரைசலில் ஊற வைத்து வெய்யிலில் உலர்த்தி எடுத்து வைத்துக்கொள்ள வேண் டும். தேவைப் படும்போது எண் ணெய்யில் பொரித்து வைத்து மோர்சாதம் தயிர்சாதம் போன்ற வற்றுடன் சேர்த்துச் சாப்பிடச் சுவையாய் இருக்கும்.

**மோரீஸ்** - வாழை வகை .

**மோரை** - முகம் .

**மோன்** - சிறுநீர்.

**மோளு-தல்** - சிறுநீர் கழித்தல்.

## ர

**ரசகுண்டு** - அலங்காரமாய்த் தொங்கவிடப்பட்டிருக்கும் ரசம் பூசிய கண்ணாடிக் குண்டு.

**ரசமட்டம்** - மட்டம் பார்க்கும் சாதனம்.

**ரங்கு** - தேநீர் கஷாயம்.

**ரப்பு** -திமிர்.

**ரயிலடி** - தொடர்வண்டி நிலையம்.

**ரவிக்கை** - சேலை உடுத்தும் பெண்கள் அணியும் மேல்சட்டை

## ரா

**ராக்கொடி** - பெண்கள் தலையில் அணியும் ஆபரண வகை.

**ராங்கி** - செருக்கு, கர்வம்.

**ராசி-யாதல்** - பகை தீர்ந்து சமாதானம் ஆகுதல்.

**ராட்டு 1**- ரங்கராட்டினம்.

**ராட்டு2**- நூல் நூற்கும் கருவி.

**ராட்டு3** - கப்பி, கிணற்றில் தண்ணீர் இறைக்கும் சாதனம்.

**ராந்தர்** - ஒருவகைக் கண்ணாடி விளக்கு.*lantern*.

**ராந்தர் தூண்** - தெரு விளக்கு வைக்கும் விளக்குத் தூண்.

**ராப்பகல்** - இரவு பகல்.

**ராப்பாடி** - நள்ளிரவு நேரத்தில் பாட்டுப் பாடிப் பிச்சை எடுக்கும் புரதவண்ணான்.

**ராயபுரி** - நாட்டுச் சர்க்கரை.

**ராலி** - லாரி, சுமையுந்து.

**ராவு** -இரவு.

## ரி

**ரிஸ்தர்** - பத்திரபதிவு.

## ரீ

**ரீதி** - முறை.

## ரு

**ருசு** - நிரூபணம், மெய்ப்பிப்பு.

**ருசுப்பி-த்தல்** - மெய்ப்பித்தல்.

**ருதுவாதல்** - பெண் பருவமடை தல்.

## ரூ

**ரூபி** - நிரூபி.

## ரெ

**ரெப்பை** - கண் இமை.

**ரெம்ப** - நிறைய.

## ரே

**ரேக்ளாவண்டி** - மாட்டுவண்டி , ஒருவர் மட்டுமே அமர்ந்து செல்லக் கூடிய பந்தயவண்டி.

## ரொ

**ரொக்கம்** - தயாராக இருக்கும் பணம்.

## ரோ

**ரோதனை** தொல்லை, தொந்தரவு.

**ரோதை** - சுண்ணாம்பு அரைக்கப் பயன்படும் மாடு இழுக்கும் செக்குப் போன்ற வட்ட அமைப்பு.

**ரோந்து** - இரவுக் காவல்.

## ல


**லங்கோடு** - ஆண்கள் அணியும் உள்ளாடை.

**லங்கணம்** - பட்டினி.

**லண்டன் சீனி** - வெள்ளைச் சர்க்கரை.

**லண்டன் பருத்தி** - பருத்தி வகை

**லத்தி** - யானை, குதிரை போன்ற விலங்குகளின் சாணம்.



ரேக்ளாவண்டி

**லத்தி** - பிரம்புக் கழி.

**லவணம்** - உப்பு.

**லஸ்கர்** - குளப் பராமரிப்புக்கான பொதுப்பணித்துறைப் பணியாளார்.

## லா

**லாடஞ்செம்பு** - வாய் சிறுத்த சின்னப் பித்தளைச் செம்பு.

**லாடம்** - மாடு குதிரை முதலியவற்றின் குளம்புகளில் அடிக்கும் இரும்புத் தகடு.

**லாடம் ஆசாரி** - லாடம் அடிக்கும் கொல்லாசாரி.

**லாடு** - லட்டு.

**லாத்து** - நடைத்தடுமாற்றம்.

**லாந்தர்** - ஒருவகைக் கண்ணாடி விளக்கு.

**லாந்தர் தூண்** - தெருவிளக்குத் தூண்.

**லாம்பெண்ணெய்** - மண்ணெண்ணெய்.

**லாயக்கு** - தகுதி.

## லெ

**லெக்கு** - திசை.

**லெச்சகெட்டக்கீரை** - ஒரு வகைக் கீரை

**லெச்சகெட்டு** - வெக்கம் கெட்டு.

## லோ

**லோட்டா** - தம்ளர்.

**லோல்படு-தல்** - திண்டாடுதல்.

**லோலாக்கு** - காதணி.

## வ

**வக்கத்தவன்** - ஏதும் வழியற்றவன்.

**வக்கா** - கொக்கு வகை.

**வக்கு** - வழி.

**வங்கி** - பெண்கள் கையில் அணியும் அணி வகை.

**வங்கிக்காரை** - கழுத்தில் அணியும் ஆபரண வகை.

**வங்கிநெளிவு** - விரலில் அணியும் நெளிவு வகை மோதிரம்.

**வங்கிவளையல்** - வளையல் வகை.

**வங்கு** - ஒரு வகைத் தோல்வியாதி.

**வச்சிரம்** - மரச்சட்டங்களை இணைக்கத் தச்சர் பயன்படுத்தும் பசை.

**வச்சூத்தி** - ஒடுக்கமான வாய் உள்ள பாத்திரத்தில் திரவப் பொருளை ஊற்றுவதற்கு உதவும் சாதனம், புனல்.

**வசக்கு-தல்** - வசப்படுத்துதல்.

**வட்டாக்கு** - பாண்டி விளையாட்டுக்குரிய ஓட்டாஞ் சில்லு.

**வட்டு** - கமலையின் வடக்கயிற்றை மேலும் கீழும் சுழற்றும் வட்ட வடிவக் கருவி, கப்பி.

**வடக்கத்தி** - வடமாநிலத்து.

**வடக்கநிக்க** -வடக்கு நோக்கி.

**வடம்** - பெரிய கயிறு.

**வடலி** - இளம்பனை.

**வடிகஞ்சி** - சோறும் நீரும் கலந்த சோறு வடித்த கஞ்சி.

**வண்டித்தடம்** - மாட்டுவண்டிகள் சென்று வருவதால் உருவாகும் பாதை.

**வண்டிப்பெரை** - மாட்டு வண்டியை நிறுத்திவைக்கும் இடம்.

**வண்டிமை** - மாட்டு வண்டி அச்சில் உராய்வைக் குறைப்பதற்காகப் போடப்படும் மசகு.

**வண்டுகட்டு-தல்** - பாத்திரத்தின் வாயைத் துணியால் மூடிக் கட்டுவது.

**வண்ணாங்காரம்** - துணி துவைக்கப் பயன்படுத்தும் வேதிப் பொருள்.

**வண்ணாங்குறி** - வெளுக்கும் ஆடையில் வண்ணார் இடும் அடையாளக் குறி.

**வண்ணாத்திப்பூச்சு** - வண்ணத் துப்பூச்சு.

**வண்ணாந்தாழி** - வண்ணார் அழுக்குத் துணிகளை வெள்ளாவியில் வேகவைக்க பயன்படுத்தும் பெரிய மண்பானை.

**வம்படியா** - பிடிவாதமாக.

**வயக்குண்டான்** - ஆறு மாத வயதுடைய நமது மரபு நெல் வகை.

**வயசுக்கு வந்துட்டா** - பூப் பெய்திவிட்டாள்.

**வயற்றளச்சல்** - வயிற்றோட்டம், இரத்தமும் சலமுமாய்க் கழிதல்.

**வர்மப்பிடி** - உடலில் உள்ள மருமப் புள்ளியின் ஒழுங்கு தன்மையில் குலைவு.

**வர்மம்** - உடலில் உள்ள மருமப் புள்ளி, உயிர் நிலை.

**வரவரிசி** - வரகு அரிசி.

**வரி** - ஊர் கோயிலின் கட்டாய நன் கொடை

**வரிஎழுதுதல்** - ஊர் கோயில் கொடைக்கு வரி நிர்ணயித்து முடிவு செய்தல்.

**வரிக்கழிவு** - ஊர் கோயில் கொடைக்கு வரி கொடுக்கும் உரிமை மறுக்கப்பட்டவன்.

**வரித்தடை** - கோயில் கொடைக்கு வரி எழுதிய பின் வெளியூர் செல்வதற்கு விதிக்கப்படும் தடை

**வரிபிளப்பு** - பத்திரங்களில் எழுதப்படும் வரிகளில் விடு பட்டுப்போன சொல், எழுத்து, எண் போன்றவற்றை வரிகளின் இடையே அம்புக்குறியிட்டு எழுதுவது. பத்திரத்தின் கடைசி வரிக்கு அடுத்த வரியில் வரிபிளப்பு எந்த வரியில் இருக்கிறது என்பதை அவசியம் குறிப்பிடுவர்.

**வருக்கத்து** - அதிர்ஷ்டம், யோகம், ராசியான.

**வருவித்தல்** - வரவைத்தல்.

**வருவு** - வரை.

**வருவுக்கட்டை** - தச்சர்கருவி.

**வல்லயம்** - சுடலை மாடசாமி யாடியின் கையில் உள்ள ஈட்டி.

**வல்லாட்டு** - கழுத்தைச் சுற்றித் தொங்கவிடும் துண்டு.

**வலசை** - இனப்பெருக்கத் திற்காகப் பறவைகள் கூட்டமாகத் தொலைதூர இடத்திற்குப் புலம் பெயர்தல்.

**வலத்தை** - வண்டியில் வலப் பக்கம் பூட்டும் மாடு.

**வள்ளிசா** - ஒன்றுவிடாமல், முழுவதுமாக.

**வளசல்** - வளாகம்.

**வளவு** - வளாகம்.

**வளையம்** - காதில் அணியும் அணி வகை.

**வழுக்கை** - இளநீரின் இளம் தேங்காய்ப் பருப்பு.


**வறுஓடு** - அவல், சோளம், நெல் போன்றவற்றை வறுக்கப் பயன் படும் மண்பானை.

## வா

**வாராங்கால்** - வயலுக்குத் தண்ணீர் பாயும் வாய்க்கால்.

**வாக்கு** - பக்கம்.

**வாக்கூடு** - கன்றுக்குட்டி மண் அல்லது உணவு அல்லாத மற்றவற்றைத் தின்னாமல் தடுக்க அதன் வாயின்மேல் போடப்படும் மூங்கிலாலான கூடு.



வாக்கூடு

**வாச்சி** - பனங்கம்பைச் செதுக்கப் பயன்படும் கோடரி போன்ற கருவி.

**வாசம்1** - இருப்பு.

**வாசம்2** - மணம்.

**வாசி** - வீதம்.

**வாட்டம்** - சாய்வு.

**வாடை1**- குளிர் காற்று.

**வாடை2** - வாசனை.

**வாணாளைவாங்கு-தல்** பெரும் தொந்தரவு செய்தல்.

**வாணியன்** - எண்ணெய்ச் செக்கு ஆட்டி எண்ணெய் வியாபாரம் செய்பவன்.

**வாதமடக்கி** - வாதநாராயண மரம்.

**வாபூட்டு** - பார்க்க: வாக்கூடு.

**வாமட**- வயல் வரப்பில் நீர் பாயும் வழி.

**வாய்க்கால்** - நீர் ஆதார வாயி லிருந்து கிளம்பும் நீர்த்தடம்.

**வாய்ச்சொல்** - எழுத்து மூலம் இல்லாமல் வாய்ச்சொல்லால் தரும் வாக்குறுதி.

**வாய்ப்பந்தல்** - பசப்பு சொல், ஆடம்பர வார்த்தை.

**வாய்ப்பேச்சு** - சொற்களால் சண்டையிட்டுக்கொள்வது.

**வாய்முகூர்த்தம்** - சொல்லைச் சொல்லிய வேளை.

**வாய்வளயம்** - பாத்திரம் முதலிய வற்றின் விளிம்பில் பற்ற வைத்திருக்கும் வளையம்.

**வாயாலெடு-த்தல்** - வாந்தி பண்ணுதல்.

**வார்ப்பு** - வாய் அகன்ற வட்ட மான பெரிய பாத்திரம்.

**வாரம்** - குத்தகைக்கு விடப்படும் நிலத்தின் மகசூல் பங்கு.

**வாராங்கால்** - வயலுக்குத் தண்ணீர் பாயும் வாய்க்கால்.

**வாரி** - கூரை முனையில் வைத்துக் கட்டும் குறுக்குக் கம்பு.

**வாரிகழிவு** - வீடு மற்றும் கட்டடத்தின் மழைநீர் விழக் கழித்து விடப்படும் மனை பகுதி.

**வாரிதண்ணி** - வீட்டுக்கூரையில் விழுந்து வழியும் மழைத் தண்ணீர்.

**வாரியபூசை** - பெருக்குமாற்றால் அடிக்கும் அடி.

**வாரியல்** - பெருக்குமாறு.

**வாருகால்** - மழை வெள்ள நீர் வடிய தெருவின் இரண்டு ஓரங்களிலும் அமைக்கப்பட்டிருக்கும் சிறிய வாய்க்கால்.

**வால்கரண்டி** - நீண்ட கைப்பிடி உள்ள கிண்ணம்.

**வாலு** - குறும்புக்காரப் பையன்

**வாழப்பூவிளக்கு** - ஒருவகைக் குத்துவிளக்கு.

## வி

**விசனம்** - துக்கம்.

**விட்டம்** - கூரைக் குறுக்குச்சட்டம்.

**விட்டை** - மிருகங்களின் கழிவு.

**விடல்** - சூறைத் தேங்காய்.

**விடலை1** - இளம் பிராயத்துப் பையன்.

**விடுதல்** - கணக்கு வழக்கில் விடுபட்டுப்போனது.

**விடு பூ** - உதிரிப்பூ.

**விதப்பாடு** - விளைநிலத்தின் பரப்பளவு.

**விரக்கடை** - விரல் அளவு.

**விரசல்** - வேகம்.

**விரஞ்சி** - விரைவாய்.

**விரியாப்பு** - களைப்பால் வரும் மயக்கம்.

**விருதா** - வீணாய், பயனற்ற.

**வில்வண்டி** - அதிர்வைத் தாங்கும் விதத்தில் வில் வடிவ இரும்புப் பட்டையின் மீது அமர்த்தி வைக்கப்பட்டிருக்கும் கூடுவண்டி. வெளியூர்ப் பயணத்திற்குப் பயன் படுவது.

**விலக்கு** - பிரிவுச் சாலை, கூட்டுச் சாலை.

**விலங்கடி** - கட்டில் கால்கள் விலகாமல் இருக்க இரு கால்களுக்கிடையேயும் குறுக்காக வைக்கப் பட்டிருக்கும் மரப் பட்டியல்.

**விளங்காடு** - புன்செய்க் காடு.

**விளார்** - பார்க்க: மிலார்.

## வீ

**வீங்கு-தல்** - ஒன்றைப் பெறுவதற்கு ஏங்குதல்.

**வீச்சம்** - துர்நாற்றம்.

**வீச்சருவா** - அரிவாள் வகை.

**வீசுக்கோல்** - வில்லுப்பாட்டில் நாணை அடிக்கும் கோல்.

**வீஞ்சுதல்** - வீம்புபிடித்தல்.

**வீட்டுக்கு விலக்கம்** - மாத விலக்கு.

**விண்தெண்டம்** - சிறிதும் பயனற்ற.

**வீணத்தனம்** - போக்கிரித்தனம்.

**வீணன்** - துன்மார்கன்.

**வீதிமிட்டாசி** - பச்சரசிமாவில் செய்து சீனிப் பாகு ஊற்றப்பட்ட இனிப்புப் பண்டம். திருவிழாக் காலங்களின் தெருவோரக் கடை

களில் கிடைப்பதால் இப்படி அழைக்கப்படுகிறது.

## வெ

**வெக்கை** - உஷ்ணம்.

**வெங்கப்பய** - கடும் வறுமையில் வாழ்பவன்.

**வெசர்ப்பு** - வேர்வை.

**வெஞ்சனம்** - சமைத்த காய்கறி வகை.

**வெட்டருவா** - கத்தி, சிறிய அரிவாள்.

**வெட்டிப்பய** - எதற்கும் பயனற்றவன்.

**வெட்டிப்பேச்சு** - பயனற்றப் பேச்சு.

**வெட்டிவேலை** - பயனற்ற காரியம்.

**வெட்டுப்பாக்கு** - கொட்டைப் பாக்கை ஆரஞ்சு சுளையைப் போலச் சிறு சிறு துண்டங்களாக வெட்டிச் சாயமேற்றிப் பதப்படுத்திய பாக்கு.

**வெட்டுரும்பு** - இரும்புக்கம்பி, தகடு போன்றவற்றை வெட்டப் பயன்படுத்தும் சிறிய இரும்பு உளி.

**வெட்டை** - திறந்த வெளி.

**வெண்டயக்கட்டு** - காலில் உண்டான காயத்திற்கு போடப் பட்டகட்டு.

**வெண்டையம்** - காலில் அணியும் அணி வகை.

**வெண்டவெண்டயா பேசு-தல்** - ஆபாசமான வார்த்தைகளால் கொச்சையாகப் பேசுதல்.

**வெத்தல கை மாறுதல்** - திருமணம் நிச்சயம் செய்து வெத்திலை கை மாற்றிக் கொள்ளுதல்.

**வெத்தலச்செல்லம்** - வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு வைக்கும் சிறிய பெட்டி.

**வெத்துவேட்டு** - செயல்திறன் இல்லாதவனின் வீராப்புப் பேச்சு.

**வெதப்பாடு** - பார்க்க: விதப்பாடு.

**வெந்தயக்களி** - வெந்தயம், உளுந்த மாவு, பச்சரிசி மாவு,, கருப்பட்டி, தேங்காய், ஏலம், சுக்கு கலந்து செய்யும் களி. இது உடல் சூட்டைக் குறைக்கும்.

**வெப்பு** - வெப்பம்.

**வெப்பிராளம்** - மனக்குழப்பம், மனப்.போராட்டம்.

**வெம்பரப்பு** - வெட்டவெளி.

**வெம்பா**- மூடுபனி.

**வெரயம்** - விரையம்,

**வெரவி** - கலந்து.

**வெராப்பா** - விறைப்பாக.

**வெருகு** - ஆண்பூனை.

**வெருவு-தல்** - மிரண்டு அஞ்சுதல்.

**வெள்ளந்தி** - வெகுளி, கபடமற்றவன்/ள்.

**வெள்ளப்பூடு** - உள்ளிப்பூண்டு.

**வெள்ளன** - அதிகாலை, விடியற்காலை.

**வெள்ளாவி** - வெளுக்கவேண்டிய உடைகளை நீராவியில் இடுதல்.

**வெள்ளாவி அடுப்பு** - சலவை செய்யும் அழுக்குத்துணிகளை அவிக்கப் பயன்படும் அடுப்பு.

வெள்ளைக்காவரைத்தட்டு - ஒற்றைத் தட்டு தராசு.

வெள்ளைவெளேர் - அதி வெண்மையாக.

வெள்ளோட்டம் - புதிதாய் வெட்டப்பட்ட கால்வாயில் தண்ணீரை ஓடவிட்டுச் சோதனை செய்வது. இந்தச் சொல் பின்னர்ப் புதிய வாகனங்கள், புதிய தொடர் வண்டி, பாதையில் ஓடும் தொடர் வண்டி என எல்லாவித சோதனை ஓட்டத்தையும் குறிப்பதாகி விட்டது.

வெளங்கமாட்ட - கெட்டழிவாய் என்று சாபமிடுதல்.

வெளம் - கோபம்.

வெளுத்தல் - சலவைசெய்தல்.

வெளுத்திருச்சு- மழை நின்று வானம் வெளுத்துவிட்டது.

வெளுத்துக்கட்டு-தல் - ஒன்றை மிக நன்றாகச் செய்தல்.

வெளுப்பு - சலவை செய்த துணி.

வெளேர் - வெள்ளை, வெண்மை.

வெறிச்சுருச்சி - மழை நின்று விட்டது.

வெறிச்சுன்னு - வெறுமையாய்.

வெறுவாக்கலம் கெட்ட மூதி - உபயோகமற்றவன்.

வென்னி - வெந்நீர், சுடுநீர்.

## வே

வேக்கு - வியர்கிறது.

வேக்குரு - வியர்வையினால் உண்டாகும் சிறு பரு.

வேசட்டை - வருத்தம், துக்கம்.

வேட்டு - வெடி

வேதக்கோவில் - கிறித்துவ ஆலயம்.

வேதுபிடி-த்தல் - மருந்துசரக்குகள் கலந்த நீரில் ஆவி பிடித்தல்.

வேப்பமுத்து - வேப்பங் கொட்டை.

வேனகட்டி - வேனில் காலத்தில் வெப்பத்தால் உடலில் உண்டாகும் கட்டி.

வேனாவெயில் - வேனல் நாள் வெயில், கோடைவெயில்.

## வை

வைக்கப்படப்பு - வைக்கோல் போர்.

வைக்கப்பிரி - வைகோலால் திரிக்கப்படும் கயிறு.

வைசூரி - பெரிய அம்மை.

வைப்பாட்டி - கூத்தியாள்.

வைப்பு - கூத்தி.

## ஜ

ஜல்காபெர - கழிப்பிடம்.

## ஜா

ஜாலர் - அலங்காரத் தொங்கல்.

# பழமொழிகள்

1. அஞ்சில் வளையாதது அம்பதுல வளையுமா?

2. அடி உதவுற மாதரி அண்ணன் தம்பி உதவமாட்டான்.

3. அடிமேல் அடி வச்சா அம்மியும் நகரும்.

4. அடுத்த வீட்டு நெய்யே எம் பொண்டாட்டி கையே.

5. அம்மை செத்தா அப்பன் சித்தப்பன்.

6. அரசமரத்த சுத்திட்டு வந்து அடிவயத்தத் தடவி பாத்தாளாம்.

7. அரைக் குடம் அலம்பி ஆடும், அவிசாரி அவுத்து ஆடுவாள்.

8. அலுத்து சலிச்சி அக்கா வீட்டுக்கு போனாளாம் அக்கா இழுத்து மச்சான் கிட்ட விட்டாளாம்.

9. அவசரத்துல அண்டாக்குள்ள கை நுழையாது.

10. அழுகுன வீட்டில இருந்தாலும் ஒழுகுற வீட்டுல இருக்க முடியாது.

11. அளவுக்கு மிஞ்சுனா அமிர்தமும் நஞ்சு.

12. அற்பனுக்கு வாழ்வு வந்தா அர்த்த ராத்திரில குடை பிடிப்பான்.

13. அறுக்கத் தெரியாதவன் இடுப்புல அம்பத்தெட்டு அருவாளாம்.

14. ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கலையா?

15. ஆகாத பொண்டாட்டி கைபட்டா குத்தம் கால் பட்டா குத்தம்.

16. ஆசை இருக்கு தாசில் பண்ண அதிர்ஷ்டம் இருக்கு கழுதை மேய்க்க.

17. ஆடு பகை குட்டி உறவா?

18. ஆடுற மாட்ட ஆடி கற பாடுற மாட்ட பாடி கற.

19. ஆத்துல போட்டாலும் அளந்து போடணும்.

20. ஆதாயம் இல்லாமலா செட்டி ஆத்தோட போவான்?

21. ஆடத்தெரியாத தேவடியா தெரு கோணல்னு சொன்னாளாம்.

22. ஆடிப் பட்டம் தேடி விதை.

23. ஆடு நனையுதேன்னு ஓநாய் அழுததாம்.

24. ஆடு மேச்சாலையும் ஆச்சு அண்ணனுக்குப் பொண்ணு பாத்தாலையும் ஆச்சு.

25. ஆடுன காலும் பாடுன வாயும் நிக்காது.
26. ஆத்துல ஓடுற தண்ணி அம்மா குடி ஆத்தா குடி.
27. ஆரிய கூத்தடினாலும் காரியத்தில கண்ணா இரு.
28. ஆழம் தெரியாம காலை விடாதே.
29. ஆறு நிறைய தண்ணி போனாலும் நாய் நக்கிதானே குடிக்கணும்.
30. ஆறுன கஞ்சி பழங்கஞ்சி.
31. ஆன அசஞ்சு தின்னும் வீடு அசையாம தின்னும்.
32. ஆன படுத்தாலும் குதிர மட்டம்தான்.
33. ஆனா அந்த மடம் ஆகாட்டி சந்தை மடம்.
34. இஞ்சி வாட்டம் மஞ்சளுல.
35. இருக்கிறவன் ஒழுங்கா இருந்தா செரைக்கிறவன் முறையா செரப்பான்.
36. இருந்தா நவாப் ஷா இல்லைன்னா பக்கிரி ஷா.
37. இழவுக்கு வந்தவங்கெல்லாம் தாலி அறுப்பாங்களா?
38. ஈழத்துல செக்காட இங்கிருந்து பதம் பார்ப்பேன்
39. ஈனவும் தெரியாது நக்கவும் தெரியாது.
40. உடம்பெல்லாம் எண்ணைய பூசிட்டு பொரண்டாலும் ஒட்டுற மண்ணுதானே ஒட்டும்.
41. உடையவன் இல்லேன்ன ஒரு முழம் கட்ட.
42. உண்டி பெருத்தா குண்டி பருக்கும்.
43. உல வாய மூட முடியும் ஊர் வாய மூட முடியுமா?
44. உழக்குக்குள்ள ஏது கிழக்கு மேக்கு.
45. உளப்புர மாடு ஊர் மாட்டக் கெடுத்ததாம்.
46. ஊசி தொண்ட ஊருணி வயறு.
47. ஊணுக்கு முந்து உழவுக்குப் பிந்து.
48. ஊமை கனவு கண்டா வெளில சொல்ல முடியுமா?
49. ஊமை ஊரை கெடுக்கும் பெரிச்சாளி வீட்டைக் கெடுக்கும்.
50. ஊமைங்க ஊருல திக்குவாயன் சண்ட பிரசண்டன்.
51. ஊருக்கு உத்தரவாதி ஊட்டுக்கு உதவாக்கரை.
52. ஊருக்கு சண்டியருதான் உள் வீட்டுல மண்டியிடுதான்.
53. ஊருக்கெல்லாம் உத்தரவாதி உள்வீட்டுக்கு சத்திரவாதி.
54. ஊருக்கெல்லாம் ஒரு வழின்னா உருப்படாதவனுக்கு வேற வழி.
55. ஊரு ரெண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.

56. எங்க அப்பன் குதிருக்குள்ள இல்ல.

57. எடுத்து எடுத்து வச்சாலும் இடிஞ்சி இடிஞ்சி விழுந்தா என்ன செய்ய?

58. எண்ணெயை தடவிட்டு மண்ணுல உருண்டாலும் ஒட்டுற மண்ணு தானே ஒட்டும்.

59. எரியுற கொள்ளியிலே எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி.

60. எழுதுனவன் ஏட்டக் கெடுத்தான் படிச்சவன் பாட்டக் கெடுத்தான்.

61. எள்ளுதான் எண்ணெய்க்கு காயுது எலிப்புழுக்கை ஏன் காயுது?

62. ஏட்டுச் சுரக்கா கறிக்கு உதவாது.

63. ஏட்டத் தூக்கி எறவாணத்துல சொருகு.

64. ஏழைக்கு ஏத்த எள்ளுருண்டை

65. ஏற்கனவே தெப்பலம் அதிலேயும் கர்ப்பிணி.

66. ஒடிச்சி வளக்காத முருங்கையும் அடிச்சி வளக்காத பிள்ளையும் உருப்படாது.

67. ஓங்கி வளந்தாலும் ஒதியமரம் உத்திரம் ஆகுமா?

68. ஓட்ட குழலு ஊத்து பறியுமா?

69. ஓடுற நாயை கண்டா துறத்துற நாய்க்குக் கொண்டாட்டம்.

70. ஓலப்பாயில நாய் மோண்ட மாதரி...

71. ஒரு பாட்டில் செண்ட ஒண்ணா ஊத்துனாலும் உள்ள இருக்குற நாத்தம் ஓடியா போகும்.

72. கக்குற பிள்ள தக்கும்.

73. கட்டிவச்ச சோறும் சொல்லிக் குடுத்த பாடமும் எத்தன நாளைக்கு?

74. கட்டுன பொண்டாட்டிக்கு கஞ்சி ஊத்த வழியில்லயாம் கொழும்பு சீல தாறேன்னு கொழுந்தியாவை கூப்பிட்டானாம்.

75. கண்டெடுத்தது காப்பணம் களவு கொடுத்தது முக்காப்பணம்.

76. கத்திரிக்கா முத்துனா சந்தைக்கு வந்துதானே ஆகணும்.

77. கருப்புக்கு நகை போட்டு அழகு பார் சிகப்புக்கு நகை போட்டு செருப்பால அடி.

78. கரைப்பார் கரைச்சாக் கல்லும் கரையும்.

79. கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாது.

80. கள்ளன் பெருசா காப்பான் பெருசா?

81. கள்ளன நம்பினாலும் குள்ளன நம்பாதே.

82. கள்ளிக்கு கண்ணு கழுத்துல.

83. கழுதவிட்ட கை நிறைய.

84. கழுத விட்டையில முன் விட்டை என்ன பின் விட்டை என்ன?

85. கள்ளப் புருசனுக்கு தொப்பாரம் கட்டிக் கொடுத்த மாதரி...

86. கறுப்பும் அழகே காந்தலும் ருசியே.

87. காக்கா குறிப்பறியும் கொக்கு 'டப்' அறியும்.

88. காக்காவுக்கு இருந்தா பறக்கையில தெரியாதா?

89. காஞ்ச மாடு கம்புல விழுந்த மாதரி...

90. காடியானாலும் மூடிக் குடி.

91. காடு வா வாங்குது வீடு போ போங்குது.

92. காணாதவன் காணத்த கண்ட மாதரி...

93. கால சுத்துன பாம்பு கடிக்காம விடாது.

94. கால தூக்குற நாய்க்கு செக்குன்னு தெரியுமா சிவலிங்கமுன்னு தெரியுமா?

95. கிட்டப் போனா முட்டப் பகை.

96. கிணத்துத் தண்ணிய வெள்ளமா கொண்டு போகப் போகுது.

97. கிளவி தண்ணிக்கு போனா உதவிக்கு போகுறது எட்டாளு.

98. கிளி போல பொண்ட்டாட்டி இருக்கைல குரங்கு மாதரி வைப்பாட்டி பாத்தானாம்.

99. கிழக்கே வயல் வாங்காதே மேக்கே கடன் கொடுக்காதே.

100. குசுவுக்குப் பயந்து கோட்டையை விட்டு போகலாமா?

101. குடிக்கது கஞ்சி கொப்பளிக்கது பன்னீரா?

102. குடுக்குற தெய்வம் கூரைய பிச்சிகிட்டு கொடுக்குமாம்.

103. குந்தித் தின்னா குன்றளவு தங்கமும் காணாம போகும்.

104. கும்பிடப் போன தெய்வம் குறுக்க வந்த மாதரி....

105. குரங்கு கையும் சிரங்கு கையும் சும்மா இருக்காது.

106. குருட்டுக் கோழி தவிட்ட விழுங்குன மாதரி...

107. குருட்டுப் பூனை விட்டத்துல பாஞ்ச மாதரி...

108. குலைக்கிற நாயி கடிக்காது.

109. குளத்துக் கிட்ட கோவிச்சிகிட்டு குண்டி கழுவாமப் போனா யாருக்கு நட்டம்?

110. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

111. குறவனுக்கு குறி குருவி.

112. கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன் தான் வானம் ஏறி வைகுண்டம் போகப் போறான்.

113. கூரெல சோறு ஊரெல்லாங் காக்கா.

114. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.

115. கூறுகெட்ட மாடு ஏழுகட்டு வைக்கத் தின்னுச்சாம்.

116. கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு.

117. கேப்பையில தேன் வடியுதுன்னா கேப்பாருக்கு மதி எங்க போச்சு?

118. கைப்புண்ணுக்கு கண்ணாடி எதுக்கு?

119. கொடுக்காத எடையன் செனை ஆட்ட காமிச்சானாம்.

120. கொடுத்து கெட்டவன் இல்ல கெட்டவன் கொடுத்தது இல்ல.

121. கொண்டாட்டமும் கும்மாளமும் பொண்டாட்டி வரும் மட்டுக்கும் தானே.

122. கோடி சொந்தம் இருந்தாலும் கொண்டவன் மாதரி வருமா?

123. கோடை வாட்டலும் வாடை ஆட்டலும் கொண்டவன் கூட இருந்தா குணம் மாறிப்போகும்.

124. கோவணம் பீ தாங்குமா?

125. கோழி மிதிச்சு குஞ்சுக்கு சேதமா?

126. சாத்திரம் பார்த்தால் மூத்திரம் போகாது.

127. சாட்சிக்காரன் காலுல விழுறதுக்கு சண்டைக்காரன் காலுல விழலாம்.

128. சாண் ஏறுனா முழம் சறுக்குது.

129. சாம்பல போட்டு தேய்ச்சாலும் புடுங்குற மயித்ததானே புடுங்க முடியும்.

130. சிறுநாய் பீதின்ன மாதரி...

131. சின்ன மீனு பெரிய மீனுக்கு இரை.

132. சுண்டைக்காய் காப்பணம் சுமைகூலி முக்காப்பணம்.

133. சுக்குக்கு மிஞ்சுன மருந்தும் இல்ல சுப்ரமணியசாமிக்கு மிஞ்சுன சாமியும் இல்ல.

134. சுவரு நாலானாலும் கூரை ஒன்னு தானே

135. சுள்ளிக்கு சும்மாடு கள்ளிக்கு கருவாடு.

136. செக்களவு தங்கம்ன்னாலும் செதுக்கித் தின்னா எத்தனை நாளக்கு?

137. செக்குமாடு ஊர் வழி போகாது செங்கமாலு தங்கக்கட்டி தாராது

138. செக்கு மாட்டுல செட்டி ஊருக்கு பொறப்பட்ட கதையாய்...

139. செத்தா தெரியும் செட்டியார் வாழ்வு.

140. செட்டி கப்பலுக்கு செந்தூரான் துணை.

141. செட்டி கெட்டா பட்டு.

142. செவிடன் காதுல ஊதுன சங்கு மாதரி..

143. சென்மபுத்தி செருப்பால அடிச்சாலும் போகாது.

144. சொக்கனுக்கு சோறு சட்டி அளவு

145. சொல்லிக் கொடுத்த பாடமும் கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளைக்கு?

146. தங்க ஊசிங்கிறதனால கண்ணுலயா குத்திக்க முடியும்?

147. தங்கத்தாம்பாளம் தான்... தானே பசியாத்துமா?

148. தடி எடுத்தவன் தண்டல்காரன்.

149. தடுக்குன கல்லு தானா தடுக்குமா?

150. தண்ணிக்குள்ள குசு விட்டா தெரியாமலா போகும்.

151. தல வலியும் வயத்து வலியும் தனக்கு வந்தாதான் தெரியும்.

152. தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு.

153. தா பொன்னுலயும் மா பொன்னு பார்ப்பான் தட்டான்.

154. தாய் வீட்டுக்குப் போனாலும் தன்னப் பேணிப் போ.

155. தாயறியாத சூலா?

156. தாயும் பிள்ளையும் ஒண்ணுனாலும் வாயும் வயிறும் வேற தான.

157. தாய கழிச்சாலும் தண்ணிய கழிக்காதே.

158. தாய போல பிள்ள நூலப் போல சேல.

159. தான் கள்ளி அசலாரை நம்பாது.

160. தூக்கலாம் தெளிக்கலாம் துப்பக்கூடாதா?

161. தொட்டில் பழக்கம் சுடுகாட்டு மட்டும்.

162. தேங்கா சிறுசானாலும் தென்னை பெருசுல்ல.

163. தேரோடு போச்சு திருநாளு தாயோடு போச்சு பிறந்த வீடு

164. நண்டு கொழுத்தா வளயில தங்காது.

165. நரிக்கி அம்பலம் குடுத்தா கெடைக்கி ரெண்டு ஆடு கேக்குமாம்.

166. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நல்பொண்டாட்டிக்கு ஒரு சொல்லு.

167. நாய்க்கு வேலையும் இல்ல உக்கார நேரமும் இல்ல.

168. நாய் வேசம் போட்டா குரைச்சிதானே ஆகணும்.

169. நாய குளிப்பாட்டி நடு வீட்டுல வச்சாலும் அது வால ஆட்டிகிட்டு பிள்ள பீயில வாய வைக்கும்.

170. நாயை அடிப்பானே பீயை செமப்பனே.

171. நித்தம் குசுவுக்கு வெக்கமில்ல

172. நீஞ்ச தெரியாத மாடு தண்ணியோடு போகும்.

173. நெருப்பில்லாம புகையாது.

174. நெருப்புன்னு சொன்னா வாய் வெந்தா போகும்?

175. நொண்டிக் குதிரைக்கு சறுக்குனது சாக்கு.

176. நோய்க்கும் பாரு பேய்க்கும் பாரு.

177. பகலிலே பக்கம் பாத்து பேசு ராத்திரில அதுவும் பேசாதே.

178. பகலிலே பசு மாடு தெரியாது ராத்திரியில எருமைமாடா தெரியப் போகுது.

179. பங்கா இழுக்குறது பத்தாளு படுத்து உறங்குறது ஒத்தாளு.

180. பசி ருசி அறியாது தூக்கம் சுகமறியாது.

181. பசி வந்தா பத்தும் பறந்து போகும்.

182. பஞ்சுப் பொதினாலும் நெஞ்சில விழுந்தா வலிக்காதா?

183. பட்டி போட்ட ஆடு புளுக்க போட்டுதானே ஆகணும்.

184. படப்போட திங்கிற மாட்டுக்கு பிடிங்கி போட்டா ஆத்துமா?

185. பண்டும் செத்தாதானே சுடுகாடு தெரியும்.

186. பத்து விரலுக்கு உழச்சாதான் அஞ்சு விரலுக்கு திங்கமுடியும்.

187. பிச்ச எடுக்குமாம் பெருமாளு அத பிடுங்குமாம் அனுமாரு.

188. பிள்ளக்காரிக்கு வேல சாக்கு.

189. பிள்ள தான் பெருசு பீயுமா...?

190. பூடம் தெரியாமலா சாமி வருது?

191. பெட்டக் கோழி தட்டிக் கூவுமா?

192. பேயடிச்சு பிள்ள பிழைக்கவா?

193. பொண்டாட்டி செத்தா புது மாப்பிள்ள.

194. மயிரு சுட்டு கரியாகுமா?

195. மயிருள்ள சீமாட்டி அள்ளி முடிக்கிறாள்.

196. மரடிச்சக் கூலி மடிமேல. மாரடிச்ச கூலி மடியிலே

197. மலை வாயில பொழுது மடையங் கையில சோறு.

198. மாதாவுக்கே சுகமில்ல கர்ப்பத்துக்கு என்ன கவலை?

199. மாமியார் ஒடச்சா மண்குடம் மருமகள் ஒடச்சா பொன்குடம்.

200. முட்டுற மாட்டுக்கு கொம்பு சீவி விட்ட மாதரி...

201. முட்டை இடுற கோழிக்கு தானே பிட்டி வலி தெரியும்.

202. முன்னேரு போன வழி தானே பின்னேரு போகும்.

203. மூடி வச்சாலும் முல்லை இல்லைன்னு போகுமா?

204. மூதேவி பேர சொன்னா முடுக்கெல்லாம் பீ நாத்தம்.

205. மொச பிடிக்கிற நாய மூஞ்சிய பாத்த தெரியாதா?

206. மேலுதடு இல்லாதவன் சீங்குழலுக்கு அச்சாரம் வாங்குவானேன்?

207. மோளுற நாய்க்குத் தெரியுமா செக்கு எது சிவலிங்கம் எதுன்னு.

208. யானைக்கு சிறு தூசு எறும்புக்கு பெருந்தீனி.

209. லோபிக்கு ரெட்ட செலவு.

210. வக்க வழி இல்லைனாலும் நக்க நாக்கிருக்கே.

211. வச்சாக் குடுமி செரச்சா மொட்ட.

212. வம்பஞ் சொத்து வீணன் கையில.

213. வம்புக்காரனுக்கு வழி எல்லாம் வாய்க்கால்.

214. வல்லவன் பம்பரம் மண்ணுலேயும் ஆடும்.

215. வல்லான் வகுத்ததே வாய்க்கால்.

216. வனத்துல மேய்ச்சி இனத்துல சேரு.

217. வாக்கப்பட்டவளுக்கு கஞ்சி ஊத்த வழிய காணோம் வைப்பாட்டி கனவுக்கு குறைச்சலில்ல.

218. வானமும் பூமியும் வாரிக் கொடுத்தா தானமும் தருமமும் தானே மறையும்.

219. விருதா மாடு தொழுவுக்கு கேடு வெட்டி மகனோ வீட்டுக்குக் கேடு.

220. வில்லடிச்சாங் கோவிலிலே விளக்கு வக்க நேரமில்லை.

221. வில்லைக்கு பின்னே வெள்ளாடு வாயை பிதுக்கிட்டு போற மாதரி...

222. விளக்குல எண்ணய வழிய ஊத்துனாலும் பொருத்துனா தானே எரியும்.

223. வீட்டுக்கு அடங்காதது ஊருக்கு அடங்கும்.

224. வெட்டுன கைக்கு சுண்ணாம்பு கூட தரமாட்டான்.

225. வெள்ள வேட்டி மைனராட்டம் வீட்டுல பாத்தா திண்டாட்டம்.

226. வெளியே வெட்டருவா மீசை உள்ளுக்குள்ள அடியே சரணம்.

227. வேலையத்த நாசுவன் கோழிமுட்டையை செரச்சானாம்.

228. வைத்தியனுக்கு கொடுக்கிறத வாணியனுக்கு கொடு.



ISBN 978-81-8764-150-6
9 788187 641506

தமிழினி